# தமிழ் இசுலாம் உருவாக்கமும் திருக்குர்ஆன் தமிழ் வாசிப்பும்

(ஆய்வியல் சிந்தனை)

எச். ஹாமீம் முஸ்தபா

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# தமிழ் இசுலாம் உருவாக்கமும் திருகுர்ஆன் தமிழ்வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை

திரு. ஹாமீம் முஸ்தபா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

சதாவதானி செய்குத்தம்பி அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : சதாவதானி பாவலர் நினைவு விழாக்குழு
வரிசை எண் : 3

---

## BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | Tamil isulām uruvākkamum tirukurān tamil vācippum |
| Author | : | Mr. Mustafa<br>Journalist, Chennai |
| General Editor | : | Dr. M. Valarmathy<br>Associate Professor<br>Faculty of Overseas Tamils<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 726 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2011 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | 96 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 45/- (Rupees Forty five Only) |
| Printed by | : | Paavai Printers<br>New No. 16, Jani Jan Khan Road<br>Royapettah, Chennai - 600 014. |
| Subject | : | Bakti Literature |



---

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

*பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்*
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

கி.பி. **15**ஆம் நூற்றாண்டு வாக்கில் தமிழை முறையே கற்றுக்கொண்ட சமயப் பெரியோர்கள் பலர் பல படைப்புகளைச் செய்யத் தொடங்கினர். இவர்கள் தமிழ் மக்களிடையே அடையாளங் காணப்பட்டனர். அவ்வரிசையின் தொடர்ச்சியாக தக்கலை பீர் அப்பா, கோட்டாறு ஞானியார் சாகிபு, உமறுப் புலவர், ஆலிப்புலவர், குணங்குடி மஸ்தான் சாகிபு எனப் பலர் உருவாயினர். இவர்கள் **தமிழிசுலாம்** எனும் கருத்தியலை முன்வைத்துத் தமிழ்மொழி பண்பாடு சார்ந்து இவர்தம் படைப்புக்களும் இருந்தன. குறிப்பாக திருக்குர்ஆன் மொழிபெயர்ப்புப் பணி (அப்பா ஞானியார்) அரபு மொழியிலிருந்து தமிழ்மொழிக்கு மொழிபெயர்க்கும்போது தமிழ் மரபுவழி நின்று செய்திருந்தனர்.

அஞ்சுவன்னம் எனும் சொல் இன்றைய நிலையில் முசுலீம்களின் வாழிடங்களில் ஒன்றைக் குறிப்பிடுகிறது. அஞ்சுமன் என்னும் பாரசீகச் சொல்லிலிருந்து வந்தது தான் அஞ்சுவன்னம் என்கிறார். கு.வை. சதாசிவ பண்டாரத்தார். அஞ்சுமன் எனும் சொல்லுக்கு மன்றம், சாத்து, குழு, சபை என்ற பொருள்கள் இருக்கின்றன. ஆய்வாளர்கள் பலரும் அஞ்சுமன் என்னும் பாரசீகச் சொல்லுடன் அஞ்சுவன்னத்தை இணைக்கின்றனர். தொடக்க நிலையில் தமிழகத்தில் அரபுகளின் குடியிருப்பாக இருந்த யவனச் சேரிகளே பின்னர் நத்தம், நத்தக்காடுகளாகி கல்வெட்டுகளில் அஞ்சுவன்னம் ஆயிற்று என்கிறார் எஸ்.எம். கமால். அஞ்சுவன்னம், அஞ்சுவண்ணம் என்று இரண்டு விதமாகவும் இது உச்சரிக்கப்படுகிறது.

தமிழ் இலக்கிய உலகுக்குப் புதிய வரவாக இசுலாமிய இலக்கிய வரலாற்றில் புதிய சிந்தனையைத் தரும் தமிழிசுலாம் எனும் கருத்தியலை முன்வைத்துப் பேசும் இந்நூல் இசுலாமிய இலக்கியவாதிகளுக்கு மட்டுமல்ல தமிழ் இலக்கிய உலகிலும் புதிய தடம் அமைத்துத் தரும் என்பதில் ஐயமில்லை.

சமணம், பௌத்தம் மதங்கள் வணிகச் சமூகப் பின்புலத்தோடு வளரத் தலைப்பட்டன. நகரங்கள் வணிகர்கள் உள்ள பகுதிகளில் சமணம், அமணம் எனும் ஆசீவகம் பௌத்தம் போன்ற மதங்கள் வளர்ந்தனர். வணிகன் குழுக்களைக் குறிப்பிடும் சொல்லாகவே அஞ்சுவன்னம் இருந்திருக்க வேண்டும் வேற்று நிலங்களிலிருந்து புலம்பெயர்ந்து இந்த மண்ணில் வாழ்ந்துவரும் மக்களை அழைக்கப் பொதுவான சொல்லாக அஞ்சுவன்னம் இருந்திருக்கலாம் எனக் கூறும் இந்த நூலாசிரியரின் ஆய்வுத்திறன் குறிப்பிடத்தகுந்ததாக அமைகிறது.

தமிழகத்தில் முசுலீம்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த இடங்களுக்கெல்லாம் அஞ்சுவன்னம் என்ற பெயர் இல்லை. பல இடங்களில் நெசவுத் தொழில் நடைபெற்ற முசுலீம் குடியிருப்புகள் பாவோடி என்றும் அழைக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம், மானாமதுரை போன்ற வட்டாரங்களில் பாவோடிகள் அதிகம் இருந்திருக்கின்றன.

பீர்அப்பாவை நாம் அறிந்து கொள்ள நூலாசிரியர் தரும் தமிழ் அடையாளம் பின்வருமாறு அமைகிறது.

> தமிழ் இலக்கிய மரபில் பதினெண்சித்தர்களின் பாடல்கள் எனத் தொகுக்கப்பட்டுள்ள பெரிய ஞானக் கோவையில் பீர்அப்பாவின் ஞானரத்தினக் குறவஞ்சி இடம்பெற்றிருக்கிறது (ப. 43)

ஞானியார் அப்பா மெய்ஞ்ஞானத் திருப்பாடற்றிரட்டு எனும் பெயரில் வெளிவந்துள்ளது. விருத்தப்பா வகைகள், வெண்பா வகைகள், கலிப்பா வகைகள், தாழிசை, கொச்சகம், பிள்ளைத்தமிழ், கும்மி, சிந்து போன்ற பல பா வகைகளில் பாடப்பட்டுள்ளன.

ஞானியார் மரபின் அனைத்து நிகழ்வுகளும் ஹாமீம் என்னும் முத்திரைச் சொல்லுடன் தான் தொடங்குவதாலோ என்னவோ இந்நூலாசிரியர் தோழர் முஸ்தபா அவர்களின் பெயரும் ஹாமீம் என்றே தொடங்குகிறது.

தமிழிசுலாம் எனும் கருத்தியலை முன் வைத்து செயற்பட்டுள்ளமை அயோத்திதாசுப் பண்டிதர் பௌத்தத்தைத் தமிழ் பௌத்தம் எனக் கட்டமைத்திருந்தமையே நினைவுப்படுத்துகிறது.

சில இடங்களில் ஒற்றெழுத்துக்கள் தவிர்க்கப்பட்டிருந்தால் கூடுதல் பாராட்டுக்கு இந்நூலாசிரியர் ஆளாகியிருப்பார். எனினும் இவரது இயல் வைப்பு முறை மற்றும் எழுதியுள்ள தர்க்க முறைமைகள் ஆய்வு மாணவர்களுக்குத் துணை செய்யக் கூடியதாக அமைகின்றன.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **இந்து சமய அறநிலையம் மற்றும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு சுப. சண்முகநாதன்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு. து.நா. இராமநாதன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் அனைவருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த பாவை அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகள்.

**இயக்குநர்**

## ஆசிரியர் குறிப்பு . .



பெயர்: எச். ஹாமீம் முஸ்தபா

ஊர் : கன்னியாக்குமரி மாவட்டம், தக்கலை

இவர் தமிழிலக்கிய மாணவர். இவர் தாமரை இலக்கிய இதழில் இணையாசிரியராக பணிபுரிகிறார். ஊருநேச்சை என்ற தலைப்பிலான கவிதை நூலை இயற்றியுள்ளார். சங்க இலக்கியம் பொது அறிவுக்களஞ்சியம் என்ற உரை நூலினை தந்துள்ளார். மேலும் சூஃபிகள் தர்ஹாக்கள் மாற்று உரையாடல்கள் என்ற தொகுப்பு நூலையும் வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் மாநிலத் துணை பொதுச் செயலாளராகப் பணியாற்றுகின்றார். பண்பாட்டுத் தளத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றார். குறிப்பாக பண்பாட்டு இசுலாம் குறித்த ஆய்வுகளில் ஆர்வம் காட்டி வருகிறார்.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தமிழ் இசுலாம் | 7 |
| திருக்குர்ஆன் | 18 |
| இஸ்லாம் – குமரி மாவட்டம் | 25 |
| அஞ்சுவன்னம் | 30 |
| பீர்முஹம்மது அப்பா | 41 |
| ஞானியார் அப்பா | 51 |
| ஜோடிப்பாட்டு | 57 |
| அல்ஃபாத்திஹா தமிழாக்கம் | 65 |
| பின்னிணைப்பு : ஞானியார் பாடல் | 77 |
| துணைநின்ற நூல்கள் | 93 |

# தமிழ் இசுலாம்

தமிழ்ச் சமூகம் அறிந்து வைத்திருக்கிற இசுலாமிய இலக்கியங்களில் முதன்மையானது சீறாப்புராணம். உமறுப்புலவர் எழுதியது. இவ்விலக்கியம் உருவானது குறித்த வாய்மொழி மரபு ஒன்றிருக்கிறது.

வள்ளல் சீதக்காதி உமறுப்புலவரிடம் முஹம்மது நபிகளின் வரலாற்றைத் தமிழில் கவிதை வடிவில் எழுதிடுமாறு வேண்டுகோள் வைக்கிறார். ''நபிகளின் வாழ்க்கை வரலாறு முழுவதும் தெரியாது'' என்று தன்னுடைய இயலாமையைத் தெரிவிக்கிறார் உமறுப்புலவர். ''நீங்கள் கீழக்கரை சென்று ஆலிம் சதகத்துல்லாவை சந்தியுங்கள். அவர் உங்களுக்குச் சொல்லித் தருவார்'' என்று உமறுப்புலவரிடம் சீதக்காதி கூறுகிறார்.

அதனடிப்படையில் சதக்கத்துல்லாஆலிமை சந்திக்கிறார் உமறுப்புலவர். உமறுப்புலவரின் தோற்றம், ''மரபான'' இஸ்லாமிய முறையில் இல்லாததைக் கண்ட சதக்கத்துல்லா ஆலிமவர்கள், (புலவர் சரிகையிலான முறுக்குத் தலைப் பாகையும், தாடியின்றி கிர்தா மீசையும், நகங்களில் மருதாணியும் பூசியிருந்ததாக அப்துல் றஹீம் தன்னுடைய முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள் நூலில் குறிப்பிடுகிறார்), நபிகளின் வரலாற்றை உமறுப் புலவருக்குச் சொல்லிக் கொடுக்க மறுத்து விடுகிறார் சதக். நபிகள், சதக்கின் கனவில் வந்து உமருக்கு உதவும்படி கூற அதன் பிறகு, சொல்லிக் கொடுத்தார் என்று அந்த வாய் மொழி மரபு குறிப்பிடுகிறது.

இந்த வாய்மொழி மரபில் வெளிப்பட்டு நிற்கும் செய்தி உமறுப்புலவரின் தோற்றம் பற்றிய செய்தி. உமறுப்புலவர், மரபான முஸ்லிம் அடையாளத்துடன் இல்லாதது சதக்கத்துல்லா ஆலிமை சிக்கல்படுத்துகிறது.

இதுபோன்ற ஒரு எதிரிடல் அலாவுதீன் கில்ஜியின் படைத் தளபதியாக மதுரைக்கு வந்த மாலிக்கபூருக்கும் ஏற்படுகிறது. கி.பி. 1311-ல் மாலிக்கபூர் மதுரைக்கு அனுப்பி வைக்கப்படுகிறார். அப்போது சுந்தரபாண்டியன் மதுரையை ஆண்டு கொண்டிருந்தார்.

மதுரைக்கு வந்த மாலிக்கபூரின் ஆச்சரியம்! அங்கு, அதற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தது. அவர்களின் தோற்றம், மரபான முஸ்லீம் தோற்றத்தில் இல்லை. ஆனால் சமய நடவடிக்கைகளில் இசுலாம் பின்பற்றப்பட்டது.

இசுலாமியப் புலவர் ஒருவர் பின்வருமாறு பாடுகிறார்,

''பாங்கு சொல மோதினில்லை ;

வந்து தொழ லெப்பையில்லை

ஓங்கு ஜமாத் தெல்லாம் உழப்போனார் - பாங்குடனே

எக்குளத்துக் கொக்கும் இகலிவந்து முட்டையிடும்

முக்குளத்துப் பள்ளி முகப்பில்''

பாடல் தரும் குறிப்பு இதுதான், ஒருநாள் புலவர் கேரளா நோக்கி சென்றார். போகிற வழியில் முக்குளம் என்னும் ஊரில் பள்ளிவாசல் ஒன்றில் இளைப்பாறத் தங்கினார். அந்தப்பள்ளி வாசலில் நண்பகல் நேரத் தொழுகைக்கோ, மாலை நேரத் தொழுகைக்கோ யாருமே வரவில்லை. தொழுகை அழைப்பான பாங்கினைச் சொல்ல மோதினாரும் இல்லை. மாலையில் சூரியன் மறையும் போது வயதானப் பெரியவர் ஒருவர் வந்தார். அவரிடம் ''பள்ளிவாசலுக்கு யாரும் வரவில்லையே, என்ன காரணம்?'' என்று கேட்டார் புலவர். அதற்கு அந்தப் பெரியவர் ''இங்குள்ள மக்கள் அனைவரும் விவசாயத் தொழிலாளர்கள். அவர்கள் அதிகாலையில் வயல் வேலைக்குச் சென்றால் மாலையில்தான் வீடு திரும்புவார்கள். அதன் பிறகுதான் பள்ளிவாசலுக்கு வருவார்கள்'' என்று கூறினார்.

இசுலாம் உலகம் முழுவதும் பரவிய சமயம். இசுலாம் பரவிய வட்டாரங்களில் கூறுகளைத் தன்னுள் உள்வாங்கி அந்தந்த வட்டாரங்களில் தன்னை நிலை நிறுத்தியது. இசுலாமியத் திருமணச் சட்டம், பால்குடி சகோதர உறவுகளைத் தவிர பிற சகோதர உறவுகளுக்குள் திருமணம் நடைபெறுவதை ஏற்றுக் கொள்கிறது. சட்டரீதியான அனுமதியை இசுலாம் வழங்கியிருந்தாலும் தமிழிசுலாமிய மரபில் இந்த வழக்கம் மிகமிக அரிதாகவே நடைபெறுகிறது. இன்னும் கூடுதலாக,

தந்தை வழி உறவுகளையும், தாய்வழி உறவுகளையும் குறிப்பிட ஒன்றுக்கும் மேற்பட்ட உறவுச் சொற்களை தமிழ் முஸ்லிம்கள் வழக்கில் வைத்துள்ளார்கள். பெரியம்மா, பெரியப்பா, மூத்தும்மா, மூத்தாப்பா, நல்லம்மா, நல்லாப்பா, பெரியத்தா, குட்டிம்மா, குட்டியாப்பா, சாச்சி, சாச்சா, சின்னம்மா, சின்னப்பா, காலம்மா சின்னத்தா போன்ற பல சொற்கள் வழக்கிலிருக்கின்றன.

தமிழகத்தின் முதல் தொழுகைப்பள்ளி கி.பி. 754-ல் (ஹிஜிரி 116) உருவாகிவிட்டது. ஹாஜி அப்துல்லா பின் முஹம்மது அன்வர் என்பவரால் கட்டப்பட்ட பள்ளி. திருச்சி மெயின் காட் கேட்டிலிருந்து உறையூர் செல்லும் பாதையில் ரயில்வே மேம்பாலத்தின் எதிரில் அமைந்திருக்கிறது. முஸ்லிம்கள் இதை கல்லுப்பள்ளி என்றழைப்பதாக ஆய்வறிஞர் கே.பி.எஸ்.ஹமீது குறிப்பிடுகிறார். இப்பள்ளிவாசல் அமைந்திருக்கும் உறையூர் சோழர்களின் முக்கிய நகர். இதன் காலத்தை 15 -16 நூற்றாண்டு காலத்திற்கு கொண்டு செல்லும் கருத்தும் இருக்கிறது.

முஹம்மது நபி அவர்களின் மறைவிலிருந்து ஒரு நூற்றாண்டு காலத்திற்குள் இந்தப் பள்ளிவாசல் உருவாகியிருக்கிறது என்றும் முப்பது பேர் தொழுகின்ற அளவுக்கு இடவசதியுடன் இருந்தது என்பதும் இங்கு கவனத்திற்குரியது. ஓரளவுக்கு நிலைபெற்ற முஸ்லிம் குடியிருப்புகள் இங்கே தோன்றத் தொடங்கியிருந்ததையே இப்பள்ளி வாசல் குறித்தச் செய்திகள் நமக்குப் புலப்படுத்துகின்றன.

திருச்சியில் இப்பள்ளிவாசல் உருவாவதற்கு முன்பாகவோ அல்லது பிறகோ தற்போதைய கேரளமாநிலம் கொடுநல்லூரில் (இரணாகுளம் மாவட்டம்) பள்ளிவாசல் ஒன்று உருவானது. மாலிக் இப்னுதீனார் கட்டியது இது. இப்பள்ளிவாசல் கட்டப்பட்டது கி.பி. 642 என்றும், கி.பி. 825 என்றும் இரு கருத்துக்கள் நிலவுகின்றன. இப்பள்ளிவாசல் உருவான காலத்தில் இந்தப்பகுதி சேரநாடாக இருந்தது.

நபிகளின் காலத்திலும், அதற்கு பின்பும் பல்வேறு பகுதிகளிலிருந்தும் முஸ்லிம்கள் குழுவாகவும், தனியாகவும், தமிழகத்திற்கு வருகை தந்தனர். சென்னையை அடுத்துள்ள கோவளத்திலும்,

பரங்கிப்பேட்டையிலும் அமைந்துள்ள தமீம் உல் அன்சாரி, உக்காசா ஆகியோர் இந்த வரிசையில் முன்னோடிகள்.

கி.பி. 875-ல் எகிப்து நாட்டிலிருந்து ஒரு குழுவினர் தமிழகத்திற்கு அடைக்கலம் தேடி வந்தனர். அந்தக்குழுவில் பல்வேறு கிளைக்குழுக்கள் இருந்தன. ஆதீம் வம்சத்தார், பக்கிரி வம்சத்தார், பாரூக் வம்சத்தார், உமையா வம்சத்தார் என்று அவர்கள் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். மொத்தம் 234 பேர் ஆண்களும், பெண்களுமாக அக்குழுவில் இருந்தனர் என்று தெரிகிறது. இவர்களை சுந்தரபாண்டியத் தேவர் ஆதரித்ததாகவும் தெரிகிறது. இவர்களுக்கு குடியிருக்க வழங்கப்பட்ட இடமே தற்போதைய காயற்பட்டினம் என்றும். இதற்காக அரசன் தாமிரப்பட்டயம் வழங்கியதும் தெரிகிறது.

கி.பி. 1050-ல் ஒரு குழு, கி.பி. 1210-ல் ஹஜ்ரத் அலியுதீன் தலைமையில் மற்றொரு குழுவும், மதுரைக்கு வந்தன. 17 பேர் கொண்ட குழுவுடன் மாலிக் இப்னுதீனார் சேரநாட்டின் கொடுங்கலூர் வந்தது கி.பி. 825 என்று தெரிகிறது.

பல்வேறு முசுலிம் சமயப்பணியாளர் இந்தக் காலகட்டத்தில் தமிழகத்திற்கு வருகை தந்தார்கள். அரசு நிர்வாகத்திலும், படைத்தொழிலும், சமயம் பரப்பும் பணியிலும் ஈடுபட்டனர்.

திருச்சியில் நத்தர்ஷா (10-ம் நூற்றாண்டு) நாகூரில் ஷாகுல் ஹமீது நாயகம் (15-ம் நூற்றாண்டு) என்று நாம் இந்தக்கால எல்லையை வரையறுக்கலாம். நபிகளின் காலத்திலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டின் நிறைவுப்பகுதிவரை உள்ள காலம் தமிழ்ச்சூழலுக்கு வெளியிலிருந்து வந்து, தமிழகத்தில் வாழ்ந்து, சமயம் பரப்பிய இறைநேசர்கள் எனப்படுவர்களின் காலமாக இருந்தது.

இசுலாம் தமிழகத்தில் அறிமுகமான காலகட்டத்தில் தமிழகத்தின் சமயப்பரப்பு கடுமையான மோதல்களையும் நெருக்கடிகளையும் சந்தித்து வந்தது. சமண, பௌத்த சமயங்களின் வீழ்ச்சியும், சைவ வைணவத்தின் எழுச்சியும் நிகழ்ந்து கொண்டிருந்தது. இந்த சமயமோதல்களின் நடுவில் இசுலாத்தின் வருகை நிகழ்கிறது. சமய மோதல்களின் ஊடாக வைதீக எதிர்ப்பு வைதீக ஆதரவு, சாதி எதிர்ப்பு, சாதி ஆதரவு, வருணாசரம எதிர்ப்பு

வருணாசரம ஆதரவு, புரோகித எதிர்ப்பு, புரோகித ஆதரவு, பார்ப்பன எதிர்ப்பு பார்ப்பன ஆதரவு என்பவைகளும் தொழிற்பட்டு நின்றன.

வைதீக எதிர்ப்பை, வர்ண எதிர்ப்பை, சாதிப்படி நிலை எதிர்ப்பை, பார்ப்பன எதிர்ப்பை, வேள்வி எதிர்ப்பை தீவிரப்படுத்திய பௌத்த சமணத்தை வீழ்த்தி, சைவமும் வைணவமும் எழுச்சி பெற்று நின்றன.

இசுலாம் கருத்தியல் நிலையில், சாதிப்படி நிலைகளை, வர்ண அடுக்குகளை ஏற்றுக் கொள்ளவில்லை. வரிசைகளை நேர். செய்யச் சொல்கிறது இசுலாம். மனிதர்களுக்கிடையில் வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் இருப்பதை ஏற்றுக்கொள்கிற இசுலாம், அதன் பெயரில் கட்டமைக்கப்படுகிற படிநிலை வரிசைகளையும், உயர்வு தாழ்வு முரணையும், ஏற்றுக் கொள்ளவில்லை.

மனிதர்கள் சீப்பின் பற்களைப் போல் சமமானவர்கள் என்ற நபிகளின் வாக்கு இத்தகையக் கருத்தியலையே வலியுறுத்தி நிற்கிறது. மனிதத் தோற்றம் குறித்த இசுலாமிய மரபுத் தொன்மத்தில் குறிப்பிடப்படும் செய்தி இங்கு கவனத்திற்குரியது. மண்ணைக் கொண்டு மனிதன் படைக்கப்பட்டான் என்பதும், நெருப்பைக் கொண்டு வானவர் படைக்கப்பட்டனர் என்பதும் இசுலாமியப் புரிதல். மண்ணினால் மனிதனைப் படைத்துவிட்டு வானவரை நோக்கி என்னுடைய பிரதிநிதியைப் படைத்திருக்கிறேன் அவருக்கு நீங்கள் மரியாதை செய்யுங்கள் என்று இறைக்கட்டளை வருகிறது. எல்லா வானவரும் இறைக்கட்டளையைப் பின்பற்றுகிறார்கள் சாத்தானைத்தவிர. தான் நெருப்பிலிருந்து படைக்கப்பட்டவன் என்பதும், நெருப்பு மண்ணைவிடவும் உயர்ந்தது என்பதும் சாத்தான் இறைக்கட்டளையை நிராகரித்ததன் அடிப்படைக் காரணங்களாகும். இறைவனுக்கும், சாத்தானுக்குமான இந்த முரண் இந்த பிரபஞ்சம் உள்ளவரையிலும் தொடரும் என்பது இசுலாமிய நம்பிக்கை.

அராபியச் சூழலில் இஸ்லாமிய மரபில் நெருப்பு - மண் என்னும் எதிர்எதிர் முரண் சார்ந்த மோதல் நிகழ்ந்ததைப்

போலவே இந்திய மரபிலும், நெருப்பு - முரண் மோதல்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வந்திருக்கின்றன. வேள்வி, வேள்விச்சாலை, ஓமகுண்டம், என்று பல சொல்லாடல்கள் நம் ஓர்மைகளில் வந்து நிற்கின்றன. நெருப்புடன் தங்களைத் தொடர்புபடுத்தியவர்கள் வர்ணப்படிநிலையில் மேலடுக்கில் தங்களை இருத்திக் கொண்டார்கள். மண்ணுடனும், மண்சார்ந்த உழைப்புடனும் இருந்தவர்கள் வர்ணத்திற்கு வெளியே, சாதிக்கு வெளியே, ஊருக்கு வெளியே, கோவிலுக்கு வெளியே நிறுத்தப்பட்டார்கள்.

இசுலாத்தின் தோற்ற நிலையில் அது முன்மொழிந்த பல கருத்தாக்கங்கள் ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலையை வலியுறுத்தின. இத்தகைய சிந்தனைப் பாய்ச்சலுடன், அதன் தோற்ற நிலையிலேயே தமிழகத்துக்குள் இஸ்லாம் பரவுகிறது. இசுலாமின் தமிழகப் பரவலின்போது, ஏற்கெனவே தமிழ்ச்சூழலில் தொழிற்பட்டு வந்த வைதீக எதிர்ப்பு சார்ந்த, அதனை ஏற்றுக் கொண்ட மக்கள் திரளும் வைதீகத்தால் அனல் புனல் வாதங்களின் வழியாகவும் கழுவேற்றங்களின் வழியாகவும் கடுமையான நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருந்தன. குறிப்பாக சமணம், பௌத்தம் ஆகிய பெருஞ்சமயங்கள் இந்த நெருக்கடியில் சிக்கித் திணறின.

சங்ககாலம் என்று அடையாளப்படுத்தப்படுகின்ற காலந்தொடங்கி தமிழ்ச் சமூகம் வெவ்வேறு கட்டங்களைக் கடந்து ஏழாம் நூற்றாண்டைத் தொட்டிருந்தது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் திணை சார் அடையாளத்தில், பழகியிருந்த தமிழ்ச்சமூகம் திணைசார் அடையாளத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து, சேர, சோழ, பாண்டியர் என்னும், வேந்தர்களை முன்னிறுத்திய தமிழ் அடையாளத்துக்குள் வந்தது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் சேர, சோழ, பாண்டிய அடையாளங்கள் உதிர்ந்து, தமிழ் மக்கள், தமிழ் நிலம் என்னும் பொது அடையாளத்துக்குள் தமிழ்ச் சமூகம் வந்திருந்தது.

தமிழ்ச்சமூகத்தின் இத்தகைய நகர்வு எல்லா நிலைகளிலும் நடைபெற்றது. தமிழ் மொழியின், தமிழ் வாழ்வின் இலக்கண

வரையறைகள் முன்மொழியப்பட்டன. தொல்காப்பியம் தோன்றுகிறது. காதலும் வீரமும் கொண்டாடப்பட்ட நிலையிலிருந்து, அறத்தைக் கொண்டாட தமிழ்மக்கள் அறிவுறுத்தப்பட்டார்கள். இன்பம், பொருள் இவற்றை மையமிட்ட தமிழர் வாழ்க்கை, அறத்தை முதலில் வைத்து, பொருளை இரண்டாவதாக வைத்து, இன்பத்தை மூன்றாவதாக வைத்தது.

திணை சார் வாழ்க்கையில் கொண்டாடப்பட்ட கள்ளும், ஆணின் பாலியல் மீறல்களும், பொழுது போக்கின் வெளிப்பாடாக இருந்த சூதாட்டமும் அறமயப்பட்டச் சூழலில் கண்டனத்திற்குள்ளாயின. கள், சூது, பரத்தமை மூன்றும் திருநீக்கப்பட்டாருடன் தொடர்புபடுத்தப்பட்டன. பிறப்பின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வு இல்லை என்றது. கற்பை பெண்ணுக்குரிய அடிப்படை அலகாகவும், ஆணுக்கு பரந்துபட்ட நெகிழ்வுத் தன்மையுடனும் வலியுறுத்தியது. இவற்றுடன் கொல்லாமை, புலால் தவிர்த்தல், துறவு போன்றவையும் வலியுறுத்தப்பட்டன.

இவற்றுள் புலால், துறவு போன்றவற்றைத் தவிர ஏனைய அனைத்தையும் இசுலாமும் முன்னிலைப்படுத்தியது. சமணமும், பௌத்தமும் இவற்றை அறிவுரை, ஆலோசனை என்ற எல்லையுடன் வைத்திருக்க, இஸ்லாம் இறையியல் கோட்பாட்டுடன் இவற்றை இணைத்தது. குற்றங்களாக இவற்றை அறிவித்தது. சில குற்றங்களுக்கு இந்த உலகுசார்ந்த தண்டனையினையும், சில குற்றங்களுக்கு மறு உலகு சார்ந்த தண்டனையையும் இசுலாம் முன்மொழிந்தது.

அரபுச் சூழலில் இசுலாம் உருவான வரலாற்றுக் கட்டத்திற்கும், தமிழ்ச் சூழலில் சமண, பௌத்த சமயங்களின் பரவலாக்கம் நிகழ்ந்த வரலாற்றுக் கட்டத்திற்குமான பொதுவான குணாம்சம் வணிகச்சூழல். இந்தியாவுக்கு தேவையான குணமாக இசுலாமிய சமயத்தில் இருந்த ஒன்று, இசுலாம் பிற சமயங்களின் இருப்பினை அவற்றின் வரலாற்றுப் பாத்திரத்தை அங்கீகரித்ததும், அதன் பல்வேறு கூறுகளை உட்செரித்துக் கொண்டதும், முக்கியமானது. இந்தியாவில் சமணத்திலும், பௌத்தத்திலும் இதனைக் காணமுடியவில்லை.

இசுலாத்தின் பல்சமயம் குறித்த பரந்துபட்ட பார்வை சமய மோதல்கள் தீவிரப்பட்ட தமிழ்ச் சூழலில் அதன் வருகையையும், பணியையும் எளிதாக்கியது. இசுலாத்தின் வருகை, பரவலாக்கம் தமிழகத்தில் நிகழ்ந்தது என்பது தற்செயலானதல்ல. திடீரென ஏற்பட்டதுமல்ல. ஏற்கெனவே தமிழ்ச் சமூகம் இசுலாத்தினை ஏற்றுக் கொள்ள பக்குவப்பட்டிருந்தது. சமண, பௌத்த சமயங்கள் அதற்கான களத்தை தயார் செய்து வைத்திருந்தன.

இன்னொருவிதமாக சொல்வதென்றால், கிறிஸ்துவுக்கு முன்பிருந்த தமிழ் நிலப்பரப்பில் தொழிற்பட்டு வந்த வைதீகத் தன்மையற்ற, புரோகிதத்தன்மையற்ற, சாதிப்படிநிலையை ஏற்றுக் கொள்ளாத மக்கள் மரபு ஒன்று, ஒரு குறிப்பிட்டச் சூழலில் தங்களது இருப்பை நிலைநிறுத்திக்கொள்ள இசுலாத்தைத் தேர்வு செய்தது என்று கருதலாம்.

தமிழ்ச் சமூகத்தின் வெவ்வேறு சமூக, சாதிப்பிரிவுகளிலிருந்து இசுலாத்திற்குள் வந்து சேர்ந்த மக்கள் தங்களின் பூர்வ அடையாளங்களைச் சில இடங்களில் கைவிட்டும், சில இடங்களில் தக்க வைத்தும் புதிய இசுலாமிய வாழ்நிலையைக் கட்டமைத்தனர்.

இசுலாமிய சமயபரப்புக்குள் நுழைந்த தமிழ்ச்சமூகம் தனக்கென உருவாக்கிக் கொண்ட சமய அடையாளம், தனித்த அடையாளத்தைக் கொண்டதாக இருந்தது. இந்த அடையாளம் என்பது ஒற்றை அடையாளமாக இல்லாமல் தமிழகத்தின் வெவ்வேறு வட்டாரங்களில் அந்தந்த இடங்களின் பிரத்யேக மானக் கூறுகளை உள்வாங்கியதாகவும் பன்முகத் தன்மை கொண்டதாகவும் இருந்தது.

புத்தரிசியில் நல்லநாள் பார்த்து சோறு சமைத்து உண்ணும் வழக்கமும், வயலிலிருந்து விளைந்த நெற்கதிர்களில் சிறிது கொண்டு வந்து வீடு நிறைக்கும் வழக்கமும் தமிழ்ச்சமூகத்திற்கே உரித்தான பண்பாட்டுக் கூறு. தமிழ் இசுலாம் இதனை ஏற்றுக்கொண்டது.

சில குறிப்பிட்ட சமூகப்பிரிவுகளில் இருந்து இசுலாமிற்குள் வந்தவர்கள், இன்றுவரையிலும் மாட்டிறைச்சி உண்பதைத் தவிர்த்து வருகிறார்கள் இப்படி பிறப்பு தொடங்கி இறப்பு வரை

வாழ்வின் எல்லா நிலைகளிலும் தங்களது பண்பாட்டில் சேகரித்து வைத்திருந்தவற்றிலிருந்து சில வற்றையும், இஸ்லாத்தின் பண்பாட்டுக் கூறுகளிலிருந்து சிலவற்றையும் சேகரித்து தமிழிசுலாமியப் பண்பாட்டு மரபொன்றைக் கட்டமைத்தார்கள். தொட்டால் தீட்டு, பார்த்தால் தீட்டு என்று தீட்டுக் கொள்கையை கறாராகப் பின்பற்றுவதை விட்டு ஒருவரை ஒருவர் கட்டித்தழுவும் முசாஹபா என்னும் மரபுசார் அரேபிய நடைமுறை வழக்கம் தாராளமாக பின்பற்றப்பட்டது.

இந்தியச் சமூகத்திற்கே உரித்தான சாதி அடையாளத்தை பரவலான நிலையில் தவிர்த்தும் ஒரு சில இடங்களில் தக்கவைத்தும் கொண்டனர். சாதி அடையாளங்களைப் பரவலாக கைவிட்டு இசுலாமில் வந்தவர்கள் 'லெப்பை' என்னும் புதிய அடையாளத்தில் இணைக்கப்பட்டனர். நெசவு, சங்கு, முத்துக்குளித்தல், சமயப்பணி, கொடிக்கால் விவசாயம், வணிகம் ஆகிய தொழில் சார்ந்த நடவடிக்கைகளில் லெப்பை முஸ்லிம்கள் ஈடுபட்டிருந்ததாக 1881-ல் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கறிக்கை குறிப்பிடுகிறது.

அதற்கு முந்திய நிலையில் ஒவ்வொரு தொழிலையும் செய்தவர்கள், ஒவ்வொரு சாதிப்பிரிவு சார்ந்தவர்களாக இருந்தார்கள். செய்த தொழில் சார்ந்து அவர்களின் சமூகத் தகுதி நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இசுலாத்தை அவர்கள் தேர்ந்தெடுக்கும் போது தங்களின் பழைய சாதி அடையாளத்தை உதிர்த்து விட்டு, புதிய அடையாளம் ஒன்றை உருவாக்கிக் கொள்கிறார்கள். தமிழிசுலாமிய வரலாற்றில் இது ஒரு முக்கிய நிகழ்வு.

தமிழ்ச் சமூகத்தின் நெடும்பரப்பில் இசுலாமின் இருப்பு நிலை நிறுத்தப்பட்ட பிறகு, தமிழ் இலக்கியம், தமிழ் பண்பாடு, தமிழ்க் கலைகள் இவை சார்ந்து தங்களின் அடையாளங்களை தமிழ் முஸ்லிம்கள் பதிவு செய்யும் முயற்சி தீவிரப்பட்டது. தமிழகத்தில் இசுலாம் அறிமுகமாகத் தொடங்கிய ஆரம்ப காலகட்டங்களில் அரபு மொழியிலிருந்த சமய நெறிமுறைகளை தமிழ் மொழியில் சொல்வது சாத்தியமானதல்ல என்ற கருத்து இருந்தது. இதற்காக தமிழ் செய்திகளை அரபு எழுத்துருவில் எழுதும் ''அரபுத் தமிழ்'' என்னும் புதிய எழுத்து முறை உருவானது. அரபி மொழியின்

வரிவடிவ அமைப்பைப் போலவே இதுவும் வலமிருந்து இடமாக எழுதப்பட்டது. இந்த முறையிலே இசுலாம் சார்ந்த அனைத்தும் தமிழ் முஸ்லிம்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டன. 15ம் நூற்றாண்டுவரை அரபுத் தமிழில், அரபி மொழியில்தான், இசுலாமிய சமய நடவடிக்கைகள் தொடரப்பட்டன.

நபிகளின் காலந்தொடங்கி 15ம் நூற்றாண்டு வரை இசுலாத்தின் சமய, பண்பாட்டுத் தலைமை என்பது தமிழ்ச் சூழலுக்கு வெளியிலிருந்து சமயப் பணி செய்ய வந்த, வர்த்தகமாய்வந்த தமிழரல்லாதவர்களின் கைவசமிருந்தது.

15ம் நூற்றாண்டுக்கு பிறபட்ட நூற்றாண்டுகளில் தமிழ், தமிழ் அடையாளம், இவற்றைச் சார்ந்த தமிழிசுலாமின் பண்பாட்டுத் தலைமை உருவாகியது. தமிழ்ச் சூழலிலிருந்தே இறை நேசர்கள் என்றறியப்பட்ட சமயப் பெரியார்கள் உருவானார்கள். இவ்வாறு உருவான சமயப் பெரியார்களில் பலர் இலக்கிய ஆளுமை மிக்க படைப்பாளிகளாகவும் இருந்தார்கள். படைப்பாளிகளாக அறியப்பட்ட சமயப்பெரியார்கள் பரவலாக மக்கள் அறிமுகம் பெற்றார்கள். இவர்களின் எழுத்துக்கள் தமிழிசுலாமிய மரபில் கொண்டாடப்பட்டன. தக்கலை பீரப்பா, கோட்டாறு ஞானியார் சாகிபு, உமறுப்புலவர், ஆலிப்புலவர், குணங்குடி மஸ்தான் சாகிபு என பலர் இந்த வரிசையில் தமிழிசுலாமிய மரபின் இலக்கியக் கருவூலங்களாக மாறினார்கள்.

இவர்களின் இலக்கியப் பிரதிகள் பல்வேறு இடங்களில் மக்களால் பல்வேறு சூழல்களில் நிகழ்த்து முறையில் பாடப்பட்டன. சுமார் 250 வருடங்களாக தக்கலை ஞானப்புகழ்ச்சி இலக்கியம் தொடர்ந்து வெவ்வேறு நிகழ்வுகளில் அந்த வட்டார மக்களால் பாடப்பட்டு வருகிறது. உமறுப்புலவரின் "சீறாப்புராணம்" தமிழகம் முழுவதும் பரப்புரையாக நடைபெற்று வருகிறது.

15ம் நூற்றாண்டில் தொடங்கிய தமிழ் இசுலாமிய எழுச்சி இலக்கியத்தின் மீதான ஆளுமையை வலுவாகவே செலுத்தியது. இறைத் தூதர்களின் வரலாறு, இறை நேசர்களின் வரலாறு, வாய்மொழி மரபு சார்ந்து உருவான இலக்கியப் பிரதிகள், இவை தமிழில் கொண்டுவரப்பட்டன. தமிழில் ஏற்கெனவே

வழக்கிலிருந்த சிற்றிலக்கிய வடிவங்களுடன் படைப்போர், முனாஜாத்து, கிஸ்ஸா, நாமா, மசாலா போன்ற சிற்றிலக்கியங்கள் தமிழ் முசுலிம்களால் புதிதாக படைக்கப்பட்டன. இவற்றுள் பல நிகழ்த்துக் கலை இலக்கியங்களாகவும் இருந்தன.

15ம் நூற்றாண்டில் ஆரம்பித்த தமிழிசுலாமிய பண்பாட்டு மரபின் எழுச்சி 20ம் நூற்றாண்டில் புதிய கட்டத்தை எட்டியது. 20ம் நூற்றாண்டில், இதன் புதிய கண்ணியாக வருகிறார் ''சதாவதானி செய்கு தம்பி பாவலர்.'' பாரம்பரிய இசுலாமிய அறிவு சார் தேர்ச்சியும், புதிதாக வளர்ச்சி பெற்ற அச்சுத் தொழில் நுட்ப அனுபவமும், இருபதாம் நூற்றாண்டில் திரட்சி பெற்ற விடுதலைப் போராட்டம் சார்ந்த அனுபவமும், தமிழ்ச் சூழலில் உருவான தமிழ் அடையாளம் குறித்த தீவிர ஈடுபாடும் சதாவதானியை தமிழிசுலாத்தின் நவீனமுகமாக அடையாளப்படுத்துகிறது.

# திருக்குர்ஆன்

புனிதப்பிரதிகளைக் கொண்டிருக்கிற சமயங்களில் இசுலாமும் ஒன்று. திருக்குர்ஆன் இசுலாமிய சமயத்தின் புனிதப்பிரதி. முஹம்மது நபிக்கு வழங்கப்பட்ட திருக்குர்ஆன் தவிர தூதர்கள் (நபி) மூஸாவுக்கு தவ்ராத், ஈசாவுக்கு இஞ்சீல், தாவூதுக்கு ஸபூர் ஆகிய புனிதப்பிரதிகள் வழங்கப்பட்டன என்பது இசுலாமிய நம்பிக்கை.

நான்கு புனிதப்பிரதிகள் தவிர சுஹுஃபுகள் மற்றும் முன்னறிவிப்புகள் சிலவும் இறைவனால் வழங்கப்பட்டுள்ளன என்கிறது இசுலாம். புனிதப்பிரதிகளை முழுமையான பனுவலாகக் கருதினால் சுஹுஃபுகளை அப்பனுவலின் சில பகுதிகளாக கணக்கிட்டுக் கொள்ளலாம். சுஹுஃபுகள் எண்ணிக்கையிலடங்காதவை. தூதர்கள் மூஸாவுக்கும், இபுறாகீமுக்கும் சுஹுஃபுகள் வழங்கப்பட்டதை திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது. (அத்தியாயம் 87)

இசுலாமிய நம்பிக்கைப்படி புனிதப்பிரதிகள், சுஹுஃபுகள் இவற்றோடு முன்னறிவிப்புகளும் இறைவன் தரப்பிலிருந்து வழங்கப்பட்டிருக்கின்றன. தூதர் ஈசாவை எந்த ஆணின் கூடுகை இன்றியே கருவில் சுமக்க இருக்கும் செய்தியை இறைவன் தன்னுடைய வானவத்தூதர் வழியாக மரியத்துக்கு முன்னறிவிப்புச் செய்ததாக தொடரும் நம்பிக்கையை உதாரணமாகக் கொள்ளலாம்.

புனிதப்பிரதிகள், சுஹுஃபுகள் ஆகியன இறைவன் தரப்பிலிருந்து தேர்வு செய்யப்பட்ட தூதர்களுக்கே வழங்கப்பட்டன. இந்த உலகின் முதல் மனிதர் ஆதம் தொடங்கி முஹம்மது நபி வரையிலும் மொத்தம் ஒருலட்சத்து இருபத்து நான்காயிரம் தூதர்கள் இறைவனால் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். தூதர்கள் அனுப்பப்படாத சமுதாயமே இல்லை என்பது இசுலாமிய நம்பிக்கை.

தீபகற்ப நாடான சவுதி அரேபியாவின் மக்கா நகரிலிருந்து இரண்டு மைல் தொலைவிலிருக்கிறது நூர்மலை. நூர்மலையில் குகைகள் பரவலாகக் காணப்படுகின்றன. அதில், நான்கடி நீளத்தில் ஒன்றேமுக்காலடி அகலத்தில் அமைந்திருக்கிறது ஹிரா குகை. முஹம்மது நபி தனித்திருந்த குகை. அரபு குல மரபை அடியொற்றி முஹம்மது நபியும் அடிக்கடி ஹிரா குகை நோக்கி பயணம் மேற்கொள்வார். கொஞ்சம் சத்துமாவு, கொஞ்சம் தண்ணீர் இவற்றோடு பலநாள்கள் ஹிராகுகையில் தனித்திருந்தார் முஹம்மது நபி.

வறண்டது, பாலை, உள்ளிட்ட அர்த்தங்களைக் கொண்டது ''அரப்'' என்னும் சொல். அந்த தீபகற்பத்துக்கும் அங்கு தனித்திருந்த மக்களுக்குமான பொதுவான அடையாளச்சொல்லாக ''அரப்'' அறியப்பட்டிருந்தது. அவர்களின் பண்பாட்டு அடையாளமாக அமைந்திருந்தது கஃபா ஆலயம். ஆலயத்தின் உள்ளும் வெளியுமாக முன்னூற்று அறுபதுக்கும் மேற்பட்ட சிலைகள்; அங்கிருந்த இனக்குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப. குழுக்களிடையே முரணும் மோதலும் எப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

வணிகம் சார்ந்த பொருளியல் நடவடிக்கைகளுக்குள் காலடி வைத்துக்கொண்டிருந்த அரபுக்கு இது உகந்த ஒன்றல்ல. குழு அடையாளங்களும், கோத்திரப் பெருமைகளும் பின்தள்ளப்பட்டு அரபு என்னும் ஒற்றை அடையாளம் அவசியமானதாக இருந்தது.

இந்த மையச்சிக்கலில் அரபுலகம் சுழன்று கொண்டிருந்தபோது முஹம்மது நபியின் தனிமைப்பயணம் தேடலை முன்வைத்து ஹிராவை நோக்கியதாக அமைந்திருந்தது. மூன்றாண்டு காலம் தொடர்ச்சியாக நடைபெற்ற ஹிராகுகையின் தனிமை அனுபவத்தின் மூன்றாவதாண்டில் அரபுகளின் புனித மாதங்களில் ஒன்றான ரமலானில் தேடலின் விடைகள் முஹம்மது நபிக்கு தென்பட ஆரம்பித்தன.

தூதுத்துவம் வழங்கப்பட்டு திருக்குர்ஆன் வசனங்கள் வழங்கப்பட்டபோது முஹம்மது நபிக்கு வயது நாற்பத்தி ஒன்று. நபி அவர்கள் மொத்தம் அறுபத்து மூன்றாண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்திருந்தார். திருக்குர்ஆன் ரமலான் மாதத்தின் கடைசி பத்து

நாட்களில் ஒற்றைப்படை இரவு ஒன்றில் வழங்கப்பட்டது என்ற நம்பிக்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருக்கிறது. ஒற்றைப்படை இரவு என்பது இருபத்தி ஏழாவது இரவு என்பது வெகுமக்கள் சார்ந்த இசுலாமிய நம்பிக்கை.

இசுலாமிய நாட்கணக்கு சந்திரனின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. அந்த நாட்கணக்கில் ஒரு நாளின் தொடக்கம் இரவு நேரத்திலிருந்து கணக்கிடப்படுகிறது. வெகுமக்கள் தங்கள் சொல்லாடலில் பிறை 1, பிறை 2, பிறை 3 ......என்றே நாட்களைக் குறிப்பிடுகிறார்கள்.

ஆரம்ப நிலையில் நாளின் தொடக்கம் மாலையிலிருந்து கணக்கிடப்பட்டது. மாலை ஆறுமணி முதல் அடுத்த நாள் மாலை 6-மணி வரை உள்ள காலப்பகுதி ஒருநாள் என்று கணக்கிடப்பட்டது. உலகம் முழுவதும் இத்தகைய நாட்கணக்குப் பின்பற்றப்பட்டதாகத் தெரிகிறது. தமிழ்ச் சமூகத்திலும் இந்த வழக்கம் இருந்திருக்கிறது.

திருக்குர்ஆனின் மொத்த அமைப்பு முறை; ஆறாயிரத்து அறுநூற்று அறுபத்தாறு வசனங்கள், ஐநூற்று நாற்பது பிரிவுகள், முப்பது பாகங்கள், நூற்றிப்பதினான்கு அத்தியாயங்கள். மொத்த குர்ஆனும் முஹம்மது நபிக்கு ஒரே தவணையில் வழங்கப்படவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக இருபத்தி மூன்றாண்டு கால இடைவெளியில் (நபியின் 41 - வது வயதிலிருந்து அவரின் மறைவு காலமான 63 -வது வயது வரை) வழங்கப்பட்டது. இன்று நமக்குக் கிடைக்கக்கூடிய அமைப்பு மற்றும் வரிசை முறையிலும் திருக்குர்ஆன் வழங்கப்படவில்லை. திருக்குர்ஆன் வழங்கப்பட்ட வரிசை வேறு, தொகுக்கப்பட்டுள்ள வரிசை வேறு.

திருக்குர்ஆனின் வச்ன எண்ணிக்கைகள் குறித்து ஆய்வறிஞர்களிடையில் சின்னச்சின்ன வேறுபாடுகள் இருக்கின்றன. அ.கா.அப்துல் ஹமீது பாகவி அவர்கள் தர்ஜீமதுல் குர் ஆன் என்னும் பிரதியில் தரும் குறிப்பின்படி, நபிகளின் மனைவியான ஆயிஷாவின் கருத்துப்படி 6666, ஷாம் வாசிகள் கருத்துப்படி 6250, கூஃபா வாசிகள் கருத்துப்படி 6236, இப்னு மஸ்ஊத் கருத்துப்படி 6218, பஸ்ரா வாசிகள் கருத்துப்படி 6216,

இஸ்மாயில் இப்னு ஜஅம்ஃப்ரெ மதனீ கருத்துப்படி 6214, இராக் வாசிகள் கருத்துப்படி 6214, மக்காவாசிகள் கருத்துப்படி 6212 - வசனங்கள் திருக்குர்ஆனில் இடம் பெற்றுள்ளன. இவ்வெண்ணிக்கை வேறுபாட்டின் காரணமாக திருக்குர்ஆனில் எந்த மாற்றமுமில்லை என்கிறார்கள். ஆயிஷாவின் 6666 வசனங்கள் என்னும் கருத்தே பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது எனினும் இன்று அச்சாகும் பிரதிகளில் பெரும்பாலும் 6236 - வசனங்களே இடம்பெற்றுள்ளன. குறிப்பாக இந்தியாவில் அச்சாகும் பிரதிகளில்.

முஹம்மது நபிக்கு முதன் முதலாக வழங்கப்பட்ட திருக்குர்ஆன் வசனங்கள் நமக்குக்கிடைக்கின்ற குர்ஆன் பிரதியில் 96-வது அத்தியாயத்தில் முதலில் இடம் பெற்றுள்ளன.

புனிதப்பிரதியுடன் தொடர்புடைய மற்றொரு சொல் வஹி. வஹியின் வழியாகவே புனிதப் பிரதி முஹம்மது நபிக்கு வழங்கப்பட்டது. சமிக்ஞை என்னும் அகராதிப் பொருளை இந்தச் சொல் பெற்றிருக்கிறது . இரகசியம் என்னும் பொருளும் இந்தச் சொல்லில் தொங்கி நிற்கிறது.

வஹி என்ற அனுபவத்தைப் பெறும்போது நபி அவர்கள் தன்னிலை இழத்தலை சந்திப்பார்கள். அவரின் முகம் சிவந்துவிடும். கடுங்குளிரிலும் வியர்வை வழியும், நரம்புகள் சுமையேறிய ஒன்றாய் மாறும், காதுகளில் மணி ஒலிப்பது போல் தோன்றும் என்ற தகவல்களை அறிவிப்பாளர்கள் பதிவு செய்கிறார்கள்.

வஹி அனுபவமானது இறைவனுக்கும் நபிக்குமான நேரடித் தொடர்பில் நடைபெறவில்லை. இறைவன் தன்னுடைய வானவர் தூதரான ஜிப்ரயிலின் வழியாக நபியிடம் சேர்த்தது என்பது இசுலாமிய நம்பிக்கை. வஹியைக் கொண்டு வரும் ஜிப்ரயில் சிலநேரங்களில் மனித உருவிலும் சில நேரங்களில் அவரது சுயஉருவிலும் நபிக்குத் தோற்றம் தருவார் என்று குறிப்பிடப்படுகிறது.

கற்பித்தல், கற்றல் என்ற தன்மையில் அல்லாமல் ஜிப்ரயீலுக்கும் நபிக்குமான வஹி அனுபவம் பல நேரங்களில் பகிர்தல் சார்ந்த அனுபவமாகவும் தொழிற்பட்டது. ஹிரா

குகையில் முதலாவதாக காட்சி தந்த ஜிப்ரயில் நபியிடம் ஓதுவீராக என்று கூறியபோது நபியோ ஓதத்தெரியாது என்று மறுமொழி கூறுகிறார். உடனே, மூன்று முறை நபியை தன் நெஞ்சுடன் சேர்த்து கட்டியணைத்து ஓதுவீராக என்று ஜிப்ரயில் சொன்னபிறகு நபிகள் ஓதத்தொடங்கினார்கள் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள.

திருக்குர்ஆன் தொடக்க நிலையில் வாய்மொழி மரபாகவே பேணப்பட்டு வந்தது. பேரீத்த மரப்படைகள், தோல்கள், எலும்புப்பட்டைகள் போன்றவற்றில் திருக்குர்ஆன் வசனங்கள் குறித்து வைக்கப்பட்டாலும். மனனம் செய்யப்பட்ட வாய்மொழி மரபாகவே பேணப்பட்டு வந்தது. மனனம் செய்வதற்கென்றே பயிற்சி பெற்றவர்கள் இருந்தனர். ஹாபிழ்கள் என்று இவர்கள் குறிப்பிடப்பட்டனர். நபிகளின் காலத்தில் திருக்குர்ஆனை எழுத்துவடிவில் பிரதியாகக் கொண்டுவரும் முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. நபியின் மறைவுக்குப்பிறகு அபூபக்கர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகே எழுத்தில் தொகுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு உதுமான் அவர்களின் ஆட்சிகாலத்தில் முழுமை பெற்றது.

உலகம் முழுவதும் இன்று பின்பற்றப்படுகின்ற திருக்குர்ஆன் பிரதிகள் உதுமான் அவர்களின் ஆட்சி காலகட்டத்தில் தொகுத்த திருக்குர்ஆன் பிரதியை அடிப்படையாக வைத்தே அச்சாக்கம் பெறுகின்றன. நபி அவர்களின் மறைவுக்குப் பிறகான பதினைந்து ஆண்டு கால இடைவெளியில் உதுமான் இதனைத் தொகுத்தார். உதுமான் அவர்கள் திருக்குர் ஆன் பிரதியை இறுதி செய்து உருவாக்கிய பிறகு மற்ற எல்லா பிரதிகளும் அழிக்கப்பட்டன. நபிக்குப் பிறகு ஆட்சி பொறுப்பேற்ற அபூபக்கர் அவர்கள் தன்காலத்தில் தொகுத்து ஹப்ஸா என்பவரிடம் ஒப்படைத்திருந்த பிரதியும் எரியூட்டப்பட்டது.

வாய்மொழி மரபில் திருக்குர்ஆன் பிரதி பேணப்பட்டதற்கும் இறைவன் வழங்கியப்பிரதி என்ற மக்கள் நம்பிக்கைப் பெறுவதற்கும் இடையில் தொடர்பு இருந்திருக்க வேண்டும். இதனோடு இணைத்துப் பார்க்க வேண்டிய ஒன்று, நபி அவர்களின் எழுத்தறிவு பற்றிய குறிப்புகள். நபிகளுக்கு இருந்த

சிறப்புக்களில் ஒன்று உம்மி என்பதாகும். உம்மி என்றால் எழுதப்படிக்கத் தெரியாதவர் என்று பொருள். புனிதப் பிரதியின் வசனங்கள் முதலில் நபியிடம் ஓதிக்காண்பிக்கப்பட்டு மறுபடியும் ஓதச்சொன்னபோது நபி அவர்கள் சொன்ன மறுமொழி எனக்கு ஓதத்தெரியாது என்பதாகும்.

நபி அவர்கள் பல்வேறு நாடுகளின் அரசர்களுக்குக் கடிதம் எழுதுவதற்காக தோழர்கள் சிலரை நியமித்திருந்தார்கள். மக்கா, மதீனா வட்டாரத்தைச் சுற்றிலும் வேறுவேறு மொழிகள் வழக்கிலிருந்தன. கடிதம் எழுதும் பணியாளர்கள் அம்மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தார்கள். இவர்களிடமிருந்தும் நபி அவர்கள் மொழியறிவைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இருந்தது.

தன்னுடைய சொந்த மொழியான அரபு மொழிசார்ந்தத் தேர்ச்சியினையும் நபி அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லையென்பதை ஹுதைபியா நிகழ்வு எடுத்துக் கூறுகிறது. மக்காவில் வாழ்ந்தவர்களுக்கும் நபி அவர்கள் தலைமையிலான முஸ்லிம்களுக்கும் ஹுதைபியா என்னுமிடத்தில் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது. அந்த ஒப்பந்த வாசகங்களில் ஒன்றாக இடம் பெற்றிருந்த ''அல்லாஹ்வின் தூதர் முஹம்மது'' என்ற வாசகத்தை மக்காவாசிகள் ஏற்கவில்லை. அதை நீக்கம் செய்து ''அப்துல்லாவின் மகன் முஹம்மது'' என்று எழுதச் சொன்னார்கள்.

மக்காவாசிகளின் விருப்பப்படி அவ்வாசகத்தை நீக்குவதற்கு நபி அவர்கள் இசைகிறார்கள். அவ்வாறு நீக்கம் செய்ய நபித்தோழர்கள் அனைவரும் மறுத்து விடுகிறார்கள். இறுதியில் தோழர் ஒருவரின் உதவியுடன் அவ்வாசகம் எந்த இடத்தில் வருகிறது என்பதைக் காட்டச் சொல்லி நபி அவர்கள் தன்னுடைய கரங்களால் அதனை நீக்கம் செய்தார்கள் என்று இஸ்லாமிய வரலாறு குறிப்பிடுகிறது.

இசுலாம் கற்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சமயம். நபிகளுக்கு வழங்கப்பட்ட திருக்குர்ஆன் முதல் வசனமே கற்பித்தலோடு தொடர்புடையது. (96 ; 1-5) கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் ஏராளமிருந்தும் உம்மி என்ற

தகுதிப்பாட்டினையே நபிகள் கடைசி வரை தக்கவைத்துக் கொண்டார்கள். இறைவனால் வழங்கப்பட்ட புனிதப்பிரதியே குர்ஆன் என்னும் நம்பகத்தன்மையை இது மேலும் உறுதி செய்தது.

வஹி, தூத்துவம் இவற்றோடு இசுலாமிய இறையியலில் கனவுக்கும் கணிசமான பங்கிருக்கிறது. உண்மையான கனவு தூத்துவத்தின் 46-ல் ஒரு பங்கு என்று இசுலாம் குறிப்பிடுகிறது. நபித்துவம் என்னும் தகுதிப்பாடு கிடைப்பதற்கு முன்னால் ஆறுமாத காலமாக தொடர்ந்து நபிகள் கனவு காண்பது நடந்தது. இசுலாமிய இறையியலின் படி முஹம்மது நபியுடன் தூதுத்துவமும், புனிதப் பிரதி வழங்கப்படுவதும் நிறைவு பெற்றுவிட்டன. உண்மைக் கனவுகள் மட்டும் உலகம் உள்ளவரை இறைவன் தரப்பிலிருந்து வழங்கப்படும்.

நபியின் காலத்திற்குபின் எழுத்துப்பிரதி பெறாமல் திருக்குர்ஆன் வாய்மொழி மரபாக பேணப்படுவதில் பல சிக்கல்களை இசுலாமிய அரசு எதிர்கொண்டது. அரபு வட்டாரத்திற்கு வெளியே இசுலாம் அறிமுகமானபோது வாய்மொழி பிரதி வடிவிலான திருக்குர்ஆனும் சேர்ந்து அறிமுகமானது. வாய்மொழி மரபிலேயே அறிமுகமானதால் கேட்பவர் அவரின் நினைவாற்றல், சமூக, பண்பாட்டு பின்புலங்கள், இசுலாம் பரவலான வட்டாரம் இவற்றிற்கேற்ப பிரதிகளில் வித்தியாசங்கள் ஏற்பட்டன. ஓரிறை, ஒரு மறை என்ற இறையியல் தளத்திற்கு பல பிரதிகள் இருப்பது சிக்கலான ஒன்று.

இதுதவிர, இசுலாமிய அரசு விரிவாக்கத்தில் நிகழ்ந்த போர்களில் இறந்துபட்ட முஸ்லிம்களில் திருக்குர்ஆனை மனனம் செய்வதவர்களும் இருந்தார்கள். இவையெல்லாமாகச் சேர்ந்து எழுத்து வடிவிலான இறுதி செய்யப்பட்ட பிரதியின் அவசியத்தை ஏற்படுத்தின.

அரபுமொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களும் எளிதில் குர்ஆனை வாசிக்க எழுத்துப்பிரதியில் குர்ஆன் தொகுக்கப்பட்டபோது, அரபு எழுத்துக்களிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அரபு எழுத்துக்களில் மேல், கீழ் கோடுகள் போன்றவை இந்தப் பின்புலத்திலேயே உருவாக்கப்பட்டன.

# இஸ்லாம் - குமரி மாவட்டம்

*தமிழ்ச்சூழலில் இஸ்லாம் நபிகளின் காலத்திலேயே அறிமுகமாகிறது. ஆய்வாளர்கள் பலரின் கூற்றுப்படி மலேசியாவில் இஸ்லாம் கி.பி. 671-ல் அறிமுகமாகிறது. தமிழகத்தின் மேற்கு கிழக்குக் கடற்கரைகயை கடந்துதான் மலேசியாவிற்கு இஸ்லாம் சென்றிருக்க வேண்டும்.*

*ஆய்வாளர் டாக்டர் எஸ்.எம்.கமால் அவர்கள் குமரி மாவட்டத்தின் கோட்டாறு நகரில் ஈராக் நாட்டு பாவா காஸிம் (வலி) அவர்களது அடக்கவிடம் உள்ளது. அதில் ஹிஜ்ரி 4 (கி.பி. 624) என்று குறிக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறார். (முஸ்லிம்களும் தமிழகமும் - டாக்டர். எஸ். எம். கமால் பக்கம் - 15 இஸ்லாமிய ஆய்வு பண்பாட்டு மையம் (1990)*

*இஸ்லாமியக் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டு இஸ்லாத்தைத் தேர்வு செய்த சேரமான் பெருமாள் பற்றிய உறுதிப்படாத குறிப்பும் ஏழாம் எட்டாம் நூற்றாண்டிலேயே இன்றைய குமரிமாவட்டத்தை உள்ளடக்கிய கேரளமண்ணில் இஸ்லாம் அறிமுகமாகிவிட்டதை உறுதி செய்கின்றது.*

*கேரளபகுதிக்கு வருகைதந்த மாலிக் இப்னு தீனார் சேரமான் பெருமாளிடமிருந்து அறிமுகக் கடிதம் வாங்கிக் கொண்டு வந்ததாக கருதப்படுகிறது. கேரளாவின் எர்ணாகுளம் மாவட்டம் கொடுங்கலூர் தொடங்கி குமரி மாவட்டத்தின் குளச்சல் வரையிலான கடற்கரைப்பகுதிகளில் இஸ்லாமியப் பிரச்சாரத்தை மாலிக் இப்னு தீனாரும் அவரது குழுவினரும் மேற்கொண்டனர். மாலிக் இப்னுதீனார் ஒன்பது தொழுகைப் பள்ளி வாசல்களைக் கட்டியதாகக் கூறுகிறார்கள். அவற்றில் மூன்று பள்ளிவாசல்கள் தற்பொழுது குமரிமாவட்ட நிலவியல் அமைப்புக்குள் இருக்கின்றன. (திருவிதாங்கோடு, குளச்சல், தேங்காய்பட்டினம்)*

*திருவிதாங்கோடு ஒரு காலகட்டம் வரை திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தலைநகராக இருந்தது. மாலிக் இப்னு தீனாரால் கட்டப்பட்ட பள்ளிவாசல் அமைப்பும், அதற்கு பயன்படுத்தப்*

பட்ட மிகப்பெரிய கருங்கற்களும் இப்பள்ளி வாசல்களை சாதாரண மனிதர்களைக் கொண்டு கட்டியிருக்க முடியாது என்றும், ஜின்கள் என்னும் அசாதாரண சக்தி கொண்டவைகளைக் கொண்டுதான் கட்டியிருக்க முடியும் என்கிற தொன்மத்தையும் முஸ்லிம்களிடம் ஏற்படுத்தியிருக்கின்றது.

குமரி மாவட்ட முஸ்லிம்களில், இங்கிருந்து முஸ்லிம்களாக மாறியவர்கள், அராபியாவிலிருந்தும் பிற பகுதிகளிலிருந்தும் வந்து இங்கு திருமண உறவுகளை ஏற்படுத்தி அதன் வழியாக இஸ்லாத்தைத் தேர்வு செய்தவர்கள், திருவிதாங்கூர் அரசாங்கத்தின் படைபிரிவுகளாக இங்கே வந்து ஒரு நிலையில் இங்கேயே குடியமர்ந்த உருது மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் என பலதரப்பினர் இருக்கின்றனர்.

கடலியல் ஆய்வாளர் ஒரிசா பாலு, "இன்றைய கோட்டாறு பழங்காலத்தில் கப்பல்கள், படகுகள் வந்து செல்லும் சுழிமுகமாக இருந்திருக்க வேண்டும்" என்கிறார். அவரின் கருத்துப்படி தென்னெல்லை என்பது இப்போதைய குமரி முனையல்ல ; மாறாக மணக்குடி, மணக்குடியில் வருகின்ற கப்பல்கள் கோட்டாறு வரை வந்து திரும்பி சென்றிருக்க வேண்டும். இதற்கு முன்பு நடைபெற்ற கடல்கோள் ஒன்றில் இப்பகுதிகள் அழிவை சந்தித்திருக்க வேண்டும். மணக்குடி வட்டாரம் கடல் கோள் சீற்றத்திற்கு அடிக்கடி ஆட்படும் பகுதி என்பதற்கு 2004-ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியையும் அவர் மேற்கோளிடுகிறார். (வாய்மொழியாகப் பெறப்பட்டத்தகவல்)

இதில் இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். இன்றைய நிலையில் குமரிமாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகள் கிறிஸ்தவத்தால் நிரம்பியிருக்கிறது. தூய சவேரியார் அவர்களின் வருகைக்குப்பின் இந்தக் கடற்கரை வட்டாரங்கள் கிறித்தவத்தை தங்களது சமயமாக தேர்ந்தெடுத்தன. கிறிஸ்தவத்தை இவர்கள் தேர்வு செய்வதற்கு முன் எந்த சமயத்தைப் பின்பற்றியிருக்கிறார்கள் என்ற கேள்வி ஒன்று இருக்கிறது.

கி.பி. 1532 - 1535 முகமதியர்களுக்கும், பரதவர்களுக்கும் இடையே நடந்த ஒரு போராட்டத்தில் கொச்சியில் இருந்து போர்த்துக்கீசியர்கள், மீனவர்கள் கத்தோலிக்க மதத்திற்கு

மாறினால் படை கொடுத்து உதவுவதாக கூறினார்கள். மீனவர்களும் இதற்கு சம்மதித்து அனைவரும் கத்தோலிக்கர் களாக மாறினார்கள் என்று ஆ. சிவசுப்பிரமணியம் தன்னுடைய நூல் ஒன்றில் குறிப்பிடுகிறார்

இம்மக்கள் பெரும்பாலும் முஸ்லிம்களாக இருந்திருக்க வாய்ப்பிருக்கிறது. கடலில் சென்று தொழில் செய்கின்றவர்களும், கரையில் தொழில் செய்பவர்களும் முஸ்லிம்களாக இருக்கும் சூழலில் இவர்களுக்கிடையில் இருந்த முரண்பாடு முற்றும்போது அதில் தூய சவேரியார் அவர்களின் இடையீடு நடைபெறுகிறது. கடல்சார் மக்கள் கிறித்தவத்தை தேர்வு செய்வதன் மூலம் அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரப்படுகிறது.

இதற்கான வேறு அகச்சான்றுகள் ஏதாவது இருக்கிறதா என்று ஆய்வு செய்யும் போது குமரிமாவட்டம் கன்னியாகுமரி அருகில் உள்ள சின்னமுட்டம் என்னும் ஊரில் கிடைத்திருக்கும் கல்வெட்டுக்குறிப்பு சில தகவல்களைக் கூறுகிறது.

"குமரிமாவட்டம் கோவைக்குளம் துறைமுகத்தில் மீன்பிடிக்க வசூலிக்கப்பட்ட வரி, படகுகளுக்காகச் செலுத்தப்பட்ட கட்டணம் மற்றும் பொருளாகக் கொள்ளப்பட்ட மீன் மற்றும் நெல் ஆகியவை உள்ளிட்ட மொத்த வருவாயிலிருந்து இங்குள்ள இஸ்லாமியப் பள்ளிக்கு விளக்கெரிக்க தேங்காய் எண்ணெய்யும் பள்ளியில் வாங்கா வாசிக்கும் மோதினுக்கும் கொடை வழங்கியதை இக்கல்வெட்டு செய்தியாகத் தெரிவிக்கிறது.

மேலும் குமரிமாவட்டம் நான்கெல்லைக்கு உட்பட்ட எல்லைக்குள் இருக்கிறவர்களோடு வலங்கை, இடங்கையார், படைப்பணம், பிரிசண்ட காணிக்கை ஆகியனவற்றிற்குக் கொடை வழங்குவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதையும் இக்கல் வெட்டுத் தெரிவிக்கிறது."

இக்கல்வெட்டுச் செய்தியைப் பெயர்த்துத் தரும் தொல்லியல் துறை ஆய்வாளர் தே.கோபாலன் பள்ளிக்கும், "மோதினுக்கும் கொடை வழங்கியதாக இக்கல்வெட்டுக் கூறுகிறது. இசுலாமியப் பள்ளி வாசல்களில் வாங்கா வாசிப்பவர் மோதீன் என அழைக்கப்படுகிறார். எனவே, குமரி மாவட்டத்தில் சின்ன முட்டத்தில் இருந்தப்பள்ளி ஒரு இஸ்லாமியப் பள்ளி என்பது

இதன் மூலம் உறுதியாகிறது. கீழை கடற்கரையில் கி.பி. 16-ம் நூற்றாண்டு வணிகத் தொடர்பு கொண்டிருந்த அரபு வணிகர்களுக்காக இப்பள்ளி நிறுவப்பட்டிருக்கலாம்'' என்கிறார் கோபாலன்.

இக்கல்வெட்டு பொறிக்கப்பட்ட ஆண்டு கொல்லம் 699, (கி.பி. 1524) . இந்தக் கல்வெட்டு கிடைத்த இடம் கிறித்தவ ஆலயம் என்பதும், அந்தப்பகுதியின் பழைய வழங்குபெயர் என்ன என்பதும் தேடுதலுக்குரியது. அந்தப்பகுதியின் வழியே நடந்து சென்றால் கடற்கரையை ஒட்டி முஸ்லிம் ஒருவரின் சமாதி எந்தவிதமான கட்டுமானமுமின்றி மண்சமாதியாக இருக்கிறது. கோட்டார், திருவிதாங்கோடு பகுதிகளில் வசித்துவரும் முஸ்லிம்களின் நிலபுலன்கள் இன்றும் தூத்தூர் கலிங்கராஜ புரம் கடற்கரை கிராமங்களில் இருப்பதும், இவர்கள் அந்தப்பகுதிகளிலிருந்து வந்து நகரங்களில் குடியேறியவர்கள் என்பதும் இதனோடு தொடர்புபடுத்திப்பார்க்கப்படவேண்டிய ஒன்று.

கடற்கரை ஓரங்களில் வாழ்ந்த இஸ்லாமியர்கள் அதற்கு முன்னால் எந்த நம்பிக்கையில் தங்களது பண்பாட்டு வாழ்வை அமைத்துக் கொண்டார்கள் என்பதும் இதனுடன் தொடர்புடையக்கேள்வி.

நாட்டார் சமயங்களிலிருந்தும், புத்த சமய பின்புலங் களிலிருந்தும் இவர்கள் இஸ்லாத்திற்குள் நுழைந்திருக்கலாம் என்னும் அனுமானத்தை முன்வைக்கிறார் பண்பாட்டு ஆய்வாளர் செந்தீநடராசன்.

''சமணத்திலிருந்து இவர்கள் இஸ்லாத்திற்குள் வந்திருப்பதற்கான வாய்ப்பு மிகவும் குறைவு. தமிழகச் சூழலில் கடற்கரை வட்டாரங்களில் புத்த சமயம் தனது ஆழமான பிடிப்பை வைத்திருந்தது. உள்நாட்டு நிலப்பரப்புகளில் சமணம் தன்னுடைய செல்வாக்கை செலுத்தியது. கடற்கரை மக்கள் வாழ்வில் மீன் தவிர்க்கவே முடியாத ஒன்று. சமணம் புலாலை முற்றிலுமாக நிராகரிக்கிறது. புத்தம் கொல்லாமையை வலியுறுத்துகிறது. அதே நேரத்தில் புலால் உணவை அனுமதிக்கிறது. சமணத்திற்கான மற்றொரு பிரச்சனை சமணம்

கடல்பயணத்தை தடுக்கிறது. கடல்சார் மக்களுக்கு கடற்பயணம் தவிர்க்க முடியாதது. கடல்சார் மக்களின் சமயமாக புத்தசமயமே அதிகமும் இருந்திருக்க வேண்டும் என்பதும் புத்த சமயத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு அந்த மக்கள் இஸ்லாத்தைத் தங்களுடைய சமயமாக தேர்வு செய்திருக்க வேண்டும்'' என்று குறிப்பிடுகிறார் செந்நீ நடராசன் (நேர்மொழித்தகவல்).

குமரிமாவட்டத்தில் முஸ்லிம்கள் முதன்முதலில் குடியேறிய கடற்கரை பகுதிகளாக கன்னக்குறிச்சி, மிடாலம் உள்ளிட்ட இடங்களைக் குறிக்கலாம். அதன்பிறகான குடியிருப்புகளாக குளச்சல், தேங்காய்பட்டணம், கலிங்கராஜபுரம், பூவாறு என பகுதிகள் அமைகின்றன. பூவாறிலே (தற்போதைய கேரள மாநிலத்தில் இருக்கிறது) நூஹ் என்ற இறைநேசரின் சமாதியிருக்கிறது. பீரப்பா, ஞானியாரப்பா போல ஒரு இஸ்லாமியக் கவியாகவும், இறைநேசராகவும் அவர் இருந்திருக்கிறார். அவரின் வேதபுராணம் முக்கியமான நூல்.

கன்னக்குறிச்சியில் இன்று முஸ்லிம்கள் இல்லை. அந்த ஊரைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் குமரிமாவட்டத்தின் வேறு பகுதிகளில் வாழ்கிறார்கள். கன்னக்குறிச்சி ஊர் கடியப் பட்டினத்திற்கும் மணவாளக்குறிச்சிக்கும் இடைப்பட்ட பகுதியில் இருக்கிறது. முட்டம், கடியப்பட்டனம், கன்னக்குறிச்சி, மணவாளக்குறிச்சி என ஊர்கள் வரிசைப்படுகின்றன.

கடியப்பட்டினம் பழந்தமிழ் வரலாற்றுடன் நெருங்கியத் தொடர்புடையது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. சங்ககால பாண்டியமன்னர்களின் எல்லையாக கடியப்பட்டினம் இருந்தது என்னும் கருத்து இருக்கிறது. முட்டத்திற்கும் கடியப்பட்டி னத்திற்கும் இடையில் கடலின் நடுவில் ஆடுமேய்ச்சான் பாறையும், வேறு பாறைகளும் இருக்கின்றன. கடியப்பட்டினம் ஊரே பாறையின் மேல்தான் இருக்கிறது என்கிறார் ஆய்வாளர் புலவர் காசுமான் (நேர் மொழித்தகவல்). கிறிஸ்துவுக்கு முன்பிருந்தே இந்த வட்டாரங்கள் வெளிநாட்டு வர்த்தகப் பயணிகள் வந்து சென்ற இடமாக இருந்தது. அரபு நாடு வர்த்தகமும் இந்த வட்டாரத்தில் நடைபெற்றது. இஸ்லாம் அரபுலகில் தோற்றம் பெற்றபோது அதன் தொடர்ச்சியாக இங்கும் அறிமுகமாகியிருக்கலாம் என்று தெரிகிறது.

# அஞ்சுவன்னம்

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் அமைந்திருக்கும் முஸ்லிம் குடியிருப்புக்களில் அ.பீ.மு.அ.வும் ஒன்று. அ.பீ.மு.அ என்பதன் விரிவாக்கம் அஞ்சுவன்னம் பீர்முஹம்மதியா முஸ்லிம் அசோசியேசன். பெரும்பாலும் இந்தக் குடியிருப்பில் வசிப்பவர்கள் அஞ்சல் முகவரியைக்குறிப்பிடும் போது அ.பீ.மு.அ. என்று சுருக்கி எழுதுவார்கள்.

அஞ்சுவன்னம் எனும் சொல் இன்றைய நிலையில் முஸ்லிம்களின் வாழிடங்களில் ஒன்றைக் குறிப்பிடுகிறது. அஞ்சுமன் என்னும் பாரசீகச் சொல்லிருந்து வந்தது தான் அஞ்சுவன்னம் என்கிறார். கு.வை. சதாசிவ பண்டாரத்தார். அஞ்சுமன் எனும் சொல்லுக்கு மன்றம், சாத்து, குழு, சபை என்ற பொருள்கள் இருக்கின்றன. ஆய்வாளர்கள் பலரும் அஞ்சுமன் என்னும் பாரசீகச் சொல்லுடனே அஞ்சுவன்னத்தை இணைக்கின்றார்கள். தொடக்க நிலையில் தமிழகத்தில் அரபுகளின் குடியிருப்பாக இருந்த யவனச் சேரிகளே பின்னர் நத்தம், நத்தக்காடுகளாகி கல்வெட்டுக்களில் அஞ்சுவன்னம், ஆயிற்று என்கிறார் எஸ்.எம். கமால். அஞ்சுவன்னம், அஞ்சுவண்ணம் என்று இரண்டு விதமாகவும் இது உச்சரிக்கப்படுகிறது.

தமிழில் தோன்றிய முதல் பழமையான இஸ்லாமிய இலக்கியமாகக் கருதப்படுவது பல்சந்தமாலை. 12ம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் பிரதி இன்று கிடைக்கவில்லை. களவியற்காரிகை நூலில் பல்சந்த மாலையிலிருந்து பாடல்கள் சில மேற்கொள்ளப்பட்டுள்ளன. களவியற்காரிகையை பதிப்பித்த எஸ். வையாபுரிபிள்ளை பல்சந்தமாலைப் பாடல்களில் குறிப்பிடப்படும் அஞ்சுவண்ணம் என்பது முஸ்லிம்களையே குறிக்கிறது என்கிறார். அதற்கான கூடுதல் தரவுகளாக அதில் பயன்படுத்தப்படும் சொற்களான கலுபதி, அல்லா, ஆகியன முஸ்லிம்களுடன் தொடர்புடையன என்கிறார்.

பதினாறாம் நூற்றாண்டு இஸ்லாமிய இலக்கியமான ஆலிப்புலவரின் மிஃராஜ்மாலை, அஞ்சுவண்ணம் முசுலிமவர்கள் என்ற தொடரை பயன்படுத்துகிறது.

அஞ்சுவன்னம் குடியிருப்புக்கும், முஸ்லிம்களுக்கும் உள்ளத் தொடர்பை குறித்த பதிவுகளை வி. வெங்கய்யா, டி.ஏ. கோபிநாதராவ், டி.வி. சர்க்கார், டி.வி. மகாலிங்கம், கே.வி.ரமேஷ், எ.சுப்பராயலு உள்ளிட்ட வரலாற்றாய்வாளர்கள் செய்துள்ளனர்.

அஞ்சுவன்னத்தார் என்பது எல்லா காலத்திலும் முஸ்லிம்களை மட்டும் குறித்து நின்றதா என்பது பரிசீலனைக்குரியது. கி.பி. 849-ல் வெளியிடப்பட்ட கோட்டயம் செப்பேடு ஒன்று (பதிப்பாசிரியர் வீ.பு கோபிநாதராவ்) சிரியன் கிறித்தவர்களை அஞ்சுவன்னத்தார் என்று குறிப்பிடுகிறது. இந்தச் செப்பேடு குறிப்பிடும் 'மருவான்ஸபீர் ஈசோவா' எனும் பெயர் சிரியன் கிறிஸ்தவத்துடன் தொடர்புடையதுதானா என்பது குறித்த விவாதங்களும் இருக்கின்றன.

தமிழகத்தில் மிக முக்கியமான வணிகச்சாத்தான நகரத்தார்களில் செட்டியார் நானா தேசிகர், மணிக்கிராமத்தார், நகரத்தார், அஞ்சுவண்ணத்தார் என பல்வேறு பிரிவினர் இருப்பதாக இதழியல் குறிப்பு ஒன்று குறிப்பிடுகிறது (சக்தி - அக்டோபர் 1983)

இந்தக் குறிப்புகளின் வழியாக அவதானிக்கும் போது அஞ்சுவன்னம் என்பதில் இந்த மண் சார்ந்த அடையாளமும் இருக்கிறது.

இந்தியமரபில் வைதீகத்திற்குள் தங்களை அமிழ்த்திக் கொள்ளாத சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்கு வணிகக்குழுக்களிடம் அதிகம் இருந்தன. வணிகக்குழுக்களை குறிப்பிடும் சொல்லாகவே அஞ்சுவன்னம் இருந்திருக்க வேண்டும். உள்நாடு சார்ந்த வணிகச்சாத்துக்களுக்கும், வேற்று நிலத்திலிருந்து இங்கு வந்து குடியேறி வர்த்தகத்தில் ஈடுபட்ட வணிகச்சாத்துக்களுக்குமான பொதுவானச் சொல்லாக அஞ்சுவன்னம் இருந்திருக்கலாம்.

கல்வெட்டொன்று அஞ்சுவன்னத்தாரை ஆயிரத்து ஐநூற்றுவர்

என்று குறிப்பிடுகிறது. ஐம்பேராயம், எண்பேராயம், முந்நூற்றுவர்,பதிணெண்விசயத்தார், என்ணூற்றுவர். போன்று எண்ணிக்கை அடிப்படையிலான குழுக்கள் தமிழகத்தில் ஏராளம் இருந்திருக்கின்றன.

ஆரம்பநிலையில் அனைத்து வணிகச்சாத்துக்களையும் குறிப்பிடும் சொல்லாக இருந்த அஞ்சுவன்னம் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் முஸ்லிம் வணிகச்சாத்துக்களை மட்டும் குறிப்பிடும் சொல்லாக மாறியிருக்கலாம். கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு பிறகிருந்து தமிழகத்துடனான வெளி நாட்டவர் வர்த்தகத்தில் அரபுகளின் கரம் மேலோங்கியிருந்ததும். ஏழு எட்டாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சமண பௌத்த வீழ்ச்சியில் அதனைப் பின்பற்றிய மக்கள் இஸ்லாத்தைத் தேர்வு செய்ததும் தமிழ்ச்சமூகத்தில் முஸ்லிம்களின் இருப்பை வலுப்படுத்தின.

பழந்தமிழகத்தில் அனைத்து வெளிநாட்டவரையும் குறிப்பிட பயன்பட்ட யவனர் என்ற சொல் முஸ்லிம்களை மட்டுமே குறிப்பிடும் சொல்லாக மாறியதும், பௌத்தத்துடன் தொடர்புடைய சொல்லான சோனகர் என்பது முஸ்லிம்களுக்கானதாக மாறியதும், பௌத்த சமணங்களுடன் தொடர்புடைய பள்ளி, தொழுகை, உள்ளிட்ட பண்பாட்டுச் சொல்லாடல்கள் முஸ்லிம்களுக்குரியதாக மாறியதும் இங்கு கவனத்திற்குரியது. இவற்றுடன் இன்னும் அழுத்தமானதாக வைதீக எதிர்ப்பும், வர்ண அடுக்குக்கு வெளியே தனித்தக் குடிகளாக இயங்கியதும் சமணம், பௌத்தம், இஸ்லாம் இவற்றுக் கிடையிலான இசைவுபபோக்கினை தமிழ்ச்சூழலில் ஏற்படுத்தின.

நான்கு வர்ண அடுக்குக்கு வெளியிலான ஐந்தாவது பிரிவு என்பதான அர்த்தத்தையும் அஞ்சுவன்னம் என்ற சொல் சுமந்து நிற்கிறது. வணிகச் சாத்துக்களாக செயல்பட்டவர்கள் அரசனையும், அந்தணர்களையும் வணங்குவதில்லை என்பதும், முஸ்லிம்கள் இறைவனைத்தவிர வேறு வணங்குவதற்குரியவன் யாருமில்லை என்னும் கோட்பாட்டை உடையவர்கள் என்பதையும் இங்கு சேர்த்துக் கொள்ளலாம்.

தக்கலை அஞ்சுவன்னத்தாரின் ஆரம்பகட்ட தொழில்

நடவடிக்கையாக நெசவு இருந்தது . இதை தவிர பாய் உற்பத்தி, சிறிதளவு விவசாயம், போன்ற தொழில்களும், சிறுவணிகமும் அஞ்சுவன்னத்தாரின் தொழில்களாய் அமைந்திருக்கின்றன. நெசவுத் தொழிலுடன் தொடர்புடைய பஞ்சு கொள்முதலைச் செய்யவும், அதனை பகிர்ந்தளித்து வேலை வாங்கவும் தனியாக நபர்கள் இருந்திருக்கிறார்கள். தக்கலை அஞ்சுவன்னத்தில் ஒரு குடும்பத்தின் பெயர் பஞ்சு குடும்பம்.

தமிழகத்தில் முஸ்லிம்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த இடங்களுக்கு எல்லாம் அஞ்சுவன்னம் என்ற பெயர் இல்லை. பல இடங்களில் நெசவுத்தொழில் நடைபெற்ற முஸ்லிம் குடியிருப்புகள் பாவோடி என்றும் அழைக்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம், மானாமதுரை போன்ற வட்டாரங்களில் பாவோடிகள் அதிகம் இருந்திருக்கின்றன.

தென் தமிழகத்தில் , குறிப்பாக, குமரி மாவட்டம், திருநெல்வேலி, தூத்துக்குடி வட்டாரங்களில், அஞ்சுவன்னமும், நெசவும் இணைந்தே இருப்பதைக் காண முடிகிறது. தென்காசியில் இருக்கின்ற முன்னூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தொழுகைப்பள்ளி அஞ்சுவன்னப்பள்ளி என்றே இன்றும் அழைக்கப்படுகிறது. கடையநல்லூரில், இருக்கின்ற பெரிய தெருவின் பழைய பெயர் அஞ்சுவன்னப் பெரிய தெரு.

நெசவு என்னும் தொழிலுடன் அஞ்சுவன்னம் இணைத்துப் பார்க்கப்பட்டாலும் அஞ்சுவன்னம் என்பது அதன் தொடக்க நிலையில் வணிகத்துடனேயே தொடர்புப்படுத்தப்பட்டுவந்தது. மதுரையில் சோனகர்களது அஞ்சுவன்னம் 9-10-ம் நூற்றாண்டுகளிலும், சேது நாட்டின் கடற்கரைப்பகுதிகளில் பனிரெண்டு, பதிமூன்றாம் நூற்றாண்டுகளில் அரபுகளது அஞ்சுவன்னமும் இருந்ததை ஆய்வாளர் எஸ்.எம்.கமால் குறிப்பிடுகிறார்.

நகரத்தார் அடிப்படையில் வணிகர்களாகவே இருந்தனர். பண்டைக் காலத்தில் வணிகம் செய்யும் குழுக்களுக்கும் நகரம் என்ற பெயரும் உண்டு என்பதை சோழர் கால கல்வெட்டுக்களை மேற்கொள்காட்டி பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (தமிழர் நாட்டுப்பாடல்கள்) நகரத்தாரில் ஒரு

பிரிவினராக அஞ்சுவன்னத்தார் இருந்தார்கள் என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டோம்.

அஞ்சுவன்னத்தினர் நடத்திய வணிகத்தில் முக்கிய இடத்தினை துணிவகைகளும், பாய்களும் பெற்றிருந்தன. வணிகத்திற்குத் தேவையான இந்தப் பொருள்களை உற்பத்தி செய்யும் இடங்களாக தொழில் சார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அஞ்சுவன்னங்கள் இருந்திருக்க வேண்டும். உற்பத்தியில் ஈடுபட்டிருந்த அஞ்சுவன்னத்தாரும், வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்குமிடையிலான பரிவர்த்தனையில் ஈடுபட்டிருந்தவர்களை குறிப்பட்ட தரகனார் என்ற பிரிவினர் செயல்பட்டிருக்கிறார்கள். தக்கலை அஞ்சுவன்னத்தில் தரகனார் என்ற பிரிவு தொழிற்பட்டிருக்கிறது. இவர்கள் நேரடி உற்பத்தியில் ஈடுபடாமல் தரகு வர்த்தகர் என்ற நிலையில் மேலிருந்தது செயல்பட்டதனால் சமூகத்தலைமையும் இவர்கள் வசமே இருந்திருக்கிறது. நெசவுடன் தொடர்புடைய ஆளூர், கோட்டார், மேலப்பாளையம் போன்ற ஊர்களிலும் தரகனார் பட்டம் உண்டு.

இராமநாதபுரம் சமஸ்தானத்தின் மேனுவலை (1928) எழுதிய ராஜாராம் ராவ் (பக்கம் 162. 170, 171) நெசவுத்தொழில் ஈடுபட்டவர்களைக் குறிப்பிடும்போது. கீழ்நிலையில் இருந்த சாதாரண இஸ்லாமியர் இத்தொழிலில் ஈடுபட்டனர் என்கிறார். இராமநாதபுரம், கீழக்கரை, எக்குடி, பனைக்குளம், கமுதி, கடலாடி, அபிராமம், முதுகுளத்தூர், பமரமக்குடி, கோட்டைப்பட்டினம், வெளிப்பட்டினம் ஆகிய ஊர்களில் இஸ்லாமியர் நெசவுத்தொழிலும், சாயங்காய்ச்சுதலிலும் ஈடுபட்டனர் என்கிறார்.

தக்கலையைச் சுற்றியுள்ள இதர முஸ்லிம்கள் அஞ்சுவன்னம் சமூகத்தினரை குறிப்பிட பசை கஞ்சி என்ற சொல்லை பயன்படுத்துகிறார்கள். நெசவுத் தொழிலில் ஈடுபட்ட தக்கலை அஞ்சுவன்னத்தார் அதற்குரிய பசையைக் கூழாக்கி கல்லுத் தொட்டி ஒன்றில் வைத்திருப்பார்கள். அன்றைய தேவைக்கு மிஞ்சிய பசைக்கூழ் அதில் கெட்டியாகி இருக்கும். மறுநாள் காலையில் அதில் ஒரு துண்டும், கருப்புக்கட்டியில் ஒரு துண்டுமாக சேர்த்து காலை உணவை முடித்துக் கொள்வார்கள்.

இதை வைத்துத்தான் பசைகஞ்சி என்ற அடையாளம்.

முஸ்லிம் என்னும் சமூக அடிப்படையில் லெப்பை என்ற பிரிவுக்குள்ளும், சமயப் பிரிவுக்குள் இமாம் ஷாபியின் சட்டதிட்டங்களைப் பின்பற்றுபவர்களாகவும் அஞ்சுவன்ன முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.

லெப்பை என்னும் சொல் கீழ்படிதல், அடிமை என்கிற அர்த்தங்களுடன் தொடர்புடையது. முஸ்லிம்களின் சமயக்கடமைகளில் ஒன்றான ஹஜ் என்னும் கடமையை நிறைவேற்ற ,மக்காவின் கஅபா என்னும் வழிபாட்டு இடத்துக்கு செல்கின்ற முஸ்லிம்கள் உச்சரிக்கும் முக்கியமான சொல் இது. (லப்பைக் அல்லாகும்ம லைப்பைக்) அழைப்பு ஏற்றுக் கொண்டேன், இறைவா உன் அழைப்பு ஏற்றுக் கொண்டு இதோ வந்தேன் என்பது பொருள்.

தமிழகத்தில் இஸ்லாமின் தொடக்க நிலையில் சமயக்கல்வியை கற்றுக் கொடுத்தவர்களும், சமயக்கல்வியைக் கற்றவர்களும் லெப்பை என்று அழைக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது. யாகோபு சித்தரது தனிப்பாடல் ஒன்றில் நால்வேத லெப்பை மார் என்னும் தொடர் ஒன்று வருகிறது. தமிழ் முஸ்லிம் மரபில் சமயப் பணியாளர்களைக் குறிப்பிட லெப்பை என்று குறிப்பிடுகின்றனர். தக்கலை அஞ்சுவன்னம் ஜமாஅத்தில் உறுப்பினர் மீதான ஊர் விலக்க ஒழுங்கு நடவடிக்கையில் ஜமா அத் சிப்பந்திகள் சேவை நிறுத்தி வைத்தல் என்னும் மொழிதான் பயன்படுத்தப்படுகிறது. ஜமாஅத் சிப்பந்திகளில் ஒருவராக லெப்பையும் வருகிறார். ஆங்கில அரசு 1881 வெளியிட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு லெப்பைகளைப் பற்றி பின்வரும் தகவல்களைத் தருகிறது. அராபிய இரத்தக் கலப்புடன் கூடிய மதம் மாறிய திராவிடர்களும், இந்துக்களுமான இவர்கள் சுறுசுறுப்பும் முன்னேற்ற மனப்பாங்கும் மிக்க வியாபாரிகள் எனவும் இவர்களில் பெரும்பான்மையர் வணிகத்திலும், கொடிக்கால் விவசாயத்திலும், சிலர் நெசவு, சங்கு, முத்துக்குளித்தல், சமயப்பணி ஆகிய தொழில்களிலும் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

1921- ம் ஆண்டுக்கான மதுரை கெஜட்டும், 1898 - ம்

ஆண்டுக்கான இராமநாதபுரம் கெஜட்டும் இதனை ஒட்டியே லெப்பைகள் குறித்தத்தகவலைத் தருகின்றன. பாவோடிகள் என்றழைக்கப்பட்ட நெசவாளர்கள் ராவுத்தர் சமூகப்பிரிவுக்குள் இமாம் அபூஹனிபாவின் சட்டதிட்டங்களைப் பின்பற்றுகின்ற ஹனபி என்னும் சமயப்பிரிவுக்குள்ளும் வருகிறார்கள். சோதுகுடி வட்டாரத்தில் பாஞ்ச் பீர்தர்காவும், மானாமதுரை வட்டாரத்தில் ஐந்து பெண்களின் அடக்கவிடமாக இருக்கின்ற அஞ்சனம்மாள் தர்காவும் கவனத்திற்குரியன. தமிழக முஸ்லிம்களை இரண்டு வகையினராகக்கொள்ளலாம். தமிழை தாய்மொழியாக கொண்டவர்கள், உருது மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களில் லெப்பை, ராவுத்தர், மரக்காயர் ஆகியவர்கள் வருகிறார்கள். ராவுத்தர் எனப்படுபவர்கள் குதிரை வர்த்தகத்துடனும், மரக்காயர் எனப்படுபவர்கள் கடல் வர்க்கத்துடனும் தொடர்புடையவர்கள், மரக்காயர், லெப்பை அஞ்சு வன்னத்தார், ராவுத்தர் போன்றவைகள் ஆட்சியாளர்களால் கொடுக்கப்பட்ட பட்டங்களாகவும், ஏற்படுத்திய சமூகப்பிரிவுகளாகவும் இருந்தன.

அரபு நாடுகள் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இங்கு வந்து குடியேறிய குடிகளுக்கு மன்னர்கள் குடியிருக்க நிலங்களும், பட்டமும் வழங்கினர். காயற்பட்டினங்கள் போன்றவற்றை இவற்றுடன் தொடர்புப்படுத்திப் பார்க்க முடியும். ஜெயவீர ராஜகாரு நாயணி மன்னன் மரக்கலராயர் என்னும் பட்டம் வழங்கியக்குறிப்பை எம்.ஆர்.எம். அப்துல் ரஹீம் குறிப்பிடுகிறார். (முஸ்லிம் தமிழ்ப் புலவர்கள்). இஸ்லாம் அரபு நாடுகளில் நிலைத்தபிறகு பல்வேறு பகுதிகளில் வேகமாக சென்றடைந்தது. பல்வேறு பின்புலத்திலிருந்து வந்து சேர்ந்தவர்கள் சமய ரீதியான தேவைகளுக்கும், வாழ்வியல் ரீதியான தேவைகளுக்குமான சட்ட நெறிகளை வகுக்க வேண்டியத் தேவை ஏற்பட்ட போது இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் உருவானார்கள். சட்ட அறிஞர்கள் பலர் இருந்தாலும் நான்கு பேர்கள் இஸ்லாமிய மரபில் முக்கிய மானவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

அபூஹனிபா. மாலிக், ஷாபி, ஹன்பல் ஆகிய இந்நால்வரும்

உருவாக்கிய சட்டதிட்டங்கள் அவர்களின் பெயரலயே அழைக்கப்பட்டு பின்பற்றப்படுகின்றன. இந்தியாவிலும், தமிழகத்திலும் பெரும்பான்மை நிலையில் ஹனபி சட்டதிட்டங்களும் அதனைப் பின்பற்றுபவர்களும், சிறுபான்மை நிலையில் ஷாபி சட்டதிட்டங்களும் அதனைப் பின்பற்றுபவர்களும் இருக்கின்றனர். ஹனபி மற்றும் ஷாபி பிரிவினரிடைய திருமண உறவுகள் பெரும்பாலும் இருப்பதில்லை.

ஹனபி சட்டதிட்டங்கள் இந்தியாவினை ஆட்சி செய்த முஸ்லிம் ஆட்சியாளர்கள் பின்பற்றிய சட்டப்பிரிவாக இருந்ததால் ஆட்சி அதிகார பலமும் இதற்கிருந்தது. ஷாபி சட்டத்திட்டங்கள் பிரச்சார நிலையில் வந்து சேர்ந்தவை.

தமிழகத்தில் லெப்பை, மரக்காயர் சமூகப்பிரிவினர் ஷாபி சட்ட மரபினையும், ராவுத்தர் பிரிவினர்ஹனபி சட்டமரபினையும் பின்பற்றுகிறார்கள்.

ராவுத்தர், மரக்காயர் சமூகப் பிரிவுகளைப் பொறுத்தவரை தங்களை விட கீழ்நிலையில் இருப்பவர்களாகவே லெப்பைகளைக் கருதுகிறார்கள். லெப்பைகள், ராவுத்தர்கள், மரைக்காயர்கள் இவர்களின் தோறக்கக்கதைகள் அரபு நாட்டுடன் தொடர்புபடுத்தப்பட்டன. ஆரம்ப நிலையில் அங்கிருந்து இங்கே குடும்பமாகவும், தனியாகவும் குடியேறியவர்கள், இங்கு திருமண மற்றும் குடும்ப உறவுகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். ( நாகூர் அருகில் மாலுமி என்னும் முஸ்லிம் சமூகப்பிரிவினர் வசித்து வருகிறார்கள்). கால வளர்ச்சி நிலையில் தங்களை தமிழ்நிலைப்பட்ட குடிகளாகவே அடையாளப்படுத்திக் கொண்டனர். இவர்களின் பயன்பாட்டு மொழிகளில் தமிழ்ச் சொற்களும், அரபு உள்ளிட்ட வேற்று மொழிச் சொற்களும் கலந்து நிற்கின்றன.

ராவுத்தர் மரபினர் அல்லது ஹனபி மரபினர் பயன்படுத்துகின்ற உறவுச் சொற்கள் ராதி, ராதா (தந்தையின் பெற்றோர்கள்) நன்னி, நன்னா (தாயாரின் பெற்றோர்) என்கின்றனர் அப்பாவின் அம்மாவின் தந்தையை அப்பா என்றும் அம்மாவின் தாயாரை அம்மம்மா மாமியாரை குப்பி, மாமாவை

மாமு என்று அழைக்கிறார்கள். அம்மாவின் தங்கையை காலா என்கிறார்கள். அப்பாவின் தம்பியை சின்னத்தா, அம்மாவின் அக்காவை பெரியம்மா, அப்பாவின் அண்ணனை பெரியத்தா என்கிறார்கள்.

பொதுவாகவே ஹனபி மரபினரை வழக்கில் அத்தா மரபு என்றுதான் குறிப்பிடுகிறார்கள். அத்தா என்பது எந்த மொழிக்குரியது என்பதில் வேறுபட்டக் கருத்துக்கள் இருக்கின்றன.

அத்தா என்னும் சொல் துருக்கியிலிருந்து வந்தது என்று ஒரு கருத்து அவர்களிடம் இருக்கிறது. தமிழ்மரபில் அத்தா என்னும் நெடுங்காலமாகவே வழக்கிலிருக்கிறது. பக்தி இலக்கியப்பாடலொன்று பித்தா பிறைசூடி, என்று தொடங்கி அத்தா என்று தொடரும். சங்க இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகையில் தந்தையைக் குறிப்பிட அத்தன் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. துருக்கி மரபிலும், மூத்தவர்களை, தலைவர்களைக் குறிப்பிட அத்தா என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். துருக்கியின் தந்தையான முஸ்தபா கமாலை அங்குள்ள மக்கள் அத்தா துருக்கி என்றே அழைப்பதாகத் தெரிகிறது.

அதுபோல் தாயைக்குறிப்பிட ஷாபி மரபினர் பயன்படுத்தும் சொல்லாகிய உம்மா என்பது மூலத்தில் அரபு மொழிச் சொல். சிறிய தந்தையைக் குறிப்பிட பயன்படுத்தும் சச்சா என்னும் சொல் உருது மொழியிலிருந்து பெறப்பட்டது. பொதுவாக தமிழ் முஸ்லிம்களிடம் முன்னோர்களான இறைநேசர்களை அப்பா என்னும் சிறப்புப் பெயர் வைத்து அழைக்கும் மரபு இருக்கிறது. பீரப்பா, உமறப்பா, ஞானியாரப்பா, குணங்குடியப்பா என்பதெல்லாம் இத்தகையப் பண்பாட்டு மரபின் தொடர்ச்சி. அரபு அல்லது வேற்றுக்கலப்பின் வழியாக உருவாகி பிற்காலத்தில் தமிழ் அடையாளத்தை முன்னிறுத்திய குடிகளாகவே லெப்பைகளும், மரைக்காயர்களும், ராவுத்தர்களும், அஞ்சுவன்னத்தாரும் இருக்கின்றனர்.

தக்கலை அஞ்சுவன்ன மரபின் பண்பாட்டு அடையாளமாக, பீரப்பா இருக்கிறார். பீரப்பாவின் குடும்ப மரபு நெய்த்துடன்

தொடர்புடையதாக நம்பப்படுகிறது. தென்காசியை பிறப்பிடமாகக் கொண்ட பீரப்பா அவர்கள் அங்கிருந்து புலம் பெயர்ந்து நிறைவில் குமரிமாவட்டம் தக்கலையில் வந்து தங்கினார்கள். பீரப்பாவின் பாடல்களில் நெசவு சார்ந்த குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பீரப்பா அவர்கள் நெசவுத் தொழிலை மேற்கொண்டார் என்பதற்கான வாய்மொழி மரபு ஒன்றும் இருக்கிறது. பீரப்பா இறைவனை முறையாகத் தொழுவதில்லை அவரிடம் இஸ்லாமிய வழிபாட்டுப் பேணுதல்களும் இல்லை என்று ஒரு குற்றச்சாட்டு எழுகிறது. அதுகுறித்து விசாரிக்க இஸ்லாமிய சமயப்பணியில் அன்றைய நிலையில் தலைமைவகித்த சதகத்துல்லா அப்பா தக்கலைக்கு வருகிறார். அவர் வந்து பீரப்பாவை சந்தித்து மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுக் குறித்து விசாரித்தார். அப்பொழுது பீரப்பா அவர்கள் தறியில் நெய்து கொண்டிருந்தார்கள். பீரப்பா தான் நின்று நெய்து கொண்டிருந்த காக்குழியைப் பார்க்குமாறு சதக்கத்துல்லாவிடம் கூறுகிறார்கள். சதகத்துல்லா காக்குழியைப் பார்க்கும் போது காக்குழியில் முஸ்லிம்களின் புனித இடமான மக்கா தெரிந்தது என்றும் அதில் பீரப்பா தொழுது கொண்டிருந்தார் என்றும் வாய்மொழி மரபொன்று இருக்கிறது.

பீரப்பா அவர்கள் எழுத்துக்களிலும் நெசவு சார்ந்த சொல்லாடல்கள் இடம் பெற்றுள்ளன. தன்னுடைய பிழைகளை இறைவன் போக்கிட வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கும் போது, மணைபடும் பருத்தி போலே வன்பிழை யனைத்தும் போக்கி (ஞானப்புகழ்ச்சி.195) என்று குறிப்பிடுகிறார்.

இறைவனும் தானும் எப்படி இருக்கிறோம் என்பதைக் கூறிப்பிடும் போது நெசவு சாந்த்த சொல்லாடலை பயன்படுத்தி எடுத்துரைக்கிறார்.

ஆவென்றும் ஈயயன்றும் ஊவென்றும் நின்றஉனை
யாரென் றிறைஞ்ச வடியேன்
பாவென்றும் நூலென்றும் பகராமல் வேதியர்கள்
பகர்வார்கள் ஏனோ அறியேன்
(ஞானப்புகழ்ச்சி 125)

இந்தப்பாடலில் பீரப்பா பயன்படுத்தும் பாவு, நூல் இரண்டும் நெசவு சார்ந்த சொற்கள். அடிப்படையில் இரண்டுமே நூல்தான். குறுக்கு நெடுக்காக பயன்படுத்தப்படும் போது ஒன்று பாவு என்றும், மற்றொன்று நூலென்றும் குறிப்பிடப்படுகிறது. பீரப்பா தனக்கும் இறைவனுக்குமான உறவு நிலையைக்குறிப்பிட இந்த சொற்களைக் கையாள்கிறார்.

மார்க்க அறிஞர்களால் பத்வா கொடுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட மன்சூர் ஹல்லஜின் புகழ்பெற்ற வாசகம் 'நானே அவன்' பீரப்பாவின் புகழ் பெற்ற வாசகம் 'பாவும் நூலும்'.

பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலும் நேரடியான வணிகச் சாத்துக்களுடன் தொடர்புடையதாக இருந்த அஞ்சுவன்னம் அதன் பிந்தைய காலகட்டங்களில் நெசவும், வணிகமும் இணைந்த அதாவது உற்பத்தியும், வணிகமும் இணைந்த சொல்லாடலாய் மாறி ஒரு கட்டத்தில் நெசவு சார்ந்த அடையாளமாக மட்டுமே மாறிப்போனது. தற்போதைய அஞ்சுவன்னக்குடியிருப்புகள் முழுக்க தமிழ் நிலைப்பட்ட ஒன்றாகவே இருக்கின்றன.

# பீர்முஹம்மது அப்பா

*பீரப்பா என்று மக்களால் அன்புடன் அழைக்கப்படும் சூஃபிக்கவிஞர். பிறந்த ஊர் திருநெல்வேலி மாவட்டம் தென்காசி. பீரப்பாவின் முழுப்பெயர் பீர்முஹம்மது. கன்னியாகுமரிமாவட்டம் தக்கலையில் பீரப்பா அவர்களின் சமாதி இருக்கிறது. பீர்முஹம்மது என்னும் பெயரைத் தன்னுடைய குரு வழங்கியதாக பீரப்பா தன்னுடைய பாடல் குறிப்பு ஒன்றில் பதிவு செய்கிறார்.*

*பிறகு நட்போடு குருவெனக்கிடு பேரு பீருமுஹம்மதன் - (ஞானப்புகழ்ச்சி - 25;2*

*அப்படியெனில் பீரப்பாவின் இயற்பெயர் என்ன? பீரப்பாவின் இயற்பெயரும் குரு வழங்கியப் பெயரும் ஒன்றுதானா? என்று தெரியவில்லை. பீரப்பாவின் தந்தை பெயர் சிறுமலுக்கர் என்று பீரப்பா தன்னுடைய பாடல்களில் ஆங்காங்கே பதிவு செய்கிறார்.*

*தென்காசி நாடு சிறுமலுக்கர் என்னுமவர் தன் பாலன் ....( ஞானப்புகழ்ச்சி 23.2 )*

*பீரப்பாவின் தாயார் பெயர் ஆமினா என்பதாக பத்திரிகைக்குறிப்பு ஒன்றினை மேற்கோள் காட்டி குறிப்பிடும் ஆய்வாளர் தக்கலை எம்.எஸ்.பஷீர் அதனை மறுக்கவும் செய்கிறார். (பீரப்பாவின் ஞானப்புகழ்ச்சி பன்முகப்பார்வை - தொகுப்பு நூல் - பக் 7,16)*

*பீரப்பா அவர்களின் பாட்டனார் பெயர் வாவாஞ்சி என்று மற்றொரு பாடல் குறிப்புக் கூறுகிறது.*

*வேதகுல வாவாஞ்சிப் பேரனான வேந்ததெரனும் சிறுமலுக்கர் ஈன்ற பாலன் - (திருமெய்ஞ்ஞான சரநூல் - பாடல் 30) ஞானமாமேதை , மெய்ஞானமேதை, ஷெய்கு, ஒலி, காமில் ஒலி என்று பல்வேறு சிறப்புப் பெயர்களால் பீரப்பா அவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.*

*பீரப்பா அவர்களின் காலம் 14-ம் நூற்றாண்டிற்கும், கி.பி. 17-ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் என்று பீரப்பா அவர்களின் பெயரால் செயல்பட்டுவரும் தக்கலை, அஞ்சுவன்னம் பீர்முஹம்மதியா முஸ்லிம் அசோஸியேசன் சார்பில், வெளியிடப்பட்டிருக்கும் மெய்ஞ்ஞானப்பாடல்கள் முன்னுரை கூறுகிறது. முன்னூறு ஆண்டுகாலம் அவர்கள் வாழ்ந்தார்கள் என்று அந்நூலில் குறிப்பிடப்படுகிறது. பீரப்பாவின் பாடல் தருகின்ற அகச்சான்றுகள் பீரப்பாவின் காலம் 16-ம் நூற்றாண்டின் கடைசியும் 17-ம் நூற்றாண்டின் தொடக்கமுமாக இருக்கலாம் என்று கூறுகின்றன.*

*பீரப்பாவின் இலக்கியங்களில் ஒன்றான திருநெறி நீதம் ஹிஜிரி 1022 (கி.பி. 1613) ல் பாடப்பட்டதாக அகச்சான்று குறிப்பிடுகிறது. திருநெறி நீதம் பாடல் 17)*

*பீரப்பாவின் காலம் பற்றிக் குறிப்பிடும் ஆய்வாளர் ந.மம்மது அவர்கள், அப்பாவையும், தாளவேந்தர் சந்தக்கவி வித்தகர் அருணகிரி நாதரையும் சமகாலத்தவராகக் கருதலாம் (கி.பி. 15-16-ம் நூற்றாண்டு) ஆயினும் மூத்தவர் அருணகிரிநாதர் என்று கூறுகிறார். (சூஃபிகள் தர்ஹாக்கள் சில மாற்று உரையாடல்கள் - தொகுப்பு நூல் பக்கம் 50, கீற்று வெளியீட்டகம் - 2003) இருவரின் பாடல் அமைப்பில் தொழிற்படுகின்ற இசைக் கூறுகளை மையப்படுத்தி ஆய்வாளர் ந.மம்மது இம்முடிவுக்கு வருகிறார். பீரப்பாவின் மொழி நிலையை வைத்து அவரது காலத்தை கி.பி. 1350-க்கும் 1650க்கும் இடையில் வைக்கிறார் முனைவர். நசீம்தீன். (பீரப்பாவின் ஞானப்புகழ்ச்சி பன்முகப்பார்வை பக்கம் - 33)*

*தென்காசியில் பிறந்த பீரப்பா அவர்கள் சிறுவயதிலேயே சொந்த ஊரிலிருந்து வெளியேறிவிட்டார்கள். மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியெங்கும் பீரப்பாவின் பயணம் நிகழ்ந்திருப்பதாகவும், ஆனைமலைப்பகுதியில் இருக்கும் பீர்மேடு என்னும் பகுதியிலிருந்து அவர்கள் தவம் புரிந்ததாகவும் அவ்வாறு தவம் புரிந்தனாலேயே அப்பகுதிக்கு பீர்மேடு என்னும் பெயர்வந்ததாகவும் வாய்மொழிக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.*

*பீரப்பா அவர்களின் குடும்ப வாழ்க்கைப் பற்றியும் உறுதி செய்யப்படாதத் தகவல்களே கிடைக்கின்றன. இறை நேசர்களின்*

தலைவர் எனப்படும் முஹியத்தீன் அப்துல் காதிர் ஜீலானி பெயரில் இயங்கும் காதிரியா தரீகாவின் மரபை பீரப்பா பின்பற்றியதாகவும் தெரிகிறது. பீரப்பாவின் வரலாற்றை அறிந்து கொள்வதில் வாய்மொழி தரவுகள் மட்டுமே அதிகமிருக்கின்றன. பீரப்பாவின் வயதை முன்னூறுவரை கொண்டு செல்லும் தன்மையும் காணப்படுகிறது. பீரப்பாவின் வாழ்வு முடிவு குறித்த தொன்மங்களும் வித்தியாசமானவை. சமாதி நிலையை அவை சுட்டுவதாகவும் இருக்கிறது.

பீரப்பா அவர்கள் நிறைவாக வந்து தங்கியது தக்கலையில். முஸ்லிம்கள் அந்தக்கால கட்டத்தில் தக்கலையில் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வந்தார்கள். தக்கலையில் தற்பொழுது முஸ்லிம் குடியிருப்பு அமைந்திருக்கும் பகுதியின் மிக அருகிலேயே தென்திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் தலைநகராக இருந்த பத்மனாபபுரம் அமைந்திருக்கிறது. அங்கிருந்த மன்னர், அவர்தம் குடும்பத்தினர் ஆகியோருக்கு துணி நெய்து கொடுப்பதற்காக தென்காசியில் இருந்து நான்கு முஸ்லிம் குடும்பங்கள் கொண்டு வரப்பட்டனர். தென்காசி முஸ்லிம்கள் கசவு நேரியல், கசவு சாரி, முண்டு நெய்வதில் தேர்ச்சிப் பெற்றிருந்ததால் மன்னர் அவர்களை அழைத்துக் குடியமர்த்தினார். தன்னுடைய ஊர்க்காரர்கள் இங்கு இருந்ததால் பீரப்பாவும் தக்கலை வந்தார். தமிழ்ச் சூழலில் உருவான இறை நேசர்கள் பலரும் தங்களது ஊர், உறவுக்காரர்கள் மத்தியிலேயே வாழ்வின் இறுதிப் பகுதிகளை நிறைவு செய்துள்ளனர் என்கிறார் திரு. பி.எம். அப்துல்கபூர் (நேரடியாகக் கேட்டறிந்தத்தகவல்). இறைஞானத்திலும் இலக்கியத்திலும் வரலாறு படைத்த அப்பா அவர்கள் ரஜப் மாதம் பூரணப் பதினான்கு வெள்ளிக்கிழமை இரவு பூதவுடல் நீத்தார்கள் (ஞானமாமேதை ஷெய்கு பீர்முஹம்மது ஒலியுல்லா (ரலி) அவர்களின் மெய்ஞ்ஞானப் பாடல்கள், அ.பீ.மு.அ தக்கலை 1995)

தமிழ் இலக்கிய மரபில் பதிணெண் சித்தர்களின் பாடல்கள் எனத் தொகுக்கப்பட்டுள்ள பெரிய ஞானக்கோவையில் பீரப்பாவின், ஞனரத்தினக் குறவஞ்சி இடம் பெற்றிருக்கிறது. ஞானப்புகழ்ச்சி தொடங்கி ஞான மலைவளம் வரை கிடைத்தும் கிடைக்காமலும் இருக்கின்ற பாடல் தொகுப்புகளில் பீரப்பா

சேகரமாக்கியிருக்கும் பாடல்களின் எண்ணிக்கை பதினெண்ணாயிரம் என்று மதிப்பிடப்படுகிறது.

ரோசு மீசாக்கு மாலை, திருநெறி நீதம், ஞானப்பால், ஞானப்பூட்டு, ஞான ஆனந்தக் களிப்பு, மிகுராசுவளம், ஈடேற்றமாலை, ஞான மணிமாலை, ஞானக்குறம், ஞானரத்தினக் குறவஞ்சி, பிஸ்மில்குறம், மஅரிபத்துமாலை, ஞான மூச்சுடர் பதிகங்கள், ஞான நடனம், மெஞ்ஞான அமிர்தக்கலை, திருமெஞ்ஞான சரநூல் ஆகியன பீரப்பா எழுதியவற்றுள் நமக்குக் கிடைக்கும் பாடல்தொகுப்புகள் இவற்றுள் ரோசு மீசாக்கு மாலை இன்னும் அச்சுவடிவம் பெறவில்லை.

பீரப்பா எழுதியவற்றுள் கிடைக்கப்பெறாத நூல்களாக ஞானத்திறவுகோல், ஞானதித்தி, ஞான உலக உருளை, ஞானக்கண், ஞானமலைவளம் ஆகியவற்றை தக்கலை எம்.எஸ். பஷீர் குறிப்பிடுகிறார். (பீரப்பாவின் ஞானப்புகழ்ச்சி பன்முகப்பார்வை - பக்கம் 8, பீரப்பா கல்வி மையம், 1993)

பீரப்பாவின் பாடல்களில் ஊடாடி நிற்கும் இறை தேட்டம், அது சார்ந்த அனுபவம், என்னும் ஆன்மிகப் பண்புகளின் ஊடாக கிடைக்கும் செய்திகளிலிருந்து நாம் பெற்றுக் கொள்வது, வாழ்வின் கணங்களை வாழ்வதன் வழியாகவே பீரப்பா கடந்து செல்ல விரும்புகிறார். வாழ்விலிருந்து அன்னியப்பட்டு, தனிமையின் ரகசியக் குகைக்குள் பீரப்பா தன்னை சிறைப்படுத்திக் கொள்ளவில்லை.

வாழ்வை அதன் வலிகளோடும், அதன் சிக்கல்களோடும், அதன் அழகோடும் பீரப்பா எதிர்கொள்வதைப் பாடல்களின் குறிப்புகள் உணர்த்திச் செல்கின்றன. 'மரமாகிலேன் மண்ணுங் கல்லாகிலேன் மனுவாக்கி யென்னைத் தரமாய் வரமருள் தந்தாள் எவர்க்கென்றுந் தானவேனே' (ஞானப்புகழ்ச்சி 183). என்பதுதான் மனிதப்பிறப்புப்பற்றிய பீரப்பாவின் பதிவு.

தன் சொந்த ஊரான தென்காசியிலிருந்து பெயர்ந்து மேற்குத்தொடர்ச்சி மலையின் அடர்க்காடுகளில் தவ அனுபவங்களைப் பெற்ற பீரப்பா அந்த அனுபவச் செய்திகளைக் கொண்டு மக்களிடம் தான் வருகிறார். முஹம்மது நபி அவர்களின் வாழ்க்கைப் பதிவு செய்து வைத்திருக்கும் தகவலும் இதுதான்.

தனிமைகளில் கிடைத்த ஆன்மிக அனுபவங்களுடன் மக்களிடம் வருதல் என்றுதான் நபியின் ஹிராகுகை அனுபவங்கள் நமக்குச் சொல்லுகின்றன. புத்தரும் போதிமரத்திலிருந்து மக்களை நோக்கி தான் வந்தார். வாழ்க்கை பரிபூரணத்தன்மையுடனும் அதன் தேவைகளைப் பூர்த்தி செய்தத் தன்மையுடனும் இருக்க வேண்டும். என்று பீரப்பா விரும்புகிறார். தறை மீது செல்வம், தவறாத வாழ்வு (ஞானப்புகழ்ச்சி.42) இது பீரப்பா இறைவனிடம் வைக்கின்ற வேண்டுகோள்.

மனித வாழ்க்கையின் முக்கியத் தேடலாக அன்பு இருக்கிறது. மனிதர்கள் அன்பு செய்தல் (ஞானப்புகழ்ச்சி.60) மனிதர்கள் சினம் கொள்ளாது இருத்தல் (ஞானப்புகழ்ச்சி.62), இறைவன் அன்பு செய்தல், இறைவன் சினம் கொள்ளாதிருத்தல் (ஞானப்புகழ்ச்சி.63) தீவினைகள் அற்ற வாழ்வு (ஞானப்புகழ்ச்சி 73), என்று இறைவன் முன் பீரப்பா தன் விருப்பங்களைப் பதிவு செய்கிறார். பசியற்ற வாழ்வு, வறுமையற்றவாழ்வு, இவற்றை வேண்டுகிறார் (ஞானப்புகழ்ச்சி.347) இறைவன் தனக்கு அருள்புரிய வேண்டும். அதுவும் எப்படிப்பட்ட அருள்? கோலகலமான அருள் தனக்குத் தரவேண்டும் என்கிறார்.

கோலாகலக்கிருபை யாலிங்கெனக்கருள் என்

கோவே குணத்தில் வரவே (ஞானப்புகழ்ச்சி.143)

இஸ்லாமிய நம்பிக்கையில் இருபிறப்புக் கோட்பாடு என்பதில்லை. இம்மை, மறுமை என்னும் கோட்பாடு என்பது உண்டு. ஒருவன் இந்த உலகில் வாழ்ந்து முடிக்கும் வாழ்க்கைக்கேற்ப இறப்புக்குப்பிறகான மறு உலகில் சொர்க்கம் நரகம் இரண்டில் ஏதாவது ஒன்று கிடைக்கும். பீரப்பா சொர்க்கத்தை விரும்புகிறார். இறப்புக்கு பின்பல்ல இவ்வுலகில் உயிருடன் இக்கணத்தில் வானகம் இங்கு தென்பட வேண்டும் என்பது பீரப்பாவின் விருப்பம்.

சொர்கமதில் உட்படு சுகங்களும் அதற்குள

சுகிப்பினோடு அரம்பை மாரும்

மக்க நபி செய்திடும் ஷபா அத்தும் உயர் காட்சியும்

மகிழ்ந்தெவரும் வாழ்வு பெறவே
சக்கர ஒடுக்கமில் எனக்குற இரங்கி நீ
தரும்படி நினைத்துள தெல்லாம்
இக்கணம் எனக்குலகில் ஈந்துதவி செய்தருள்
எவர்க்கு முன்னிரங்கும் இறையே (ஞானப்புகழ்ச்சி.226)

வாழ்வின் எல்லா அழகுகளையும் வாழ்ந்து அனுபவித்தலை தன் வேண்டுதலாக இறைவனிடம் முன்வைக்கும் பீரப்பா இந்த உலகில் தன்னுடைய வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்பதை,

தாரபலனும் பதவி தலீலும் தலைமைகளும்
வீறுங் கதியும் நல்மேலான வீரமும் வெல்வெற்றியும்
பேறும் நலவும் நல்லீடேற்றமும் பெரும் வாழ்வும் மனந்
தேறும் படி தருவாய் அடியேற்கு ஒரு தீங்கிலியே
(ஞானப்புகழ்ச்சி 295)

என்று பிராத்தனையாக முன்வைக்கிறார். வாழ்வைக் கொண்டாடும் பீரப்பாவின் பாடல்களுக்குள் தொழிற்படுகின்ற மற்றொரு அம்சம், மனித உடல் பற்றிய பார்வையும், அக்கரையும், இறை அனுபவத்தை தன்னுள் எடுத்துக் கொள்வதற்கு உடலைப் பேணுதல், உடலின் சூட்சுமங்களைப் புரிந்து கொள்ளுதல், உடலைத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளுதல் ஆகியன அடிப்படைத் தேவையென பீரப்பாக்கருதுவதாகத் தெரிகிறது.

மூச்சுக்கலைப்பற்றிய பீரப்பாவின் பதிவுகள், மனித உயிரின் உருவாக்கம் பற்றியப் பதிவுகள், உடலியற்கூறுகளைப் பற்றியப் பதிவுகள் மிக வலுவான நிலையில் பீரப்பாவால் பேசப்படுகின்றன.

ஞான ரத்தினக்குறவஞ்சி, ஞான ஆனந்தக்களிப்பு, திருமெய்ஞான சரநூல் உள்ளிட்ட பீரப்பாவின் பாடற்தொகுப்புகள் இந்த வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

வைதீக மரபு, ஆன்மிகம் என்பதையும் இறை அருளைப்பெறுகின்ற இரகசியங்களையும் மேலோர்க்குரியதாகவோ, மேல் சாதிக்குரியதாகவோ மட்டுமே பார்க்கும். இந்திய பக்திமரபில் அதை இராமானுஜரின் வாழ்க்கைப் புலப்படுத்தும். இறை அருளைப் பெறுகின்ற இரகசிய மந்திரத்தை எல்லா சாதியினருக்கும் கற்றுக் கொடுத்தார் என்பதற்காக இராமானுஜரின் குரு அவரை சாபமிட்டதாகவும் வரலாறு குறிப்புத் தருகிறது.

இந்த வைதீக மரபுக்கு எதிரான மாற்று மரபை பீரப்பா பதிவு செய்கிறார். ஞான ஆனந்தக்களிப்பில் அவர் தந்திருக்கும் இறை அனுபவச் செய்திகள் இறை அனுபவம் எல்லோருக்குமானது என்பதையும், எல்லோரோடும் பகிர்ந்து கொள்ளக் கூடியது என்பதையும் சொல்லி நிற்கின்றன.

தன்னாசையால் வந்த நாதம் - அவன்
தானே கடலுயிர் ஓதிய வேதம்
அன்னமெதவையும் படைத்து - வகை
யாவு முருவுக் குயிராய்ச் சமைத்துப்
பின்னாலே வந்து பிறக்கப் - பல
கோலமெடுக்க பிரபலஞ் செய்து
மின்னிய மங்குல முன்ன - இந்த
மேதினி நிறைந்தானைக் கண்டு கொண்டேனே

(ஞான ஆனந்தக் களிப்பு)

ஞானரத்தினக் குறவஞ்சியில் சிங்கி சிங்கா என்னும் இரு பாத்திரங்களை உருவாக்கி அவர்கள் இருவரின் வழியாகவும் உடலியல் சார்ந்த பல செய்திகளைப் பீரப்பா பதிவு செய்கிறார்.

இந்த வுடலுக்கு வேரென்ன தூரென்ன சிங்கி?
அது - இந்த வுடலுக்கு உயிராதி மூலமே சிங்கா!
இந்த வுடலுக்கு உயிர்வந்ததெப்படி சிங்கி?
அது தொந்தி - நடுக்குழி தொப்புள் வழியடா சிங்கா

( 13 -14)

பீரப்பாவின் பாடல்கள் மனித வாழ்வின் அடிப்படை அலகான வாழ்தல் என்கிற ஒரு செய்தியுடன் பயணப்படுகின்றன. இறை அருள், இறைக்காதல், இறை அனுபவம், எல்லாவற்றின் வழியாகவும் பீரப்பா சொல்லிச் செல்லும் செய்தி இதுதான். வாழ்வதற்கானது வாழ்க்கை. வாழ்தலின் ஆதாரம் உடல், உடலைப் பேணுதல், உள்ளத்தைப் பேணுதல், வாழ்வைப் பேணுதல் இவற்றின் வழியாக இறை அனுபவத்தை, இறை அருளைப்பெறுதல் இதுவே பீரப்பா தருகின்ற செய்தியாக இருக்கிறது.

பீரப்பாவின் பாடல் தொகுப்புகளில் ஞானப்புகழ்ச்சியின் இடம் மிக முக்கியமானது. ஞானப்புகழ்ச்சி இன்றளவும் நிகழ்த்துக்கலையாக பாடப்பட்டு வருகிறது.

தமிழ் இலக்கிய மரபில் இது முழுக்க முழுக்க புதுமையான ஒன்றாகவே தெரிகிறது. பீரப்பா அவர்கள் மறைந்த மாதமாக இஸ்லாமிய மாதம் ரஜப் கருதப்படுகிறது. ரஜப்மாதம் ஒன்றில் கொடி ஏற்றத்துடன் ஆரம்பித்து 14-ம் நாள். அன்று இரவு ஞானப்புகழ்ச்சி பாடுதலுடன் நிறைவு பெறுகிறது.

ஞானப்புகழ்ச்சிப்பாடுதல் என்பது இரவு ஒன்பது மணிக்கு ஆரம்பமாகிறது அதிகாலை ஐந்து மணிக்கு நிறைவு பெறுகிறது. ஞானப்புகழ்ச்சியில் மொத்தம் 686 - பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

பீரப்பா பாடல்களில் பயன்படுத்தியிருக்கும் பா வடிவங்கள் குறித்து நா.மம்மது அவர்கள் குறிப்பிடும் பொழுது.

வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, விருத்தம், வண்ணயாப்பு, சந்த யாப்பு என்று மரபுப்பாடல் வகைகளில் மட்டுமல்லாது நாட்டார் மரபான ஆனந்தக்களிப்பு, கண்ணிகள், குறவஞ்சி (சிங்கன் சிங்கிப்பாடல்) என்ற அமைப்பிலும் அப்பா பாடியுள்ளார் என்பது சிறப்பானது. (சூஃபிகள் தர் ஹாக்கள் - சில மாற்று உரையாடல்கள் - கட்டுரைத் தொகுப்பு - பக்கம் 49, கீற்று வெளியீட்டகம் 2003)

தமிழ் இசை மரபின் கூறுகளையும் , நாட்டார் இசை மரபின் கூறுகளையும் பீரப்பா அவர்கள் பயன்படுத்தியிருந்தாலும்,

ஞானப்புகழ்ச்சி பாடல்களை பாடுகின்ற மரபு கூட்டிசை மரபாகவே இருக்கிறது. இந்தக் கூட்டிசை மரபில் ஒருவர் பாடலாம். இருவர் பாடலாம், பலரும் சேர்ந்து பாடலாம். எண்ணிக்கை எத்தனை இருந்தாலும் அதற்கேற்ப இந்தக் கூட்டிசை வடிவம் தன்னை நெகிழ்த்திக் கொள்கிறது. பஜனை இசைவடித்தை ஒட்டியிருந்தாலும் இது அதிலிருந்து வேறுபட்டத்தன்மை கொண்டதாகவே தெரிகிறது.

பீரப்பாவின் ஆண்டு விழாவில் அவரது சமாதியின் முன் அமர்ந்து பாடும் இந்த மரபுக்கு ஏறத்தாழ இரு நூறு ஆண்டுக்கும் மேற்பட்ட வரலாற்றுத் தொடர்ச்சியிருக்க வேண்டும் என்று தெரிகிறது. திரு.பி.எம். அப்துல்கபூர் தான் ஏதாவது தலைமுறையாக இதனைப்பாடுவதாகக் குறிப்பிடுகிறார்.

ஞானப்புகழ்ச்சியின் மற்றொரு கூறாக நாம் பார்ப்பது, பீரப்பா விழாவில் பாடுதல் என்ற நிலையில் மட்டுமல்லாது அந்த வட்டார மக்கள், பீரப்பாவின் மீதான ஈர்ப்புள்ள மக்கள் தங்களின் சிறப்பு நிகழ்வுகளை ஒட்டியும் தங்களின் வீடுகளில் ஞானப்புகழ்ச்சியைப் பாடுகின்றனர். திருமணம், புதுமனைப் புகுதல், தொழில் அபிவிருத்தி, வெளிநாட்டுப்பயணம், என பல்வேறு சுப நிகழ்ச்சிகளை ஒட்டியும், நோயிலிருந்து நிவாரணம் போன்ற பரிகார நிகழ்வுகளிலும் ஞானப்புகழ்ச்சிப் பாடப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தை தொட்டிருக்கும் கேராளாவிலும் இதைப்பாடுகிறார்கள். மலையாள எழுத்து வடிவில், ஞானப்புகழ்ச்சியை எழுதி வைத்து எழுத்திப்பிரதியாக சிலர் பேணுகிறார்கள்.

தக்கலையில் முஸ்லிம் குடியிருப்புக்கள் மிகவும் பிற்பட்ட காலப்பகுதியில்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். திருவிதாங்கூர் அரசின் தலைநகரமாக பத்மனாபபுரம் உருவானபோது. அரசு அதிகாரத்திற்கான வேலைகளை செய்வதற்காக பல்வேறு தொழிற்பிரிவினர் அரண்மனையைச் சுற்றிலும் குடியமர்த்தப்பட்டனர். அந்த வகையில் உடைகளைத் தயாரித்துக் கொடுக்கின்ற நெய்த்துத் தொழிலுக்காக தென்காசியில் இருந்து நெசவுத் தொழில்சார் முஸ்லிம் குடும்பங்கள் சில

குடியமர்த்தபட்டன என்றும் பின்னர் வெவ்வேறு காலகட்டங்களில் அரண்மனை விரிவாக்கம் நடைபெற்றபோது அங்கிருந்த முஸ்லிம் குடியிருப்புகள் தற்போது அ.பீ.மு.அ குடியிருப்புப் அமைந்திருக்கும் இடத்திற்கு இடப்பெயர்வு செய்யப்பட்டனர் என்றும் மரபு வழிச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

# ஞானியார் அப்பா

கன்னியாகுமரி மாவட்டம் கோட்டாற்றுக்கு இஸ்லாமிய சமயப்பெரியவர் ஒருவர் வழிப்பயணியாய் வருகைதருகிறார். அவர் பெயர் செய்யிது ஜமால் மிஹுபரிய்யி. அவ்வூரில் பாவா காஸிம் என்னும் இறைநேசரின் சமாதி இருக்கின்ற பள்ளிவாசலில் தங்குகின்றார். பலநேரம் அப்பள்ளி வாசலின் கதவுகளை மூடிக்கொண்டு தனக்கான ஆன்மிக நடவடிக்கைகளை நேமகொள்கிறார். இதை ஒளிந்து நின்று பார்க்கிறார் சிறுவர் ஒருவர். அச்சிறுவரின் பெயர் ஷைகு முஹியத்தீன் முதலியார்.

சிறுவர் ஒருவர் தன்னை ரகசியமாக காண்பதை அறிந்து கொண்ட அப்பெரியவர் அச்சிறுவரை அங்கிருந்து விரட்டிவிட முயற்சிக்கிறார். சிறுவரோ போவதற்கு மறுத்து விடுகிறார். தான் தேடிவந்த சிறுவர் அவர்தான் என்பதை அறிந்து கொண்ட பெரியவர் அச்சிறுவருக்கு ஆன்மிகம் சார்ந்த சிலவற்றை கற்றுக் கொடுத்து விட்டு ஒரு குறிப்பிட்ட நாளைக்கூறி தன்னை அந்த நாளில் இராமநாதபுரத்தில் இருக்கின்ற மணன்மேற்குடி சத்திரத்தில் வந்து சந்திக்குமாறு சொல்லிவிட்டுச் சென்றுவிடுகிறார். இந்தச்சம்பவம் நிகழ்ந்த போது சிறுவயரின் வயது பதினான்கு.

சமயப்பெரியவரால் ஆன்மிக வழிப்படுத்தப்பட்ட ஷைகு முஹியத்தீன் முதலியார் என்னும் அச்சிறுவர் தான் பின்னாளில் ஞானியார் சாகிபு என்னும் ஞானப் பெரியவராக உருவானார். சமயப் பெரியவராக கோட்டாற்றுக்கு வருகை தந்த அப்பெரியவர் சூஃபி ஞானிகளில் முக்கியமானவராகக் கருதப்படுகின்ற மன்சூர் ஹல்லாஜின் சீடர்களில் ஒருவர் என்று கூறுகிறார்கள்.

ஞானியார் சாகிபு அவர்கள் ஆன்மிகப்பாதையில் ஆட்கொள்ளப்பட்ட இந்நிகழ்வை அவரின் திருப்பாடற் தொகுப்பின் முன்னுரையாக அமைந்துள்ள சரித்திர சுருக்கம் குறிப்பிடுகிறது.

சங்க கால வரலாற்றுடன் தொடர்ப்புப்படுத்தப்படுகின்ற ஊர் கோட்டார், தமிழகத்தின் தொன்மை வாய்ந்த ஆறுகளில் ஒன்றான பழையாற்றங்கரையில் அமைந்திருக்கிறது. குமரிமாவட்டத்தின் தற்போதைய தலைநகரான நாகர்கோவில் உருவாவதற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்த வணிகத்தில் முக்கிய இடம் வகித்த ஊர் கோட்டாறு.

பாவா காஸிம் என்னும் பெயருடைய இறைநேசர் ஒருவரின் சமாதி கோட்டாரில் இருக்கிறது. இவர் ஈராக் நாட்டுக்காரர் என்றும், இசுலாமிய சமயப்பணிக்காக கோட்டார் வந்தார் என்றும் மருத்துவ சேவையுடன் தொடர்புடையவராக இருந்தார் என்றும் கருதப்படுகிறது. 1275 வருடங்களுக்கு முன் இவருடைய வருகை நிகழ்ந்ததாகத் தெரிகிறது. ஈராக் நாட்டுக்காரரான பாவா காஸிம் அவர்கள் தாஷ்கண்டிலிருந்து இலங்கை வழியாக குமரிமாவட்டம் மணக்குடி வந்து அங்கிருந்து கோட்டார் வந்தார் என்று, குமரிமாவட்ட முஸ்லிம் குடியிருப்புகள் குறித்த நூலான பெட்டகம் தெரிவிக்கிறது. இவரின் வருகையை ஒட்டியே கோட்டாரில் முஸ்லிம் குடியேற்றம் தொழிற்படத் தொடங்கியதாகத் தெரிகிறது.

கோட்டாரில் இசுலாம் அறிமுகமானது கி.பி. 11-ம் நூற்றாண்டில் என்பர் என்கிறார் அ.கா.பெருமாள் (தாமரை ஜூன் 2011)

கோட்டாற்றில் வைத்துத்தான் ஆலிஃப் புலவரின் மிஃறாஜ்மாலை அரங்கேறியது. ஆலிப்புலவர் இசுலாமியத் தமிழ்ப்புலவர்களில் முக்கியமானவர். அவரின் இலக்கியமான மிஃறாஜ் மாலை நபிகளின் விண்ணேற்றப்பயணம் (மிஃறாஜ்) குறித்துப் பேசுகிறது. 16-ம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கியம்.

கோட்டாற்றிற்குரிய மற்றொரு முக்கியமான சிறப்பு இருபதாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த இசுலாமிய அறிஞராகவும், தமிழ் அறிஞராகவும், பல் சமய மரபில் தேர்ச்சி பெற்றவராகவும், இசுலாமிய நூல்கள் பலவற்றைப் பதிப்பித்தவராகவும் அவதானக்கலையின் கொடுமுடியைத் தொட்டவராகவும் இருந்த சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள் பிறந்த ஊர். இப்பகுதியில் நாம் பேச இருக்கின்ற கோட்டாறு ஞானியார்

சாகிபுவின் குடும்ப மரபில் வந்தவர் செய்குத்தம்பிப் பாவலர்.

தமிழ் இசுலாமிய வெளியில் கோட்டாறு ஞானியார் சாகிபு அவர்களின் பங்களிப்பு காத்திரமான ஒன்று. தனித்துவமான ஒன்று. ஞானியார் சாகிபு அவர்களின் ஞானவழியிலான பயணம் என்பது இஸ்லாமிய சூஃபி மரபில் மிக முக்கியமான இடம் வகிக்கும் மன்சூர் ஹல்லாஜ் வகுத்தளித்த பாதையில் அமைந்திருக்கிறது. மன்சூர் ஹல்லாஜ் அவர்களின் ஞானப் பாதை என்பது மரபான சமய அறிஞர்கள் பயணப்படும் பாதையல்ல. மன்சூரின் பாதை சமய நிறுவனங்களுக்குக் கட்டுப்படாத சுதந்திரமான ஒன்றாக இருந்தது. அதன்காரணமாக மன்சூர் இஸ்லாமிய நிறுவனச் சமயவாதிகளால் த்ண்டிக்கப்பட்டார் என்பதும் சித்திரவதைகளுடன் கூடிய மரண தன்டனை அவருக்கு கொடுக்கப்பட்டது என்பதும் வரலாறு.

ஞானியார் அப்பா சாகிபு அவர்களைப்பற்றி அறிந்து கொள்ளும் முன் மன்சூர் ஹல்லாஜை கொஞ்சம் பார்ப்போம். மன்சூர் ஹல்லாஜ் காலம் கி.பி. 858 முதல் 922 க்கு இடைப்பட்டது. ஈரான் நாட்டுக்காரர். சூஃபிகளின் மத்தியில் மன்சூர் தனித்த சூஃபி. பொதுவாக சூஃபிகள் தங்களின் ஆன்மிகப்பயணத்தின் இறையியல் அனுபவங்களை மக்களுடன் பகிர்ந்து கொள்ள மாட்டார்கள். மன்சூர் தன் அனுபவங்களை மக்களிடம் பகிரங்கப்படுத்தினார். மன்சூர் பகிரங்கப்படுத்திய ஆன்மீகமான அனுபவ மொழிகள் அவருக்கு நெருக்கடியை ஏற்படுத்தின. இதனால் மன்சூர் ஊர் ஊராக துரத்தப்பட்டார். அவரின் புகழ்மிக்கசொல் "அனல் ஹக்".

இந்தச் சொல்லுக்கு "நானே உண்மை" என்றும் பொருள் கொள்ளலாம். "நானே இறைவனென்றும்" பொருள் கொள்ளலாம். அவரின் இந்தச் சொல்லாடல் கடும் விவாதத்திற்கும், கண்டனத்திற்கும் ஆளானது. இணை வைப்பாளர், மனநிலைச் சிதைந்தவர் என்று குற்றம் சாட்டப்பட்டு மன்சூர் சிறையிலடைக்கப்பட்டார். மரணதண்டனை விதிக்கப்பட்டது. சித்திரவதை நிறைந்த மரணதண்டனையாக அது இருந்தது. அவரின் உடல் உறுப்புகள் வெட்டப்பட்டன. இறுதியில் தலை வெட்டப்பட்டது.

மன்சூர் ஹல்லாஜின் புகழ்மிக்க கவிதைகளில் ஒன்று

நீயும் நானும் ஒரே போத்தலில்
தண்ணீரும் திராட்சை ரசமும் போல்
ஒற்றைத் தனிஉடம்பில்
கலந்துறவு கொண்டிருக்கிறோம்
உன்னை எது தொட்டாலும் அது
என்னையும் தொடுகிறது.
ஆகவே எவ்வாறு நோக்கினும்
நீ நானே தான்
(மொழியாக்கம் செந்தாமரை கே.பி.எஸ். ஹமீது)

நிறுவனச்சமயத்தால் மதவிலக்கம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட மன்சூர் ஹல்லாஜை இஸ்லாமிய ஆன்மிக ஞானமரபு மரியாதையாக நடத்தியது, நடத்துகிறது.

இறைநேசர்களின் தலைவர் என்று சிறப்பிக்கப்படும் முஹியத்தீன் அப்துல்காதர் ஜீலானி அவர்கள் கூறியதாக, புகழ்மாலைகளில் ஒன்றான முஹியத்தீன் மாலையில் பின்வரும் குறிப்பு ஒன்று வருகிறது.

ஹல்லாஜைக் கொல்லும் நாள் அந்து ஞான் உண்டங்கில்

அப்போழ் அவர்கை பிடிப்பேன் ஞான் எந்நோவர்

ஞானியார் அப்பாவின் இயற்பெயர் முஹியத்தீன் மலுக்கு முதலியார், அவருடைய பெற்றோர் தந்தை ஷைகு அபூபக்கர், தாயார் செய்யது மீரான் பீவி. ஞானியாரப்பாவின் குடும்ப நிலை சமயப் பின்புலம் கொண்ட பின்புலமாக இருந்தது.

ஞானியார் அப்பாவின் சமாதி கோட்டாறில் அமைந்திருக்கிறது. இஸ்லாமிய மாதமான ஜமாஅத்துல் அவ்வல்மாதத்தில் பிறை ஒன்றில் தொடங்கி இருபத்தி இரண்டில் முடிகிறது. ஞானியார் அப்பா அவர்களின் பாடல்கள் அடங்கியத் தொகுப்பு மெய்ஞ்ஞானத் திருப்பாடற்றிரட்டு என்னும் பெயரில் வெளிவந்திருக்கிறது. சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்கள் இருக்கின்றன.

விருத்தப்பா வகைகள், வெண்பா வகைகள், கலிப்பா வகைகள், தாழிசை, சொச்சகம், பிள்ளைத்தமிழ், கும்மி, சிந்து

போன்ற பல பாவகைகளில் இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடற்பகுதியும் ஹாமீம் என்னும் சொல்கொண்டுத் தொடக்கம் பெறுகிறது.

ஞானியார் அப்பா அவர்களின் முரீது வழியைப் பின்பற்றுபவர்களை ஞானியார் வழியினர் என்றே அழைக்கின்றனர். கன்னியாகுமரி மாவட்டம், கோட்டார், தக்கலை, திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாளையம், இராமநாதபுரம் மாவட்டம் கமுதி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இவர்களின் தரீகாக்கள் இருக்கின்றன. இவர்களுக்கான தனியா ஆன்மிக பயிற்சிகள் இருக்கின்றன. ஆன்மிகச் செயல்பாட்டில் பயன்படுத்தப்படும் பண்பாட்டு மொழி, பணிவிடை என்று குறிப்பிடப்படுகிறது. தக்கலையில் அமைந்திருக்கும் தர்காவில் வெள்ளிக்கிழமை இரவுகளில் சிறப்பு ஆன்மிகச் செயல்பாடுகள் நடைபெறுகின்றன. ஹல்லாஜ் அவர்கள் தான் இவர்களின் ஆன்மிகப் பயணத்தின் மையச்சரடு.

ஞானியார் மரபின் அனைத்து நிகழ்வுகளும் ஹாமீம் என்னும் முத்திரைச் சொல்லுடன் தான் ஆரம்பிக்கின்றன. ஞானியார் பாடலின் தொடக்கம்.

ஹாமீம்

பூரணம் நிறைந்து பொங்கிப் புகழொளி மணியதாகிக்
காரணம் நிறைந்து நின்றங் கருத்துறு கிருபை பொங்கி
ஆரணம் மறைநூல் வேத தருமுறை தனக்கு மூலச்
சீரணத் திறகூல் தம்மை செவ்வென வமைத்தான்
வல்லோன்

ஞானியார் பாடலை ஆரம்பிக்கும் 'போது ஹாமீம் பூரணம்' என்று சேர்த்திணைத்துப் பாடுகிறார்கள்.

ஞானியார் அப்பா அவர்களின் பாடல்கள் குறித்து ஞானியார் சாகிபு அவர்களின் மனைவி வழி மரபில் வந்தவரும், சதாவதானி செய்குத்தம்பி பாவலரின் மகனுமான ஆய்வறிஞர் செந்தாமரை கே.பி.எஸ். ஹமீது அவர்கள், இதர பக்திப் பரவசத் பரவசத் தோத்திரபாக்களில் காண இயலாத கூர்மையையும் திட்ட நுட்பச் செறிவையும் கருத்தாழ வலிமையையும் மெய்ஞ்ஞான ஞானியார் ஒலியின் சொல்லாட்சியிலேயே காண முடியும். ஏனைய பக்தி

இலக்கியப் பாடல்களுக்கும் ஞானியாரின் பாடல்களுக்கும் இடையே ஒள்ள வித்தியாசமும் தனித்துவமும் கூர்ந்து கவனிக்கத்தக்கவை. ஞானியார் யாப்பிலக்கண விதிகளில் செய்த அட்சர கூண்டுக்குள் நின்று கொண்டு மெய்ஞ்ஞானக்கூறுகளின் உள்ளார்ந்த மெய்நிலைகளை விளக்குவதையே மையக்கருவாக அமைத்திருக்கிறார். *(சூஃபிகள் தர்ஹாக்கள் - சில மாற்று உரையாடல்கள் - பக்கம் 31 - 32, கீற்று வெளியீட்டகம், 2003)*

# ஜோடிப்பாட்டு

ஜோடிப்பாட்டு கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் ஒரு காலகட்டத்தில் புழக்கத்தில் சொல் இது. அஞ்சுவன்னம் குறித்தத் தேடலில் ஈடுபட்டபோது இந்தச் சொல் அகப்பட்டது.

இணை என்னும் பொருளினை ஜோடி எனும் சொல் பொதுத்தளத்தில் பெற்று நிற்கிறது. தக்கலை அஞ்சுவன்ன வட்டாரத்தில் இந்த சொல் இணை என்ற பொருளையும், முன் பின்னொட்டுச் சொற்கள் சிலவற்றுடன் சேர்ந்து அலங்காரம் என்னும் பொருளையும் தந்து நிற்கிறது.

ஆரம்ப காலங்களில் (1950 - 90கள் வரை) தக்கலை அஞ்சுவன்னத்தார், பீரப்பா பாடல்களை சபைகளில் பாடும்போது பெரும்பாலும் இருவர் சேர்ந்து இணைகுரலிலேயே பாடுவார்கள். நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் மட்டும் தனி நபராகப் பாடுவார்கள். இணைந்து பாடும் இருவரையும் ஜோடி என்று குறிப்பிடுவார்கள்.

உணவு உண்ணும் முறையில் கூட இவ்வாறாக இருவர் இணைந்து உண்ணும் வழக்கம் இருந்தது. வாழையிலையில் பக்கத்துக்கு ஒருவராக அமர்ந்திருக்க உணவைப் பொதுவில் வைத்துப் பகிர்ந்து உண்ணும் வழக்கம் நெடுங்காலம் இருந்தது. உணவுத் தட்டுக்களின் பயன்பாடு வருகிற வரையில் இப்பழக்கம் நீடித்தது.

திருமண நாளில் மணமகனும், மணமகளும் அலங்கரித்துக் கொள்வதை ஜோடித்தல் என்று குறிப்பிடும் வழக்கம் இருந்தது. கந்திலிக்கு அஞ்சுவன்னத்தில் தெருக்களை அலங்கரிக்கும் வழக்கம் நெடு நாள்கள் இருந்தது. (நபி தினத்தை தக்கலை அஞ்சுவன்னத்தார் கந்திலி என்றே குறிப்பிட்டார்கள். பீரப்பாவின் ஆண்டுப் பெருவிழாவை ஊர் நேச்சை என்றே குறிப்பிட்டார்கள்)

இவ்வாறு தெருக்களை அலங்கரிப்பதை ஜோடிப்பு என்று குறிப்பிட்டார்கள்.

தக்கலை அஞ்சுவன்ன வட்டாரத்தில் வெகுவாக பழக்கத்தில்

இருந்த ஜோடி, ஜோடித்தல், ஜோடிப்பு ஆகிய சொற்களின் தொடர்ச்சியில் ஜோடிப்பாட்டு என்ற சொல்லும் சேர்ந்து கொண்டது.

தக்கலை அஞ்சுவன்னம் பள்ளித் தெருவில் வசிக்கும் திரு. எச். பீர்முகம்மது (சேனாமுத்தீன்) அவர்கள் தான் ஜோடிப்பாட்டு சொல்லை நமக்கு அறிமுகம் செய்தார்.

பீரப்பா அவர்களின் ஞானப்புகழ்ச்சி தவிர வேறு ஏதாவது பாடல்களுக்கு பயிற்சி எடுத்திருக்கிறார்களா? என்று கேட்டபோது அவர் ஜோடிப்பாட்டும் நாங்கள் படித்திருக்கிறோம் என்றார்.

ஜோடிப்பாட்டு குறித்து மேலும் தேடியபோது திரு. பி.எம்.அப்துல்கபூர் அவர்கள் கூடுதலான பலதகவல்களைத் தந்துதவினார்கள்.

தக்கலை அஞ்சுவன்னம் ஜமா அத் பீர்முகம்மதப்பா அவர்களின் பெயரால் இயங்குகிறது. ஜமா அத்தில் பீரப்பா அவர்களின் பாடல்களைப்பாடும் மரபும், கோட்டாறு ஞானியார் சாகிபு அவர்களின் பாடல் மரபும் செல்வாக்குமிக்கவைகளாக இருக்கின்றன. பீரப்பா அவர்களின் மரபு வெகுமக்கள் தன்மையைக் கொண்டும், ஞானியார் மரபு சில குடும்பங்களின் கூட்டிணைவான தன்மையைக் கொண்டும் செயல்பட்டு வருகின்றன.

ஆரம்பகால காலங்களில் ஞானப்புகழ்ச்சி பாடல் பாடுதவதற்கு தொடங்கு முன் ஞானியார் அப்பாவின் பாடல் தொகுப்பின் காப்புப்பாடலை பாடி ஆரம்பிக்கும் வழக்கமும் இருந்திருக்கிறது. தன்னுடைய சிறுவயது பருவத்தில் கோட்டாற்றில் (செய்குதம்பி பாவலர் வீடு) தங்களது வீட்டில் பீரப்பா பாடல்களின் ஓலைச்சுவடிகள் கட்டுக்கட்டாக இருந்ததை கட்டுரை ஒன்றில் நினைவு கூறுகிறார் ஆய்வாளர் செந்தாமரை கே.பி. எஸ். ஹமிது. (ஞானப்புகழ்ச்சி பன்முகப் பார்வை - தொகுப்பு நூல் - பக்கம் 3 - பீரப்பா கல்வி மையம் வெளியீடு - 1993)

பீரப்பாவின் ஞானப்பாடல்கள் முதல் தொகுப்பு 1857 - ல்

இரண்டாம் பதிப்பு 1908, ஆகியவை ஞானியார் குடும்பச் சூழலிலிருந்தே வெளிவந்தது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

பீரப்பா பாடியிருக்கும் பாடல் பிரதிகளில் ஒன்றான ஞானப்புகழ்ச்சியை அவரின் தர்காவிலும் பாடுகிறார்கள். வீடுகளில் பல்வேறு சூழல்களிலும் பாடுகிறார்கள். வெளியூர்களிலும் பாடுகிறார்கள். எண்பதுகள் வரை தக்கலை வட்டாரத்தில் முதியவர்கள் மரணத்தை நெருங்கும் பொழுதுகளில் அவர்களின் அருகாமையில் அமர்ந்து பீரப்பாவின் ஞானப்புகழ்ச்சியைப் பாடும் வழக்கம் இருந்தது. தக்கலை தவிர்த்த பிற ஊர்களிலும் ஞானப்புகழ்ச்சியைப்பாடுவதில் தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். கேரளாவில் மலையாள எழுத்துருவில் அமைந்த ஞானப்புகழ்ச்சியின் கையெழுத்துப் பிரதிகள் இருக்கின்றன. ஞானியார் பாடலை அந்த தரீகாவினைத் தவிர வேறிடங்களில் பாடும் மரபில்லை. ஞானியார் பாடலை பாடுகின்றவர்களின் எண்ணிக்கையும் குறைவு.

ஞானியார் பாடலையும், ஞானப்புகழ்ச்சியையும் பாடுவதில் தக்கலை அஞ்சுவன்னத்தாரின் பயிற்சி தேர்ச்சி பெற்ற ஒன்றாகவே இருக்கிறது. பிற ஊர்களில் உள்ள பாடுபவர்களுடன் ஒப்பிடும் போது இதனை உணர முடிகிறது.

ஞானியாரப்பாவிற்கு குழந்தைகள் இல்லை. ஞானியாரப்பா அவர்கள், தன்னுடைய காலத்திற்குப் பிறகு தான் செய்து வந்த ஆன்மிகப்பணிகளைச் செய்திடும் பொறுப்பை தம்பி சின்ன ஞானியாரப்பாவிடம் ஒப்படைத்தார் என்று தெரிகிறது. இன்று வரை சின்ன ஞானியாரப்பாவின் வழிவந்தவர்களே ஞானியார் தரிகாவின் தலைமைப் பொறுப்பேற்றுவருகின்றனர். ஞானியாரப்பாவிற்கு குழந்தைகள் இருந்தனர் என்று பெட்டகம் என்ற நூல் குறிப்பிடுகிறது.

பீரப்பாவும் ஞானியார் அப்பாவும், தமிழ்ச் செய்யுள் மரபின் பல வடிவங்களைப் பயன்படுத்தியிருந்தாலும் அந்தச் செய்யுள்களின் அறியப்பட்ட இசை முறையிலோ, சந்த முறையிலோ இவற்றைப்பாடுவதில்லை. மாறாக இவ்விரு பாடல்களையும் கூட்டிசை வடிவத்திலேயேப் பாடுகிறார்கள். இந்தக் கூட்டிசை வடிவில் இந்தப்பாடல்களை ஒருவர் பாடலாம்,

இருவர் பாடலாம். எத்தனைக்குரல்கள் இணைந்தாலும் அத்தனைக் குரல்களுக்கும் இடம் வழங்குகின்ற நெகிழ்ந்தத் தன்மையைக் கொண்டதாக இவ்வடிவம் இருக்கிறது.

ஞானியார் அப்பா அவர்களின் வாழ்க்கைக் குறித்தத் தகவல்கள் துல்லியமான நிலையில் நமக்குக் கிடைக்கின்றன. காலத்தால் பீரப்பாவுக்குப் பிந்தியவர்கள் ஞானியாரப்பா. ஹிஜ்ரி 1167-ல் பிறந்து ஹிஜ்ரி 1209-ல் வாழ்வை நிறைவு செய்திருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டம் கோட்டாற்றில் பிறந்து அங்கேயே வாழ்வை நிறைவு செய்திருக்கிறார்கள்.

பீரப்பா, ஞானியாரப்பா இருவருமே நெசவு சார்ந்தும், அதனுடைய வர்த்தகம் சார்ந்தும் தொடர்புடையவர்களாக இருந்திருக்கிறார்கள். பீரப்பா நெசவுத்தறியில் பணியாற்றியக் குறிப்பை வாய்மொழித் தரவுகள் தெரிவிக்கின்றன. ஞானியார் அப்பா துணி வர்த்தகம், நெவுக்கான கச்சா பொருள்கள் இவற்றுடன் தொடர்புடையவராக இருந்திருக்கிறார். இருவரின் பாடல்களிலிருந்தும் கிடைக்கின்ற குறிப்புகள் இசுலாமிய மெய்ஞ்ஞானத்தை அடியொற்றிஎழுந்தவைகளாக இருக்கின்றன. இவற்றிடையில் தனித்தன்மைகளும் பொதுத்தன்மைகளும் இருக்கின்றன. பீரப்பா முன்னிறுத்தியதாக தரீகா மரபு எதுவும் இல்லை. ஞானியார் தரீகா மரபு தென் மாவட்டங்களில் செயல்படுகிறது.

ஞானப்புகழ்ச்சி, ஞானமணிமாலை, ஞானக்குறம், ஞானரத்தினக் குறவஞ்சி, ஞான ஆனந்தக் களிப்பு, ஞானப்பூட்டு, ஞானப்பால், திருமெய்ஞ்ஞான சரநூல், திருநெறிநீதம், ரோசுமீசாக்கு மாலை, ஞான நடனம், ஞான முச்சுடர்ப்பதிகங்கள், ஞான விகடச்சமர்த்து, ஞானத்திறவுகோல், ஞான தித்தி, ஞான உலக உருளை, ஈடேற்றமாலை, என பீரப்பாவின் பாடல் தொகுப்புகள் குறிப்பிடப்படுகின்றன. கிடைத்தும் கிடைக்காமலும் இருக்கின்ற இந்தத் தொகுப்புகளில் பீரப்பா தந்திருக்கும் பாடல்களின் எண்ணிக்கை பதினெண்ணாயிரத்தை எட்டி நிற்கிறது.

ஞானியாரப்பாவின் பாடல் தொகுப்பு, மெய்ஞ்ஞானத்திருப்பாடற் திரட்டு என்று அழைக்கப்படுகிறது.

ஞானகாரணம், ஞானதோத்திரம், ஞானப்பஃறொடை, ஞான அம்மானை, ஞானக்குருவடி விளக்கம், ஞானத் திருநிதானம், ஞானத்திருப்புகழ், ஞானப்பிள்ளைத்தமிழ், ஞானக்கும்மி, ஞான அந்தாதி, ஞான அனுபவ விளக்கம், ஞான ஏகாதசம், ஞானத்தேவாரம், ஞான விண்ணப்பம், ஞான ஆனந்தது, ஞான வாழ்த்து, ஞான கீதாமிர்தம், ஞான மன்றாட்டம் ஆகிய உட்பிரிவுகளைக் கொண்டு இத்தொகுப்பு அமைந்திருக்கிறது.

இதுதவிர இத்தொகுப்பில் ஞானியாரப்பா பெயரில் இயற்றப்பட்ட மூன்று பிரபந்தங்கள் இடம் பெற்றுள்ளன. (கொட்டாம்பட்டி எம். கருப்பையா பாவலரவர்கள் இயற்றிய திருக்கோட்டாற்றுக் கலம்பகம் (பக்கம் 384) (இவர் வாயுறை வாழ்த்தொன்றும் இயற்றியுள்ளார் பக்கம் 420) திருநெல்வேலி மாவட்டம் சாத்தான்குளம் சி.வெ. அரவமூர்த்தி உபாத்தியாயர் அவர்கள் இயற்றிய தோத்திரப்பா (பக்கம் 412) கமுதி கா.மீறானயினார் புலவர்கள் இயற்றிய தியான மஞ்சரி.

ஞானியார் பாடல் தொகுப்பின் இறுதிப்பகுதி (பக்கம் 425 - 524) சின்ன ஞானியார் சாகிபு (ஷெய்கு முஹ்யித்தீன் மலுக்கு முதலியார் என்னும் ஷெய்குத்தம்பி ஞானியார் சாகிபு) அவர்கள் இயற்றிய மெய்ஞ்ஞான விளக்கம் என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளது.

இதில் ஞானநடனம், ஞான ஆனந்தக்களிப்பு, ஞானக்குயில் மயிலேசன், ஞானக்கும்மி, ஞானவருட்புலம்பல், ஞான அடைக்கலம், ஞானக்கீர்த்தனை, ஆகிய பகுதிகள் இடம் பெற்றுள்ளன. இறுதியில் சின்ன ஞானியார் சாகிபு பெயரில் காயற்பட்டணம் ஷெய்கு அப்துல் காதர் சாகிபு அவர்கள் எழுதிய தோத்திரப் பதிகம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

தக்கலையில் அமைந்திருக்கும் பீரப்பா தர்காவில் ஆண்டுதோறும் பீரப்பா அவர்களின் ஞானப்புகழ்ச்சிப்பாடல் பாடும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. ராஜப் மாதம் 14-ம் நாள் இரவு 9 மணிக்கு ஆரம்பமாகி அதிகாலை 5 மணிக்கு நிறைவு பெறுகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இதில் பங்கேற்கின்றனர். இந்த விழா தக்கலை அஞ்சுவன்னத்தின் பொதுவிழாவாகவே நடைபெறுகிறது. தக்கலையில்

அமைந்திருக்கும் ஞானியார் தர்காவில் ஞானியார் அப்பாவின் பாடல்கள் பாடப்படுகின்றன. ஜமாத்துல் அவ்வல் மாதத்தின் நாள் ஒன்றிலிருந்து இருபத்தி இரண்டுவரை தினமும் இரவு 9 முதல் 11 மணிவரை சிறுசிறுப்பகுதியாக பாடி மொத்த பாடலையும் நிறைவு செய்கிறார்கள். அந்த வட்டாரத்து மக்கள் இருநூறு முதல் முன்னூறு பேர் வரை நிகழ்ச்சியின் போது தினசரி வருகிறார்கள். இதற்கான செலவினங்களை ஞானியார் தரீகாக்காரர்களே செய்து வருகிறார்கள்.

திரு. அப்துல் கபூர் அவர்கள் நம்மிடம் பகிர்ந்து கொண்ட தகவல்களில் ஒன்று. அவர் எட்டாவது தலைமுறையாக இந்தப் பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கிறார். அவருடைய தந்தை , தந்தையின் தந்தை என எட்டுபேரைத் தொட்டு நிற்கிறது இந்த மரபு. ஒவ்வொரு தலைமுறைக்கும் சராசரியாக முப்பதாண்டுகள் என்று கணக்கிட்டால் இருநூற்று நாற்பதாண்டுகள் ஆகிறது. ஏறத்தாழ இருநூற்றைம்பது ஆண்டு கால தொடர்ச்சியை இந்த பாடல் மரபு கொண்டிருக்கிறது.

அப்படியென்றால் ஜோடிப்பாட்டு என்பது எதைக் குறித்து நிற்கிறது.திரு. அப்துல் கபூர் அவர்கள் நம்மிடம் நூலின் பிரதி ஒன்றை காட்டினார். அந்நூலில் பீரப்பாவின் ஞானப்புகழ்ச்சி பாடல் முழுவதும் அச்சிடப்பட்டுள்ளது. பீரப்பா இயற்றிய ஞானமுச்சுடர்பதிகமும் இடம் யற்றுள்ளது. அத்துடன் ஞானியாரப்பாவின் மெய்ஞ்ஞானத் திருப்பாடற் திரட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சின்னஞானியாரப்பா பாடலின் சில பகுதிகள் அச்சிடப்பட்டுள்ளன என்கிறார் திரு. அப்துல்கபூர். ஞான ஆனந்தத்துதி, அடைக்கல ஞானம், ஞானப்பதிகங்கள், பதங்கள் ஞானப்புலம்பல் ஆகியவை இடம் பெற்றுள்ளன என்கிறார் கபூர்.

ஆரம்பகாலங்களில் பீரப்பா, ஞானியாரப்பா பாடல்களை இளையவர்களுக்குக் கற்றுக்கொடுக்கின்ற பயிற்சியாளர்கள் இருந்தார்கள். ஆசான் என்று இவர்களை அழைத்தார்கள். இவர்களிடம் பயிற்சி பெற செல்பவர்கள் பீரப்பாவின் பாடல், ஞானியாரப்பாவின் பாடல் இரண்டிலும் பயிற்சி எடுத்தார்கள். இவ்வாறு இருவர் பாடல்களின் மீதான பயிற்சியை

ஜோடிப்பாட்டு என்று குறிப்பிட்டிருக்கலாம். அந்தப் பயிற்சிக்கான அச்சுப் பிரதியாகவே திரு. அப்துல் கபூர் அவர்கள் கைவசமிருக்கும் பிரதியிருக்க வாய்ப்பிருக்கிறது.

தக்கலை அஞ்சுவன்ன மரபில் பீரப்பா, ஞானியாரப்பா இருவரின் ஆன்மிக மரபும் இணைந்தே தொழிற்பட்டிருக்கிறது என்பதன் அடையாளமாகவும் ஜோடிப்பாட்டு அமைந்திருக்கிறது. நெசவு சார்ந்தும் அது சார்ந்த வர்த்தகம் சார்ந்தும் கோட்டாற்று முஸ்லிம்களுக்கும் தக்கலை முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட உறவு ஆன்மிகம் சார்ந்த பரிவர்த்தனைக்கும் வழிவகுத்திருக்க வேண்டும். பண்பாட்டு கொள்வினை கொடுப்பினைகளை இது ஏற்படுத்திதந்திருக்க வேண்டும். இதன் நீட்சியாகவே சதாவதானி செய்கு தம்பி பாவலர் அவர்கள் (பாவலர் அவர்கள் ஞானியாரப்பா குடும்பத்தைச் சார்ந்தவர்) பீரப்பாவின் பாடல்களை அச்சிட்டு வெளிக்கொண்டு வரும் சூழல் ஏற்பட்டிருக்க வேண்டும்.

நெசவுத் தொழிலிலிருந்து விடுபட்டு அஞ்சுவன்னத்தார் கடல்கடந்து தொழில் தேடி சென்றதும், வேறு திசைகளில் தடம் பதித்ததும் அஞ்சுவன்னம் பொருளியல் நடவடிக்கைகளில் பாரியமான மாற்றங்களை ஏற்படுத்தின. இதனை ஒட்டிய பண்பாட்டு மாற்றம் அஞ்சுவன்னம் பீர்முஹம்மதியா முஸ்லிம் அசோசியேசன் என்னும் புதிய அடையாளத்தை போன நூற்றாண்டின் முதல் இருபதுகளில் ஏற்படுத்தியது.

இந்த வட்டாரக் குடியிருப்புகளின் வரலாறு மூன்று நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தைக் கொண்டிருந்தாலும் அஞ்சுவன்னம் என்னும் பெயரடையாளம் உருவாகி ஒரு நூற்றாண்டு காலமே ஆகிறது. அஞ்சுவன்னத்தின் சமூக அமைப்பு பல அடுக்குகளைக் கொண்டிருக்கிறது. இவ்வடுக்குகளின் உள்ளில் வேறுபாடுகள் இருக்கின்றன. கடைசி அடுக்கில் சேவை சமூகமாக லெப்பை, மோதீன், ஒசா ஆகியோர் வருகிறார்கள். தொழில் சார் அடையாளமாக இவை தோற்றம் பெற்றிருந்தாலும் ஒசா என்னும் நாவித அடையாளம் மட்டும் பிறப்புடன் தொடர்புடையதாக மாறியிருக்கிறது.

தற்பொழுதுள்ள அஞ்சுவன்னம் பள்ளித்தெருவின் ஒருபகுதி பாதையை பொதுப்பாதையாக்கிய பத்மனாபபுரம் நகர்மன்ற

தீர்மானத்தை எதிர்த்து சிங்கப்பூரில் வாழ்கின்ற இவ்வூர் பிரதிநிதிகள் சார்பில் கன்னியாகுமரிமாவட்ட ஆட்சித்தலைவரிடமும், பத்மனாபபுரம் கோட்டாட்சியரிடமும், நீதிமன்றத்திலும் முறையீடு செய்யப்பட்டது. அம்முறையீட்டுக்குறிப்பின்படி.

கொல்லம் வருடம் 919 (கி.பி 1743 - 44) வரை முஸ்லிம்கள் பத்மனாபபுரம் கோட்டயின் மேற்கு வாசலில் இருந்து தெற்கும் அதன் சுற்றுப்புறங்களிலும் குடியிருந்து வந்தார்கள்.

பத்மனாபபுரம் கோட்டை விரிவாக்கம் செய்திடவும் அரச குடும்பத்தினரையும், அதிகார அமைப்பினரை குடியமர்த்தவும் வேண்டிய தேவை ஏற்பட்ட போது, அன்றைய திருவிதாங்கூர் அரசானது அங்கு வாழ்ந்து வந்த முஸ்லிம்களிடமிருந்து அந்நிலங்களை எடுத்துக் கொண்டு அவர்களை தற்பொழுதுள்ள அஞ்சுவன்னம் பகுதியில் குடியமர்த்தியது. இந்நிலத்திற்கு வரிவிலக்கும் அளிக்கப்பட்டதுடன் அரசால் நீட்டும் வழங்கப்பட்டது. (சர்வே எண் : 2815 / 194)

தக்கலை வட்டாரத்தில் முஸ்லிம்கள் நானூறு ஆண்டுகால வாழ்க்கையோடு தொடர்புடையவர்கள் என்பதை இது உறுதி செய்கிறது.

# அல்ஃபாத்திஹா தமிழாக்கம்

தமிழில் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பின் தொடக்கம் என்று பார்க்கும் போது தொடக்கநிலையில் சமய நடவடிக்கைகள் அனைத்தும் அரபு மொழி வழியாகவும் அரபுத் தமிழ் என்னும் எழுத்து வடிவிலும் பேணப்பட்டன. அரபு, தமிழ் என்னும் இருநிலைக்கும் இடையில் அரபுத் தமிழ் என்னும் புதிய எழுத்து வடிவம் தமிழ்ச்சூழலில் முசுலிம்களிடம் பயன்பாட்டில் இருந்தது.

தமிழின் செய்திகளை அரபு எழுத்துருவில் எழுதி அதை பயன்பாட்டில் வைத்திருந்தனர். நெடுங்காலமாக அரபுத்தமிழ் வழக்கம் முஸ்லிம்களிடம் வழக்கில் இருந்தது. இன்றும் இசுலாமிய சமயக்கல்வியை கற்றுக்கொடுக்கின்ற கல்வி நிறுவனங்களில் அரபுத்தமிழ் எழுத்துருவில் அமைந்த பிரதிகள் பாடநூற்களாக பின்பற்றப்படுகின்றன.

இரு வேறுபட்ட பின்புலங்களைக் கொண்ட மொழிகளாக அரபும் தமிழும் அமைந்த நிலையில் அரபியில் அமைந்திருந்த சமயம் சார்ந்த செய்திகளை தமிழில் சொல்வதில் எழுத்துரு சார்ந்த போதாமைகள், அரபு மொழி சுவனத்தின் மொழி எனும் நம்பிக்கை, புனிதப்பிரதி அருளப்பெற்ற மொழி என்ற புரிதல், உலகியல் சார்ந்த கல்வி மறுக்கப்பட்ட முஸ்லிம் ஆண் பெண்களுக்கு சமயத்தேவை கருதி கற்றுக்கொண்ட அரபி எழுத்துக்களின் பரிச்சயம், மொத்த தமிழ்ச் சூழலுக்குள்ளும் முஸ்லிம்கள் தங்களை தனித்த அலகாக கருதியது என பல்வேறுச் சூழல்கள் அரபுத் தமிழின் இருப்பை உறுதி செய்தன. இதன் விளைவாக தமிழ்ச் சூழலில் அரபி மொழி சார்ந்து நெட்டெழுத்து முறை ஒன்றும் தோற்றம் பெற்றது.

15-ம் நூற்றாண்டில் தமிழ் வழிப்பட்ட இசுலாமிய இறையியல் தோற்றம் பெற்றது. இதனூடாக இசுலாமிய சமயம் சார்ந்த கருத்துக்களை தமிழ் வழியில் சொல்லுதல் வேகம் பெற்றது. இதன் ஓர் அலகாக திருக்குர்ஆனை தமிழில் சொல்லுதல் என்ற

ஒன்றும் தொழிற்பட்டது.

இறைநேசர்களாகவும், இலக்கிய ஆளுமைகளாகவும் இருக்கின்ற தக்கலை பீர்முஹம்மது அப்பாவும், கோட்டாறு ஞானியார் சாகிபும் இதன் தொடக்கப் புள்ளிகளாக இருக்கிறார்கள். இருவருள்ளும் பீரப்பா காலத்தால் முற்பட்டவர். பதினாறு பதினேழாம்நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலம் பீரப்பா உடையது. திருக்குர்ஆன் தமிழ் மொழியாக்கம் எனும்போது பொதுவான முஸ்லிம் மனோபாவம் அரபு மூலப்பிரதியுடன் இணைந்த நிலையில் கிடைக்கின்ற மொழிபெயர்ப்பை மட்டுமே பெரும்பாலும் ஏற்றுக் கொள்கிறது. அரபு மூலமொழி இடம் பெறாத தமிழ் மொழி பெயர்ப்பை முஸ்லிம் மனோபாவம் பெரிதாக வரவேற்பதில்லை. அதனால்தான் இன்று வரை வருகின்ற திருக்குர்ஆன் மொழி பெயர்ப்புகள் அனைத்தும் அரபு மூலத்துடனேயே வெளிவருகின்றன.

திருக்குர்ஆனின் தமிழ் மொழியாக்க முயற்சி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆரம்பமாகியது. நமக்குக் கிடைக்கின்ற அனைத்துத் தமிழ் மொழிபெயர்ப்புகளும் இருபதாம் நூற்றாண்டில் மொழியாக்கம் செய்யப்பட்டவை. இதற்கும் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே பீரப்பா இதன் தொடக்கப்புள்ளியாக அமைகிறார். பீரப்பாவின் பிரதிகளில் குர்ஆனின் கருத்துக்கள் ஏராளம் இடம் பெற்றாலும் அரபு மூலமொழியின்றி அவை அமைந்திருக்கின்றன. அதே வேளையில் பீரப்பாவின் பிரதிகளில் ஒன்றான ஞானப்புகழ்ச்சியின் கடைசிபகுதி (16 பாடல்கள்) திருக்குர்ஆன் முதல் அத்தியாத்தின் கவிதை மொழியாக்கமாக அமைந்திருக்கிறது. (பாடல் எண் : 664 முதல் 678 வரை)

திருக்குர் ஆன் 96-வது அத்தியாயத்தின் இரண்டாவது வசனம் மனிதன் படைக்கப்படும் தன்மை குறித்துப் பேசுகிறது. பீரப்பாவின் ஞானப்புகழ்ச்சியில் இடம்பெற்றுள்ள மூன்றாவது பாடல் இதே பொருள் குறித்துப் பேசுவதாகவும் மேற்குறிப்பிட்ட குர்ஆன் வசனத்தின் விளக்கமாகவும் அது இருப்பதாக ஞானப்புகழ்ச்சி ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

''அற்பஜல மக்கனியா லழியாமற் காவல் செய்து

கெற்பமதில் வைத்துருவாய்க் கிளந்ததற்பின் -மெய்ப்புடனே

தாரணியி லாக்கியயன்னைத் தான் வளர்த்துக் காத்தவொரு

காரணனே நீயிதற்குக் காப்பு''

- ஞானப்புகழ்ச்சி - 3

இறைவன் தன் திருமறையில் 'தீனைப் பொய்யாக்குவோர் யார்தெரியுமா... பிறர் பார்க்கவென்றே தொழுபவர் ; அற்பமான புழங்கும் பொருட்களைக்கூட பிறருக்குக் கொடுக்காதவர்' என்று கூறுகின்றான். பிறருக்குக் கொடுக்காத கஞ்சத்தனத்தைச் சுட்டிக் காட்டுகிறான்.

''ஈயாத லுத்தரையும் ஏன்படைத்தாய் எம் இறையவனே''

-ஞானப்புகழ்ச்சி - 8

இது அப்பாவின் பாடல் வரி. ஒப்பிட்டுப் பார்க்கும் போது அருள் மறை ஞானம் பிரதிபலிப்பதைக் காணலாம். என்கிறார். திருவை. அப்துல் ரகுமான்.

(பீரப்பாவின் ஞானப்புகழ்ச்சி பன்முகப்பார்வை . பக்கம் 66) இந்திய மொழியல்லாத பிறமொழிகளிலிருந்து தமிழில் வந்துசேர்ந்த முதல் மொழி பெயர்ப்பாகவும் பீரப்பாவின் இந்த முயற்சியைக்குறிப்பிடலாம். பதினெட்டாம் நூற்றாண்டில் சீகன்பால்கிலிருந்து பைபிள் தமிழ் மொழி பெயர்ப்புத் தொடங்குகிறது.

பாத்திஹா என்னும் சொல் மரபு வழிப்பட்ட இஸ்லாத்திலும் வெகுமக்கள் மயப்பட்ட இஸ்லாமிய மரபிலும் முக்கியமான இடத்தை வகிக்கிறது. குர் ஆனின் முதல் அத்தியாயமாக இடம் பெற்றுள்ள ஃபாத்திஹா அத்தியாயம் தோற்றுவாய், தொடக்கம், ஆரம்பம் ஆகிய அர்த்தங்களைக் கொண்டிருக்கிறது. உம்முல் கிதாப் என்னும் (குர்ஆனின் அன்னை) சிறப்புப் பெயரும் இதற்குண்டு. நபி அவர்களுக்கு தொடக்கத்தில் சின்னச்சின்ன

வசனங்களே வழங்கப்பட்டன. முழு அத்தியாயமாக வழங்கப்பட்ட முதல் அத்தியாயமாக ஃபாத்திஹா அத்தியாயம் இருக்கிறது. முஸ்லிம்களின் ஒவ்வொரு தொழுகையின் போதும் இந்த அத்தியாயம் ஓதப்படுகிறது. திரும்பத்திரும்ப ஓதப்படும் ஏழுவசனங்கள் என்று கு ஆன் குறிப்பிடுவது. (15 ; 87) இந்த அத்தியாயத்தையே என்று முஸ்லிம் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஃபாத்திஹா அத்தியாயத்திற்கு நோய் நிவாரணி (அஷ்ஷிஃபா) என்ற ஒரு பெயரும் இருக்கிறது. நபிகளின் காலத்திலேயே அவரின் தோழர் ஒருவர் இவ்வத்தியாயத்தை வாசித்து விஷம் தீண்டிய ஒருவருக்கு நோய் நிவாரணம் செய்ததையும் அதற்கு கிடைத்த ஆடுகளை அவர்கள் பங்கிட்டுக் கொண்டதையும் இஸ்லாமிய குறிப்புகள் தெரிவிக்கின்றன.

ஃபாத்திஹா என்னும் சொல் குர்ஆனின் அத்தியாயம் ஒன்றின் தலைப்பு என்பதிலிருந்து தமிழ், இந்திய வட்டாரத்தில் விரிவடைந்த பண்பாட்டுச் சொல்லாக திரண்டு நிற்கிறது. வெகுமக்கள் சார்ந்த இசுலாமிய சமய நடவடிக்கைகளில் ஒன்றாக ஃபாத்திஹா என்பது அமைந்திருக்கிறது. வளமைச்சடங்குகளோடும், நோய்நிவாரணிகளோடும் மூதைகளின் நினைவேந்தல்களோடும், இறை நேசர்கள் சார்ந்த பிராத்தனைகளோடும் தொடர்புடையதாக இச்சொல் அமைந்திருக்கிறது. வெகுமக்கள் சார்ந்த இசுலாத்தில் பயன்படுத்தப்படும் ஃபாத்திஹா என்னும் சொல்லுக்குள் குர்ஆனின் முதல் அத்தியாயமான ஃபாத்திஹா, குர்ஆனின் நூற்றிப்பன்னிரெண்டாவது அத்தியாயமான அல் இக்லாஸ், நூற்றிப் பதிமூன்றாவது அத்தியாயமான அல் ஃபலக், நூற்றிப்பதினான்காவது அத்தியாயமான அந்நாஸ் ஆகியவை வந்து சேர்கின்றன. இந்நான்கு அத்தியாங்களும் நோய் நிவாரணத்தோடும், மந்திராவதத்தடுப்புகளோடும் நேரடியான தொடர்பு கொண்டவை.

திருக்குர்ஆனின் முதல் அத்தியாயம் அல்ஃபாத்திஹா என்று குறிப்பிடப்படுகிறது. தோற்றுவாய் தொடக்கம் ஆரம்பம் ஆகிய பொருட்களை இச்சொல் அர்த்தப்படுத்துகிறது.அல்ஃபாத்திஹா அத்தியாயத்தில் மொத்தம் ஏழு வசனங்கள் இடம் பெற்றுள்ளன.

நபி அவர்களுக்கு தூத்துவம் வழங்கப்பட்ட தொடக்க காலத்திலேயே இவ் அத்தியாயம் வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று இஸ்லாமிய அறிஞர்கள் கருதுகிறார்கள். முழுமையாக வழங்கப்பட்ட முதல் அத்தியாயமாகவும் அல்ஃபாத்திஹா இருக்கிறது.

*அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்*

*அர்ரஹ்மானிர்ரஹீம்*

*மாலிக்கி யவ்மித்தீன்*

*இய்யாக்க நகுபுது வ இய்யாக்க நஸ்தஹீன்*

*இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம்*

*ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம் கைரில் மஹ்ழூபி அலைஹிம் வலல்லால்லீன்*

பொருள் : எல்லா புகழும் அனைத்துலகையும் படைத்து பரிபாலித்து வருகின்ற அல்லாஹ்வுக்கு. அவன் அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்புடையவன். தீர்ப்பு நாளின் அதிபதி. உன்னையே வணங்குகிறோம். உன்னிடமே உதவி கோருகிறோம். எங்களை நீ நேரான வழியில் செலுத்துவாயாக. எவர்களுக்கு நீ அருள் புரிந்தாயோ அவர்களின் வழி. (அவ்வழி) உன் கோபத்துக்கு ஆளானவர்களின் வழியுமல்ல; வழிதவறியவர்களுடையதுமல்ல.

திருக்குர்ஆன் மொழியாக்கம் தொடர்பாக இரண்டு சொல்லாடல்கள் இருக்கின்றன. ஒன்று தர்ஜீமா மற்றொன்று தப்சீர். திருக்குர்ஆனை அரபி மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழியாக்கம் செய்வது தர்ஜீமா என்று குறிப்பிடப்படுகிறது. திருக்குர் ஆனுக்கான விளக்கங்களை வழங்குவதை தப்சீர் என்று குறிப்பிடப்படுகிறது.

இவ்வத்தியாயம் ஏழுவசனங்களைக் கொண்டிருக்கிறது. இந் அத்தியாயத்திற்கு என்று தமிழில் வந்திருக்கின்ற மொழி பெயர்ப்புக்களிலும், பிற மொழி பெயர்ப்புகளிலும் மரபான அர்த்தங்களும், மரபான விளக்கங்களும் மட்டுமே மொழிபெயர்ப்பாளர்களால் தரப்படுகின்றன.

இந்த அத்தியாயத்தின் கடைசி பகுதி வசனங்கள் பின்வருமாறு

அமைகின்றன. ''எங்களுக்கு நீ நேரான வழியைக் காண்பித்தருள்வாயாக! (அவ்வழி) எவர்களுக்கு நீ அருள்புரிந்தாயோ அவர்களின் வழி; உன்னுடைய கோபத்துக்கு ஆளாகாத நெறிதவறிப் போகாதவர்களின் வழி (இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன் அம்த அலைஹிம் கைரில் மக்ழூபி அலைஹிம் ஒலல்லாலீன்)''. இந்த வசனத்திற்கு விளக்கம் சொல்பவர்கள் ''இறைஅருள் பெற்றவர்கள்'' என்பதற்கு; இறையருள் பெற்ற வானவர்கள், இறைத்தூதர்கள், வாய்மையாளர்கள், வீரத்தியாகிகள், நல்லவர்கள் என்னும் விளக்கத்தையும். ''கோபத்திற்கு ஆளாகாத, நெறிதவறிப் போகாதவர்கள்'' என்ற சொற்களுக்கு யூதர்கள், மற்றும் கிறித்தவர்களைக் குறிப்பிட்டு நிற்கின்றன என்ற விளக்கத்தையும் தருகிறார்கள்

பீரப்பா இந்த வசனங்களை வேறொரு அர்த்தத்தளத்திற்கு நகர்த்துகிறார். அரபு வட்டாரம் அல்லாத ஆசிய, இந்திய, தமிழ் வட்டாரம் சார்ந்த இசுலாமியப் புரிதலோடு பீரப்பாவிடம் இந்த வசனங்களின் அர்த்தங்கள் தொழிற்பட்டு நிற்கின்றன. ''இறை அருள் பெற்றவர்கள்'' என்பதற்கு ''அவுலியாக்கள்'' என்னும் இறைநேசர்கள் என்ற இந்த வட்டார அடையாளத்தையும் ''கோபம், வழிதவறியவர்கள்'' என்பதற்கு யூதர்கள், கிறிஸ்தவர்கள் என்ற மரபான அர்த்தங்களைத்துறந்து ''சதிகள் அனியாயம் செய்வோர்'' என்னும் பருண்மையான அர்த்தத்தையும் பீரப்பா முன்வைக்கிறார்.

பீரப்பா அவர்கள் செய்திருக்கும் இந்தப்பொருண்மை இடையீடு தமிழ்ச்சூழல் சார்ந்த இசுலாமிய உருவாக்கத்திற்கு சில அடிப்படைத் தரவுகளை முன்னெடுத்து வைக்கிறது.

அல்ஃபாத்திஹா அத்தியாயத்தின் வசனங்களை பீரப்பாவும், ஞானியாரப்பாவும் மொழியாக்கம் செய்துள்ளார்கள். பீரப்பாவின் இம்மொழியாக்கம் ஞானப்புகழ்ச்சி பிரதியின் இறுதிப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

தக்கலை அஞ்சுவன்னத்தார் வெளியிட்டிருக்கிற பீரப்பாவின் பாடல் தொகுப்பில் (1995 - ல் வெளியிடப்பட்டது) இடம் பெற்றுள்ள ஞானப்புகழ்ச்சி பிரதியில் மொத்தம் 686 பாடல்கள்

இடம் பெற்றுள்ளன. இவர்கள் 1977-ல் வெளியிட்டுள்ள பீரப்பாவின் பாடற்தொகுப்பில் மொத்தம் 687 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இந்தப்பிரதியில் வெண்பா பாடல் ஒன்று இருமுறை இடம் பெற்றுள்ளதாகக் கருதி ஒன்றை நீக்கம் செய்துள்ளார்கள்.பழைய பிரதியில் இடம் பெற்றிருந்த 152 - வது பாடல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

துஆ இரப்பு பகுதியானது கலி வெண்பாவில் அமைந்துள்ளது. இப்பகுதியில் மொத்தம் 227 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதில்664-வது பாடலிலிருந்து 678 -வது பாடல் வரை ஃபாத்திஹா அத்தியாயத்தின் மொழியாக்கமாக அமைந்துள்ளது.

ஞானியாரப்பாவின் திருப்பாடற் தொகுப்பில் அல்ஃபாத்தி அத்தியாயத்தின் மொழியாக்கம் இரண்டு இடங்களில் இடம் பெற்றுள்ளது. ஞான தோத்திரம் என்ற பகுதியிலும், ஞானப்பஃறொடை எனும் பகுதியிலும் இது இடம் பெற்றுள்ளது.

ஞானத் தோத்திரத்தில் ஹூயில்லல்லாவென்ற ஒரு பா இருபஃது என்னும் தலைப்பில் இம்மொழியாக்கம் இடம் பெற்றுள்ளது. நான்கு வரிகளைக் கொண்டு அறுசீர்த்தாழிசையில் பதினேழுபாடல்கள் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன. முதலிரு பாடல்கள் தவிர ஏனைய பதினைந்து பாடல்களும் அல்ஃபாத்திஹா அத்தியாயத்தின் மொழியாக்கமாக அமைந்துள்ளது.

இப்பாடல் அமைப்பைப் பொறுத்தவரை பாடல்களின் முதல்வரி இவ்வத்தியாயத்தின் சொற்களைக் கொண்டு தொடக்கம் பெறுகிறது. ஆறாவது பாடலிலிருந்து ஒவ்வொரு பாடலின் ஒவ்வொரு வரியும் இவ்வத்தியாயத்தின் சொற்களைக் கொண்டு தொடக்கம் பெறுகின்றது.

*மாலிக் கியௌ மித்தீனாய்*

*வளரும் மக்கானில் நடுவாகி*

*மாலிக்கி யௌ மித்தீனாய்*

வளருங் குத்தூ ஸருளாகி
யிய்யாக் கநஃபு தென்றுனை
யிறைஞ்சு மடியாருடன்கூட
யிய்யாக் கநஃபு தெனும்நிறைந்த
விதந்தா ஹூயில் லல்லாவே.

ஒயிய்யாக் கநஸ்த கீனென்றுன்
னறிவி லிருந்து நீ தூங்கி
ஒயிய்யாக் கநஸ்த கீனென்றுன்
னொளியை யுன்கண் ணாற்பார்த்து
ஒயிய்யாக் கநஸ்த கீனென்றே
யிருத்தித் தெரிசித் திருவிழியால்
ஒயிய்யாக் கநஸ்த கீனென்று
னிதந்தா ஹூயில் லல்லாவே.

ஞானப் பஃறொடையில் இருநூற்று நாற்பத்திஐந்து பாடல்கள் இடம் பெற்றுள்ளன. கலிவெண்பா, சந்தம் என்னும் இருவகை யாப்பு முறைகளில் இப்பாடல்கள் அமைந்துள்ளன. கலிவெண்பா சங்கிலித் தொடர் போன்ற இணைப்புடைய இருவரிகளாலும், சந்தம் - நெடுங்கவிதை அமைப்பிலும் இடம் பெற்றுள்ளது.

இதில், அல்ஃபாத்திஹா அத்தியாயத்தின் மொழியாக்கம் 132லிருந்து 248-ம் பாடல்வரை இடம் பெற்றுள்ளது. மொத்தம் 116 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அனைத்துமே கலிவெண்பாவில் அமைந்துள்ளன. மறைபொருள் சார்ந்த மொழியில் இவை அமைந்துள்ளன.

இம்மொழியாக்கத்தில் அல்ஃபாத்திஹா அத்தியாயத்தின் மூன்றாவது வசனமான மாலிக்கியவ்மித்தீன் என்பதிலிருந்து மொழியாக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

பீரப்பா, ஞானியாரப்பா இருவரின் மொழியாக்கத்திலும்

காணப்படும் பண்பு இருவரின் மொழியாக்கத்திலும் வசனத்திற்கு வசனம் மொழியாக்கம் நடைபெறவில்லை. ஒரு வசனத்தில் இடம் பெற்றுள்ளச் சொற்களை பல அலகுகளாக இருவரும் பிரிக்கிறார்கள்.

ஒவ்வொரு அலகிற்கும் தனித்தனிப்பாடல்கள் இருவராலும் தரப்பட்டுள்ளன.

அல்ஃபாத்திஹா அத்தியாயத்தின் முதல் வசனமான அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன், என்பதில் அல்ஹம்மதுலில்லாஹி, என்பதை ஓர் அலகாகவும் ரப்பில் ஆலமீன் என்பதை மற்றொரு அலகாகவும் பீரப்பா பிரிக்கிறார்.

அல்ஹம்துலில்லாஹி அனைத்தும் புகழ்வதைக் கபூல் செய்

தெல்லாதிக் றுள்ளுறையு மேகனே - சொல்லந்த

மேலும் றப்பிலால மீனென் னிறைவநீ

ஆல மனைத்தும் படைத்தாள்வோனே - கோலமுடன் -

( ஞானப்புகழ்ச்சி 664 - 665)

ஞானியாரப்பா அவர்கள் இதே வசனத்தை மூன்று அலகுகளாகப்பிரிக்கிறார். அல்ஹம்து, லில்லஹி, றப்பில்ஆலமீன் என்று அவை பிரிக்கப்பட்டுள்ளன.

அல்ஹம் தெனவே நீயெவைக்கு

மடங்கா நிரப்ப முடையோனே

அல்ஹம் தெனவே யென்னுளத்தி

லறிவைத் திடமா யாண்டோனே

இல்லந் தனிலே நீதவறா

திருக்குஞ் சுடரே யென்கோனே

இல்ல மறிந்துன் றனைவணங்க

விதந்தா ஹூயில் லல்லாவே

லில்லா ஹியென் றுலகனைத்தும்
நிறைந்த பொருளாய் நின்றடியார்
லில்லா ஹியென் றுனைவணங்கும்
நினைவோர் தனையாட் கொண்டோனே
எல்லா முடிவு முனைப்போலே
யிருக்கு மிலையென் றருள்வோனே
எல்லாம் வெளிப்பட் டிருக்குந்தொழி
லிதந்தா ஹூயில் லல்லாவே.

றப்பில் ஆலமீனெனவும் நினைவுக்
கடலுள் ளொளி திரண்டு
றப்பில் ஆலமீனெனவும்
நினைந்து புரியுள் மணியாகி
எப்போதுங்கண் திறந்துதிறந்
திமைதியாதிருக்கும் பார்வையுரு
எப்போதுங்கண் டுனைவணங்க
விதந்தா ஹீ யில்லல்லாவே

பீரப்பாவின் மொழியாக்கத்தில் அவை நேரடி மொழிபெயர்ப்புத் தன்மையும், மீள் வடிவாக்கத்தன்மையும் சேர்ந்து தொழிற்பட்டு நிற்கின்றன.

இப்பாடலில் முதல்வரி அல்ஹம்து லில்லாஹி என்பதற்கான நேரடி அர்த்தத்தைத் தந்து விடுகிறது. அடுத்த வரி அதனை இன்னும் விரிவும் அழகும்படுத்துகிறது.

ஞானியாரப்பாவிடம் நேரடியான அர்த்தத்தைவிடவும் மறைபொருள் சார்ந்த விளக்கங்களே அதிகம் தொழிற்படுகின்றன. கைரில் மக்லூபி அலைஹிம் வலல்லாலீன் என்னும் வசனத்திற்கு இருபத்தி ஆறு பாடல்களைக் கொண்டு

விளக்கம் தருகிறார் (50 வரிகள்) ஞானியாரப்பா. ·கைறில் மக்லூபி என்பதை ஓர் அலகாகவும், அலைஹிம் வலல்லால்லீன் என்பதை மற்றொரு அலகாகவும் கொள்கிறார். முன்னதுக்கு ஆறுபாடல்களிலும் பின்னதுக்கு இருபது பாடல்களிலும் விளக்கம் தருகிறார்.

இருவருமே மரபான அர்த்தத்தளத்தில் செயல்படவில்லை. என்பது இருவரிடமும் காணுகின்ற மற்றொரு பொதுக்கூறு. இவ்வத்தியாயத்திற்கு தமிழில் இதுநாள் வரையிலும் வந்திருக்கின்ற உரைநடை மற்றும் கவிதை சார்ந்த பொழிவுகள் அனைத்தும் மரபான அர்த்தத்தளத்தைத் தாண்டி இயங்கவில்லை. பீரப்பாவும் ஞானியாரப்பாவும் மரபை மீறியும் வேறு வேறு வெளிகளுக்குள் பயணிக்கிறார்கள்.

இருவரின் ஆன்மீகம் சார்ந்த பயண வெளி ஒன்றாகவே இருக்கிறது. சூஃபி மரபை ஏற்றுக்கொள்கிற, ஔலியாக்கள் எனப்படும் இறை நேசர்களை ஏற்றுக் கொள்கிற, தரீகா என்னும் இஸ்லாமிய ஆன்மிகப்பள்ளியைப் பின்பற்றுகிற, இஸ்லாமிய ஆன்மிகமே இருவருடையதாகவும் இருக்கிறது.

அன்அம்த வென்றொலிமார்க் காகவரு நிஃமத்திலொன்
றுன்னந்த மீந்தருளு முத்தமனே - அன் அம்த

அலைகிமென வேஅவுலி யாக்களொடு மெங்களைநீ
சலுகையுடன் கூட்டியருள் தருவோனே - பலவிதமாய்ச்

சதிகளனி யாயஞ்செய்வோர் தம்முடன்கூட் டாமலே
கைறில்மகு லூபியயன்றுங் காப்பவனே -தெரியுநல

வாமவுலி யாக்களுட னடியேனை யுஞ்சேர்த்து
நேமநபி யோடெமதுள் நிற்பவனே - யோமதனுள்

என்று பீரப்பாவும்

முஹம்மதுக்கு

கொடுத்தவரி சைப்பேறுங் கூறுமொலி மார்களுக்கு
கொடுத்ததவப் பேறுங் குதறத்தையுங் - கொடுத்தபடி
என்றனக்கு நீயருள்வா யென்றனைப்போ லுன்றனுடன்
வந்திரப்ப வர்க்குமருள் வல்லோனே - அந்தவருள்
எல்லா வொலிமார்க்கு மின்பமுட னேகொடுத்த
வல்லமையும் பேறும் பறக்கத்துடன் - நல்லதொரு

அரிய விலாயத்து மவர்க்களித்த வாழ்வுகளும்
உரியநபி மார்க்களித்த உண்மைகளுங் - கதியுடனே
அஹ்மதிர்ற ஸூல்க்களித்த வதிகப்பெரும் புகழுஞ்
ஜெகமலிற ஸூலருகில் சேர்வையுறும் - அகமகிழ
நாலுபே ருக்களித்த நலவும் பெருவாழ்வும்
கோலுமதி ராசதமுங் குறிக்கவொண்ணா - மாலுடைய
முஹ்யித்தீன் தனக்களித்த முறையும் பெருதவமுஞ்
செகத்திலொலி மார்க்களித்த திருவருளு - மகத்துவமாய்
ஒன்றாய்த் திரட்டியெல்லா மொன்றா யெனக்கருளும்
ஒன்றாய்த் தருங்கிருபை யுத்தமனே

என்று ஞானியார் அப்பாவும் பாடுகிறார்கள்.

படைப்பு மனம் சார்ந்தும், அனுபவ வெளிசார்ந்தும் அவர்களின் மொழிகளின் வித்தியாசங்களைப் பிரதிகள் உணர்த்தி நிற்கின்றன.

# ஞானியார் பாடல்

## ஹூயில்லல்லாவென்ற ஒருபா இருபஃது
## அறுசீர்த்தாழிசை

ஆகந் தனிலே யோர்சொருப
மழிவற் றிருக்குங் கமலமதில்
பாகுந் திருவில் நடம்புரிந்து
பழய வடியா ருளத்திலிருந்
தாகங் கிருபை விளைத்துவினை
யறுத்தே யவர்கட் கருள்கொடுக்கும்
ஏக நினைவொன் றுயிருந்த
விறையே ஹூயில் லல்லாவே.

எறும்பு கடையாம் யானைமுத
லெல்லா வுயிர்க்கு முறுந்துணையே
சிறந்த பொருளே மாமணியே
சிந்தைக் கலக்க மறுத்தெனக்குள்
அறந்தந் துளத்தை வெளியாக்கி
யருள்நீ யென்றுந் தன்நினைவில்
இறைஞ்சத் திடந்தந் தருள்புரியு
மிறையே ஹூயில் லல்லாவே.

அல்ஹம் தெனவே நீயெவைக்கு
மடங்கா நிரப்ப முடையோனே
அல்ஹம் தெனவே யென்னுளத்தி
லறிவைத் திடமா யாண்டோனே
இல்லந் தனிலே நீதவறா
திருக்குஞ் சுடரே யென்கோனே
இல்ல மறிந்துன் றனைவணங்க
விதந்தா ஹூயில் லல்லாவே

லில்லா ஹியென் றுலகனைத்தும்
நிறைந்த பொருளாய் நின்றடியார்
லில்லா ஹியென் றுனைவணங்கும்
நினைவோர் தனையாட் கொண்டோனே
எல்லா முடிவு முனைப்போலே
யிருக்கு மிலையென் றருள்வோனே
எல்லாம் வெளிப்பட் டிருக்குந்தொழி
லிதந்தா ஹூயில் லல்லாவே.

றப்பில் ஆலமீனெனவும் நினைவுக்
கடலுள் ளொளி திரண்டு
றப்பில் ஆலமீனெனவும்
நினைந்து புரியுள் மணியாகி
எப்போதுங்கண் திறந்துதிறந்
தி◌மைதியாதிருக்கும் பார்வையுரு
எப்போதுங்கண் டுனைவணங்க
விதந்தா ஹீ யில்லல்லாவே

அர் ரஹ்மான் றூஹுதனில்
ஆசிக் காய்யா ஹூலுறுகி
அர் றஹ்மான்இருநாசி யதனில்
நிறைந்து விரைந்தோடும்
நிர் றஹீமென் றுட்புகுந்து
நிலைக்கும் மஃசு கெனுநினைவாய்
நிர் றஹீமென் றிஷ்க்குவழி
யிதந்தா ஹூயில் லல்லாவே.

மாலிக் கியௌ மித்தீனாய்
வ்ளரும் மக்கானில் நடுவாகி
மாலிக்கி யௌ மித்தீனாய்
வளருங் குத்தூ ஸருளாகி
யிய்யாக் சநஃபு தென்றுனை
யிறைஞ்சு மடியா ருடன்கூட
யிய்யாக் கநஃபு தெனும்நிறைந்த
விதந்தா ஹூயில் லல்லாவே.

ஒயிய்யாக் கநஸ்த கீனென்றுன்
னறிவி லிருந்து நீ தூங்கி
ஒயிய்யாக் கநஸ்த கீனென்றுன்
னொளியை யுன்கண் ணாற்பார்த்து
ஒயிய்யாக் கநஸ்த கீனென்றே
யிருத்தித் தெரிசித் திருவிழியால்
ஒயிய்யாக் கநஸ்த கீனென்று
னிதந்தா ஹூயில் லல்லாவே.

இஹ்தி யென்றுன் றன்கிருபை
யெல்லா வுயிர்கட் களவாகி
இஹ்தி யென்றுன் றிருவுளத்தி
லெல்லா வுயிரும் வளர்ந்துநிறை
இஹ்தி யெனுமுந் தனைத்தெரிசித்
திருக்குஞ் சூட்ச மடியாருள்
இஹ்தி யெனுமுத் துள்ளிருந்த
விதந்தா ஹூயில் லல்லாவே.

நஸ்ஸி றாத்தலென் றெழுச்சங்குள்
நாடும் க்ஹீதிர் றஹ்மானே
நஸ்ஸி றாத்தலென் றெழும்பூதம்
நாலொன் றுருவோம் நற்பரனே
நஸ்ஸி றாத்தலென் றிருநாசி
நடுவி லிருக்கும் நாயகனே
இஸ்லா மெனும்போர் பெற்றகுண
மிதந்தா ஹூயில் லல்லாவே.

முஸ்த கீமென் றுனதுதிரு
முகமென் னளவு தானிரங்கி
முஸ்த கீமென் றுனதுதிரு
முன்னே தோன்று மூதறிவை
முஸ்த கீமென் றுனதுதிரு
முழியா லெனைப்பார்த் தருள்புரிந்து
முஸ்த கீமே யென்றதிரு

முத்தருள் ஹூயில் லல்லாவே.

ஸிறாத் தல்லதீனா வெனவும்
தன்னைப் புகழ்ந்து தானாகி
ஸிறாத் தல்லதீனா வெனவும்
தன்னுள் தஜல்லி வெளியாகி
ஸிறாத் தல்லதீனா வெனவும்
சியாறத் தருளே மக்கானாய்
ஸிறாத் தல்லதீனா வெனுஞ்சொல்
தந்தாள் ஹூயில் லல்லாவே.

அன் அம் தவென் றுன்கிருபை
யளவாம் றூஹின் னளவாகி
அன்அம் தவென் றுன்புகழை
யடக்கி யெகீனில் முறாதானாய்
அன்அம் தவென் றெழுஞ்சோதி
யருளும் றஹ்மான் நீயெனக்குள்
அன்அம் தவென் றுனதுகழ
லருள்தா ஹூயில் லல்லாவே.

அலைஹிம் கயிரில் என்றுனதி
னன்கப லணைத்து மருவுமதில்
அலைஹிம் கயிரில் என்றெழுந்த
வழகைத் திரட்டி யுருவாக்கி
அலைஹிம் கயிரில் என்னுமுன
தறிவு நிரப்பி யெடுத்துமுத்தும்
அலைஹிம் கயிரில் என்றகைறு
அருள்தா ஹூயில் லல்லாவே.

மஃலூ பி அலை ஹிமென்றுன்
மவுன வழியால் தூங்குமப்போ
மஃலூ பிஅலை ஹிமென்றுன்
மவுனந் தானே பிறந்துமெதிர்
மஃலூ பிஅலை ஹிமென்றுன்
மலர்ப்பொற் கரத்தா லெடுத்தணைத்த

மஃஹூ பிஅலை ஹிமென்றுன்
வழிதா ஹூயில் லல்லாவே.

ஒலல் லால்லீ னென்றபொரு
ளுறுதி றூஹில் திடனாக்கி
ஒலல் லால்லீ னென்றுனதா
முண்மை வழுவா துறைப்பாக்கி
ஒலல் லால்லீ னென்றதிரு
வொளிமுச் சுடர்தந் துரவாக்கி
ஒலல் லால்லீ னென்றபுக
ழுரிமை யருள் ஹூயில் லல்லாவே.

ஆமீ னென்றே வுலகனைத்து
மாண்ட பொருளே யக்கடலில்
ஆமீ னென்றோர் வலம்புரியாய்
ஆமீ னென்றோர் முத்தாகி
ஆமீ னென்ற நாமமுறு மழகாம்
முத்தை யடியார்க்குள்
ஆமீ னென்றென் னுளத்திலருள்
ஆமீன் றப்பில் ஆலமீன்

# ஞானியார் பாடல்
# ஞானப்பஃறொடை

கலி வெண்பா

ஆமீனென் றுன்னை யடியேன் புகழ்கின்றேன்
ஆமீனா யுள்ளி லருள்செய்வாய் - ஆமீனை

முற்றும் வழுவா துளத்தில் முத்திவர மீந்தெனக்குள்
முற்றுமுள மீதிலருள் முப்பொருளே - முற்றுமுனை
எண்ணாமல் நானு மிருந்தேன்நீ தான்பொறுப்பாய்
எண்ணாமல் வேறிருந்து மெண்ணுமோ - எந்நாளும்
நின்னாமந் தன்னை நினைக்குமடி யாருளத்தில்
நின்னாமந் தானாய் நிலைத்தோனே - நின்னாமம்
வேறொன் றிலையே விளங்கவடி யேனுரைக்கக்
கூறுந் திருவருளைக் கூறக்கேள் - தேறில்
முச்சுடருங் கூடியன்று முப்பொருளாகும் போது
அச்சுடரி லொன்று வெளி யாகியே - நிற்சிவமாய்

மாயா சொரூபமதாய் வந்துதிற மாயிருந்தும்
ஓயாதென் னுள்ளத் துருவாகிக் - காயமதில்
மன்னுஞ் சுடர்மணியே வேந்தேயென் னுள்ளமதில்
எண்ணுந் திருவருளி லென்கோனே - யுன்னறிவைப்
பார்க்கும் பொழு தேயடியார் பாசம் வழுவாமற்
சேர்க்குங் குருவருளைச் சேர்த்தேதான் - ஊக்கமுற
ஆறிரண்டு நாலா யடர்ந்த திருவருளைக்
கூறிடினால் வேறாய்க் குறிக்குங்கால் - தேறுகின்ற
அப்பொருளை யுள்ளி லறிவா லறிந்தாக்கால்
தப்பாது ஞானந் தலைப்படுமே - செப்பமுடன்

இந்தவகை சற்று மியலறியா வேலைதனைச்
சிந்தைதனில் நீமறக்கிற் செய்பவரார் - நின்றனுடன்
அடியேன் புகல்கின்றே னாதியேநீ யறிந்து
முடியா வருளை முடிவிப்பாய் - படிமீதில்
மாலிக்கி யெளமித்தீ னாக வளர்ந்தோங்கிப்
பாலித் தருள் தருநற் பைந்தருவே - காலிலுற
இய்யாக்க நஃபு தெனுங்கிருபை யாய்றெளிந்தே
இய்யாக்க நஃபுதெனு மின்பமுற - இய்யாக்க

நஃபுதெனுஞ் சொருபான நாயகனே யுன்னை
நஃபு தெனும்விழியால் நாடியே - நஃபுதெனுங்

கண்ணாற் றெரிசித்துக் காணவெளி தோயிறையே
உன்னாற் சொருப மொளிவாகும் - உண்ணாத
மூலத்தூண் மேலே முடிவிலொரு காலேங்கி
மேலைத்தூண் காட்டிவரு மெய்யிறையே - மேலைத்தூண்
முட்டிநின்ற சோதி முழுமுதலைத் தானறிந்தே
இட்டமுட னுன்னை யிறைஞ்சுதற்கு - வட்டமதி
யந்தரத்தி லேதெளிவா யந்தரத்தி லேமறைவா
யந்தரத்தை யுன்னுளத்தி லாக்கியே - அந்தரத்தை
வெளியோ டுறவாக்கி மெய்யைவெளி யாக்கி
வெளியை மனமீதில் வெளியாக்கி - வெளியதனில்

ஊன்றுஞ் சொருப மொளிக்கும் வகையறிந்தே
ஊன்றுஞ் சொருபமதி லூன்றியே - ஊன்றுமந்த
அட்சரத்தைப் பார்த்தவ் வருளதனி லேவிரைந்தும்
அட்சரத்தைக் கண்ணா லருளாக்கி - யட்சரத்தை
மூடுஞ் சொருப முனையா லுறத்தூங்கி
மூடுஞ் சொருப முளிபார்த்து - மூடுமதில்
தூங்குகின்ற வேளைதனிற் சூட்சமெலாந் தோன்றுமதில்
தூங்குகின்ற வேளை சுகமாகுந் - தூங்குமதில்
அண்டரண்ட பூதலுமு மக்கடலு மம்மலையு
மண்டலமூன் றோடு மதியுடனே - மண்டலந்தான்

மேலுருவி மேலான மெல்வெளிமுப் பாழுமதில்
மேலுருவிக் காணா விளக்கொளிவாய் - மேலுருவி
யப்பாலே நின்ற தறுமூன்று மாறொளிவும்
அப்பால் நடனவொலி யானதுவும் - அப்பாலே
பாத மிரண்டும் பரவேத சாஸ்திரமும்
போதமதிலான புகழொளியும் - நீதமுடன்
அப்பு பிருதிவியு மானதே யும்வாய்வும்
மெய்ப்பான விண்ணும் வெளியொளியும் - ஒப்பமுடன்
தூங்குகின்ற வேளைதனில் தோன்றுமிவை யெல்லாந்தான்
ஆண்டோ னமைத்ததெல்லா மாகுங்காண் - மாண்டிடுகிற்
காணாத தெல்லாங்கண் காணுமே காரணத்தில்
தோணாத தெல்லாந்தான் தோணுமே - தோணுமதில்

அந்த முடிவுமந்த மில்லாத வம்முடிவுஞ்
சிந்தைதனில் நன்றாய்த் தெளியுமே - சிந்தைதனில்
வைத்ததெல்லாம் நீயே வளர்பொருளே மாதவமே
வைத்ததெல்லா முன்னையல்லாம் வரம்வேறோ -
தைத்ததெல்லாம்
நீயே மனத்துள் நிறைந்தவனும் நீயாகும்
நீயே யமைத்துவர நிச்சயமாய் - நீகபூல்செய்
ஒ இய்யாக்க நஸ்தகீனென் றுன்றன்றிருப் பாதம்ரண்டும்
ஒ இய்யாக்க நஸ்தகீனென் றுள்ளினுள்ளே - ஒ இய்யாக்க

நஸ்தகீ னென்னுமுன் னாதாந்தச் சோதியருள்
நஸ்தகீ னென்னுமுன் னாட்டமதில் - நஸ்தகீன்
என்றதிரு நாட்டமதி லென்னையுற வாக்கியருள்
நன்றிதர வந்துதவும் நாயகனே- நன்றிதரும்
அறிவே பொருளே அகமே மணிவிளக்கே
நெறியே குருமொழியின் நிச்சயமே - நெறிபரவும்
அன்பே கருணை யருளா ரமுதேவுன்
முன்பே ரொளியான முப்பொருளே - முன்பேர்
ஒளியிற் சொரூபவொளி யுத்தமனே யுட்பரனே
ஒளிவையுரு வாக்கிவரு முட்பொருளே - யொளிவதனை

வைத்ததெல்லா முன்னுடைய மார்க்கமே மாசோதி
வைத்ததெல்லா முன்னுடைய மாகிருபை - வைத்ததெல்லாம்
என்னசெய்வே னென்னுளத்தி னிந்திரமா யத்தொழிலை
என்னசெய்வே னாதத் திருவொளிவே - என்னசெய்வேன்
பூவுலகும் வானுலகும் புகழ்ந்த திருவுலகும்
பாவிதமாய் நிற்கும் பழம்பொருளே - பாவிதமாய்
சரசரண மோகத் தவமேமெய் யோடுறையுஞ்
சரசரண மோகத் தவப்பொருளே - சரசரணம்
அதிர்தொனியைக் காய மதிலழக தாயுறுநல்
அதிர்தொனியைச் சித்திரம தாகவே - அதிர்தொனியை

உறுதியா யுள்ளில் லுருகியெடுத் தோர்கள்
உறுதியே யன்பி லுறுந்துணையே - உறுதிதரும்
மெய்ஞ்ஞான முத்தே விளக்கே விளக்கொளியே
மெய்ஞ்ஞான வித்தே விளக்கொளியே - மெய்ஞ்ஞானம்
நாலு பரிசறியும் நல்லவடி யார்க்குதவும்
நாலுங் கிருபையருள் நாயகனே - நாலுமதில்
உன்னிவரு வோர்க ருளத்தில் நடம்புரியும்
உன்னிவரு வோருளத்தி லுட்பரவும் - உன்னுமதில்
மாறுந்தொழிலாகி வரிரண்டு மொன்றாகி
மாறி யிருந்த வகைகேளாய் - மாறுவது

கீழ்மேல் தலையறிவாய்க் கெம்பித்துள் ளுடாக்கிக்
கீழ்மேல் தலையறிவாய்க் கிண்டியே - கீழ்மேல்
தலைகடந்து கால்கடந்து தாண்டிநடு வாகித்
தலைகால் நடுவறிந்து தாண்டியே - தலைகாலும்
முறுக்கியறுத் தூடாக்கி முத்திதனைப் பார்க்கில்
முறுக்கியருள் நேரே மொழியுங்கால் ஶ்ரீ முறுக்கியதில்
முகக்கண் ணறுத்தனலை மூட்டியகக் கண்மீதில்
முகக்கண் ணடைத்ததனில் முத்தியாய் - முகக்கணதை
அகக்கண்ண தாய்வைத் தறிந்தபெரி யோர்கள்
அகக்கண்விழி யாற்றெரியு மம்பரனே - அகக்கணதில்

இஹ்திநஸ்ஸி றாத்தலெனு மின்பப் பெரும்பொருளை
இஹ்தி யெனு முள்ளி லிதமாக - இஹ்தியெனு
முன்னின்றே பார்க்க முழுதும்வடி வாயிருந்து
முன்னின்றே பார்க்கவரு முச்சுடரே - முன்னின்றே
வடிவி லதிகவொளி மாசொருப மாயிருந்து
வடிவி லதிகவொளி வாக்கினாய் - வடிவதனில்
எல்லா வுயிர்களுக்கு மிந்தவகை சூறத்தெனும்
எல்லா வகையுள் ளிசைந்தோனே - யெல்லாந்
திரட்டிவிளங் காய்போற் சிறியவணு வாக்கியதை
திரட்டியுளி லீந்த செயப்பொருளே - திரட்டியதை

இஹ்திநஸ்ஸி றாத்தலென் றியம்புமாடி யார்க்கதனை
இஹ்திநஸ்ஸி றாத்தலென வீந்தோனே - இஹ்தி
நஸ்ஸிறாத்த லென்றே நடுநிலையாய் நிற்பவர்க்குள்
நஸ்ஸிறாத்தல் முஸ்தகீமருளும் நாயகனே - நஸ்ஸிறாத்தல்
முஸ்தகீ மென்றதிரு மூலமணி மந்திரத்தை
முஸ்தகீ மென்றுணர்வோர் முன்னின்று - முஸ்தகீம்
ஆக வுயிரெவையு மந்தவடி யார்க்கருளும்
ஆக மெனக்கருளும் ஆண்டவனே - ஆகமதை
கேட்டபடி யாகக் கிருபையுட னேகொடுக்கும்
கேட்டபடி யுற்றருளுங் கேள்வியே - கேட்டபடி

தந்தா யெனக்குமொரு தானவனே நீயெனக்குள்
வந்தாய் வசன மறவாம - லுன்றனருள்
எறும்புகடை யானைமுதல் எல்லா வுயிர்க்கும்
உறும்படி நீபரவு முற்பனமே - உறும்படி தான்
நினைத்தவர்க ளுள்ளமதில் நின்றோனே நிச்சயனே
நினைத்தவர்க ளுள்ளுறையும் நேயனே - நினைத்தவருள்
மாறாத சோதி மணிவிளக்கே மாமனமே
மாறாத ஞான மகிழ்ச்சியே - மாறாமல்
வெளியையுரு வாக்கி விரைவிலெழுந் துள்ளில்
வெளியுருவாய் நின்றருளும் வேந்தனே - வெளியுருவாய்

ஆடை சலமா யவனிபத மாயிருந்து
கூடுகின்ற வாயு குறிமூச்சாய் - நாடுமதில்
வெளியக் கினியாய் விளங்கியதோ ரவ்வுருவந்
தெளிவடக்குத் தெற்கதனிற் சேகரமாய் - ஒளிபரவக்
கீழ்முகமாய் மேல்முதுகாய்க் கிருபையுடன் கண்டவர்க்குக்
கீழ்முகமு மேல்முதுகு மானோனே - கீழ்மேலாய்
அம்பரமே தானுருவா யானதுவை யுள்ளமிசை
யம்பரமே யம்மனத்தி லாக்கியே - அம்பரத்தின்
முடிகீழ் முறையான மூதறிவின் பாதமதை
முடிகீழ் பிருதிவியில் மூட்டியே - முடிகீழாய்

உடைசலமாய் நின்ற உரிமைதனை யுள்ளுருக்கி
யுடைசலமா மவ்வெழுத்தை யுள்ளமதில் - உடைசலத்தை
மேவுகின்ற வாயு விளங்குமூச் சானதனை
மேவுசரத் தோடறிவாய் மேவியே - மேவுசரம்
அடங்கா விழிதனக் கைய்க்கிய மானதனை
அடங்காத் தியானவிழி யாற்பார்வை - அடங்குமதில்
தெற்குவடக் காயிருந்த சித்திகர மானதனைத்
தெற்குவடக் காயிருத்திச் சேரலுமாய்த் - தெற்குவடக்
கொட்டுமுகங் கீழுமுயர் வாய்முதுகு மேற்கானால்
ஒட்டதனை மெய்க்குருவா லுன்னியே - ஒட்டியபின்

இந்தவகை யாயிருந்த யின்பத் திருச்சொருபை
இந்தவகை யாய்வணங்கி யேத்தியே - இந்தவகை
காணுமடி யாருளத்திற் கர்மியமெல் லாமறுத்துக்
காணுமவர்க் கிப்படியே காட்டினாய் - காணுமவர்
தானா யவரோடு தற்சொருப மானாயே
தேனே மதியமுதே சிற்பரனே - கோனான
ஆதியே சோதி யனாதியே யிப்படிநீ
ஆதியே யென்முன்வரு மாண்டவனே - ஆதியருள்
சொருபமிது போலாகித் தோன்றுவா யெந்தன்முனே
சொருபம்போ லென்னையுந்தான் சூட்சிப்பாய் - சொருபமதுள்

ஸிறாத்தல்ல தீனவெனு முன்னைப்புகழ்ந் தோர்களுக்கு
ஸிறாத்தலெளி தாகிவருந் தேனமுதே - ஸிறாத்தலது
மயிரினுமோர் கூர்மை மகாநேர்மை யாக
மயிர்முனையை ரண்டு வகையாக்கி, மயிர்முனையுட்
கூறுஞ் சிறாத்தலெனுங் குறிநாசிக் குள்ளிருக்குங்
கூறுகின்ற மாலைக் கொடுமுடியே - கூறுமதில்
அக்கினி சொ ரூபமதா யனல்பரவி மோதுமதை
அக்கினிபோ லாகவரு மாரணனே - அக்கினியைக்
கடந்திந்தப் பாலக் கதிர்முனையுந் தான்கடந்து
கடந்துநின்ற சூட்சமருள் காரணனே - கடந்துநின்ற

அடியாருடனெனையு மாதியே நீசேர்ப்பாய்
அடியா ருடன்கூட்டென் னகவிளக்கே - அடியார்கள்
உன்னைத்தெரி சிப்பார்க ளுன்னை யறியேனான்
உன்னைத்தெரி சிக்கும்வகை யூன்றறியேன் - உன்னறிவில்
என்னைவழு வாதவர்க ளோடே யிதமாக்கி
என்னைவழு வாதருளு மென்கோனே- என்னுளத்தைக்
காணாமற் றானே கலங்குகிறேன் கற்பகமே
காணாம லுள்ளங் கரைகரைந்து - காணுகின்ற
பெரியோ ருடனெனையும் பேதகமில் லாமலங்கண்
பெரியோ ருடன் கூட்டென் பெரியவனே - பெரியோர்கள்

பாதந் தொழுத பலன்தருவாய் பன்முறையே
பாதந் தொழுத பயலெனவே - பாதமதைத்
தந்துவிளை யாடியுள்ளில் தற்பரம தாயிருந்து
தந்துவிளை யாடுந் தயாபரனே - தந்தருளில்
அன்அம்த அலைகிமெனு மாசைப்பெ ருங்கிருபை
அன்அம்த அலைகிமெனு மக்கடலில் - அன்அம்த
அலைகிமெனுந் திரையெடுத் தடித்து வெகுமுழக்காய்
அலைகிமெனு மோசையிடு மக்கடலில் - அலைகிமெனும்
வணங்குமடி யாருளத்தில் மாகடலின் திரையெனவே
வணங்குமடி யாருளத்தில் வந்தோனே - வணங்கவருள்

ஆகமங்கள் வேத மதிசாஸ்திர நூன்முறையும்
ஆகமநூல் வேதமுறை யாமெவையும் - ஆகமுடன்
ஆழிதா னாகியதி லத்திரைய தாயடித்தே
ஆழிபோற் பொங்கிவரு மாசையே - ஆழிதனை
உண்டு திறமாகி யுன்னினைவி லேயுறவாய்
உண்டுகொள்ளு வோர்க்கருளு முள்ளருளே - உண்டுகொண்டு
கய்ரில்மக் லூபியென்று முன்னைத் தொழு வோர்களுக்கு
கய்ரில்மக் லூபியென்று மொன்றானாய் - கய்ரில்
மகுலூபி யென்ற வசனப்ர காசம்
மகுலூபி யாகவரும் வல்லோனே - மகுலூபி

என்று வனமீதி லிசைந்தநுகத் தாயிருந்து
கொண்டு படைத்தவுயிர் கூறக்கேள் - முண்டகத்துள்
வைத்ததுவு மந்த மகுலூபி யென்றசொல்லால்
வைத்ததுவு மந்தவுரை மார்க்கமே - வைத்தவுரை
மக்லூபி யென்றமுக மாறாய்ச் சுடர்நான்காய்
மக்லூபி யென்று வருஞ்சொருபம் - மக்லூபி
மூன்று சொருபாய் முடிந்தது மொன்றாயிருந்து
மூன்றுமக் லூபியென்று முடிந்தசொலால் மூன்றுமொன்றாய்
அலைஹிம்வலல் லால்லீனென்றா ய்க்குமக்க்காகி
அலைஹிம்வலல் லால்லீன்யிஷ்க தானோனே - அலைஹிம்

வலல்லாவெ னுந்தொழிலை யுற்றமன்கூ ஸதுதனிலே
வலல்லாலீன் மஃகூஸி லுற்றுறவாய் - வலல்லால்லீன்
என்றுமன்கூ ஸின்முதலி றைஞ்சுமஃ கூஸின்முதல்
ஒன்றுபடக் காட்டிவரு முச்சுடரே - ஒன்றுபடக்
காட்டுங்கிரு பையெனக்குக் காரணனே நீயருள்வாய்
காட்டுங் கிருபையருள் காரணனே - காட்டுகின்ற
மன்கூஸி லானவுண்மை மவ்கூசி லானவகை
இன்குறுசுக்குள்ளாக்கு மேகனே - யின்குறுஸ்

அமைத்தாய் பலவுயிரு ளாண்டுமதுக் குள்ளிருந்தே
அமைத்த குறுஸிலறி வானவனே - அமைத்துவைத்த

உன்குறுஸை யிக்குறுஸி லொன்றுபடக் காட்டியருள்
உன்குறுஸை யிக்குறுஸி லொன்றாக - நின்கருணை
அஹ்மதிர்ற ஸூல்நபிக் காக்கினே னென்று
ஜெகமகிழ வேயுரைக்குஞ் சீமானே - முஹம்மதுக்கு
கொடுத்தவரி சைப்பேறுங் கூறுமொலி மார்களுக்கு
கொடுத்ததவப் பேறுங் குதறத்தையுங் - கொடுத்தபடி
என்றனக்கு நீயருள்வா யென்றனைப்போ லுன்றனுடன்
வந்திரப்ப வர்க்குமருள் வல்லோனே - அந்தவருள்
எல்லா வொலிமார்க்கு மின்பமுட னேகொடுத்த
வல்லமையும் பேறும் பறக்கத்துடன் - நல்லதொரு

அரிய விலாயத்து மவர்க்களித்த வாழ்வுகளும்
உரியநபி மார்க்களித்த உண்மைகளுங் - கதியுடனே
அஹ்மதிர்ற ஸூல்க்களித்த வதிகப்பெரும் புகழுஞ்
ஜெகமலிற ஸூலருகில் சேர்வையுறும் - அகமகிழ
நாலுபே ருக்களித்த நலவும் பெருவாழ்வும்
கோலுமதி ராசதமுங் குறிக்கவொண்ணா - மாலுடைய
முஹ்யித்தீன் தனக்களித்த முறையும் பெருதவமுஞ்
செகத்திலொலி மார்க்களித்த திருவருளு - மகத்துவமாய்
ஒன்றாய்த் திரட்டியெல்லா மொன்றா யெனக்கருளும்
ஒன்றாய்த் தருங்கிருபை யுத்தமனே - ஒன்றெனவே

தேடியுனைக் கேட்டவர்க்குச் செப்பமுடனே கொடுப்பாய்
நாடுமடி யார்க்கருளும் நாயகனே - கூடுதற்கு
ஒன்றுபட வேயெனக்கு முத்தமனே நீயருள்வாய்
ஒன்று படவருள்வ லல்லால்லீன் - ஒன்றுபட
ஆமீனெ னக்கருள்வாய் ஆதியே கேட்டதெல்லாம்
ஆமீனெ னக்கருள்வாய் ஆதியே - ஆமீனே
ஆமீ னுனைநினைந்து யான்கேட்ட தெல்லாந்தான்
ஆமீ னுளத்தில்நிறை வாக்கு.

ஆமீன்

# ஞானப்புகழ்ச்சி

- கலிவெண்பா - பாடல் - 674 - 678

அல்ஹம்து லில்லாகி யனைத்தும்புகழ் வதைக் கபூல்செய்
தெல்லாதிக் றுள்ளுறையு மேகனே - சொல்லந்த

மேலும்றப் பில்லால மீனென் னிறைவநீ
ஆல மனைத்தும்படைத் தாள்வோனே - கோலமுடன்

அர்றஹ்மா னென்றுலகி லனைவர்க்கும் பா அத்திலொரு
குறைபகராக் கிருபைதருங் கோமானே - இறைவனுன்னை

நின்றுதெரி சிப்பவர்க்கு நிர்றகீ மெனும்பழைய
நன்றிக் கிருபைதரு நல்லோனே - யென்றுமுயர்

ஏவலுறு மாலிக்கி யௌமித்தீ னென்றடியார்க்
காவலுறுங் கூலிகொடுத் தாள்பவனே - காவல்தரும்

நிய்யாகு மென்றுலகில் நின்சரணந் தொழுமவரோ
டிய்யாக் கநகுபுது வென்றேத்திறையே - வஇய்யாக்க

நஸ்தகீ னென்றுமிக நல்லுதவி தேடுமவர்
கஸ்திபோக் கிப் பதவி காண்போனே - விஸ்திநலம்

எட்டமனு கும்பெரியோர்க் கிஹ்திநஸ்ஸிறாத்தல் முஸ்தகீமென்
றொட்டுகடும் பாலத்துத வும்பொருளே - பட்டுடையோர்க்

கிரங்கிசிறாத் தல்லதீனா வென்றருளு மெய்ஞ்ஞானத்
துரங்களறித் தீடேற்றுந் துய்யோனே - வரங்கள்தரும்

அன்அம்த வென்றொலிமார்க் காகவரு நிஃமத்திலொன்
றுன்னந்த மீந்தருளு முத்தமனே - அன் அம்த

அலைகிமென வேஅவுலி யாக்களொடு மெங்களைநீ
சலுகையுடன் கூட்டியருள் தருவோனே - பலவிதமாய்ச்

சதிகளனி யாயஞ்செய்வோர் தம்முடன்கூட் டாமலே
கைறில்மகு லூபியயன்றுங் காப்பவனே -தெரியுநல

வாமவுலி யாக்களுட னடியேனை யுஞ்சேர்த்து
நேமநபி யோடெமதுள் நிற்பவனே - யோமதனுள்

ஒளிகள்தெரி சித்துணரா ஒலல்லாஅல் லீனென்றுன்
வழிபிழைத்தா ரோடுவருத் தாதவனே - தெளிவுறுநல்

மூமீன் களையும்பல் முஸ்லிமோ டெங்களையும்
ஆமீனென்ற வழிதனிலாக் கல்லாவே - ஹாமீமதில்

துணைநின்ற நூல்கள்

1. ஞானமாமேதை ஷெய்கு பீர்முஹம்மது ஒலியுல்லா (ரலி) அவர்களின் மெய்ஞ்ஞானப்பாடல்கள்,

தக்கலை அஞ்சுவன்னம் பீர்முஹம்மதியா முஸ்லிம் அசோசியேசன் வெளியீடு - 1995

2. பீரப்பாவின் ஞானப்புகழ்ச்சி பன்முகப்பார்வை,

பீரப்பா கல்விமையம் வெளியீடு 1993

3. ஹலரத்து ஞானியார் சாகிபொலியுல்லாவின் மெய்ஞ்ஞான திருப்பாடற்திரட்டு,
ஹாஜி.எம்.ஏ.ஷாகுல் ஹமீது - சன்ஸ் பதிப்பகம் 2009

4. முஸ்லிம் தமிழ்ப்புலவர்கள்.

அப்துற் றஹீம்.

யுனிவர்சல் பப்ளிசர்ஸ் 1999

5. இசுலாம் தமிழர் சமயம்,

ம.சோ.விக்டர்

நல்லோர் பதிப்பகம் 2007

6. நபிமார்களின் வரலாறு (இரண்டாம் பாகம்)

அப்துற் றஹீம்

யுனிவர்சல் பப்ளிசர்ஸ் 2010

7. ஸூஃபி வழி ஓர் எளிய அறிமுகம்,

நாகூர் ரூமி

கிழக்கு பதிப்பகம் 2008

9. இஸ்லாமும் இன்பத் தமிழும்,

டாக்டர் முகம்மது உவைஸ்,

யுனிவர்சல் பப்ளிசர்ஸ் 2008

10. ஆய்வுக்கோவை,

அனைத்துலக இஸ்லாமியத் தமிழலக்கிய ஏழாம் மாநாடு 2007

11. ஆய்வுக்கோவை,

அனைத்துலக இஸ்லாமியத் தமிழலக்கிய மாநில மாநாடு 2008

12. திருமறையின் தோற்றுவாய்

மௌலானா அபுல்கலாம் ஆசாத்

(தமிழில் ஸையத் இபுறாகீம்)

வளர்மதி பதிப்பகம், 1965

13. உம்முல் குர்ஆன்

மவ்லவி. பி.ஏ. கலீலுர் றஹ்மான் ரியாஜி,

ரஹ்மத் பதிப்பகம் - 1979

14. மெய்ஞ்ஞான மேதை பீர்முகம்மது அப்பா இலக்கிய ஆய்வுக் கோவை,

பதிப்பாசிரியர் பேராசிரியர். கா. முகம்மது பாரூக்

நன்னெறி பதிப்பகம் -1976

15. சூஃபிகள் தர்ஹாக்கள் - சில மாற்று உரையாடல்கள்,

தொகுப்பாசிரியர். எச். ஹாமீம் முஸ்தபா

கீற்று வெளியீட்டகம், 2003

16. அல்குர்ஆன்

தோற்றுவாய் அதிகாரத்தின் கவிதை மொழி பெயர்ப்புகள் ,

பழங்காசு ப. சீனிவாசன்

பாரதி ஆய்வு நூலகம், 2008

17. திருக்குர்ஆன்

மூலம், தமிழாக்கம், விளக்கவுரை,

இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட் 2003

18. ரஹீக்

(முஹம்மது நபிஸல்) அவர்களின் ஆதாரபூர்வமான வாழ்க்கை வரலாறு)

ஸபியுர்ரஹ்மான், (தமிழில் உமர் ரீஃப்)

தாருல் ஹுதா

19. பாவு - இஸ்லாமிய பண்பாட்டுத் தொகை நூல்,

பீரப்பா கல்விமையம், 1994

20. ஞான மாமேதை பீர்முகம்மது அப்பா,

நன்னெறிப் பதிப்பகம் -2006

21. அப்பாவியம்

ஞானப்புகழ்ச்சி வாசிப்புகள்,

தக்கலை. எச். முஹம்மது சலீம்,

கீற்று வெளியீட்டகம் - 2010

22. சமணமும் தமிழும் -

மயிலை சீனி. வேங்கடசாமி,

பூம்புகார் பதிப்பகம் , 2009

23. குறுந்தொகை

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம், 2007

24. பாக்தாத்தின் இராஜரிசி

முஹியத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி),

எம்.ஏ. ஹைதர் அலி

மும்தாஜ் பதிப்பகம், 2007

25. இசுலாம் வளர்த்த இசைத்தமிழ்,

முனைவர். இரா. திருமுருகன்,
கவிக்குயில் அச்சகம் 1996

26. பௌத்தமும் தமிழும்,
மயிலை . சீனி. வேங்கடசாமி
பாவை பப்ளிகேசன்ஸ் 2007

27. சூஃபி கோட்பாடுகள்,
இமாம் அல்குஷைரி
(தமிழில் அ.தௌபீக் ரமீஸ்),
இராஜா பப்ளிகேசன்ஸ் 2010

28. ஆய்வரங்கக் கோவை
சூஃபித்துவம் ஒரு பன்முகப்பார்வை,
தாசீம்பீவி அப்துல் காதர் மகளிர் கல்லூரி, 2006

29. குர்ஆனிய மொழியாடல் மீள்வாசிப்பின் தருணம்,
ஹெச்.ஜி.ரசூல்,
கீற்று வெளியீட்டகம், 2008

30. பெட்டகம்
குமரிமாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றுப் பொக்கிசம்,
ரஹ்மானிய்யாச் சங்கம், 2001

31. தென்குமரியின் கதை,
அ.கா. பெருமாள்,
யுனைட்டட் ரைட்டர்ஸ், 2003

32. முஸ்லிம்களும் தமிழகமும்
டாக்டர். எஸ். எம். கமால்
இஸ்லாமிய ஆய்வு பண்பாட்டு மையம் (1990)

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| கலீலியோ முதல் கலாம் வரை | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்சமூலம்- ஒரு சமூகவியல் பார்வை | 30.00 |
| சங்கத் தமிழ் பகுதி 1 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 2 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 3 | 115.00 |
| சங்கத் தமிழ் பகுதி 4 | 130.00 |
| சங்கத் தமிழ் பகுதி 5 | 110.00 |
| ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாற்று இலக்கியங்கள் | 60.00 |
| தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும் | 160.00 |
| இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு | 40.00 |
| பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 70.00 |
| காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு | 40.00 |
| Freudism in the Novels of James Joyce and T.Jankiraman: A comparative study | 125.00 |
| இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல் | 290.00 |
| தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பாடு | 310.00 |
| பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும் | 170.00 |
| தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் | 185.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |
| மொழிபெயர்ப்பு:ஒரு கவின்கலை | 75.00 |
| மூவர்தமிழ் மூன்று பார்வைகள் | 50.00 |
| காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள் | 100.00 |
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா-மொபசான் சிறுகதைகள்-ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| சங்க அகப்பாடல்கள் தோழி கூற்று | 170.00 |
| தமிழ் நாடக மொழியும் வரலாறும் | 110.00 |
| வா.செ.கு. என்ற ஆளுமையாளர் | 50.00 |
| உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் | 45.00 |
| மருதத்தில் மக்கள் வாழ்வியல் | 40.00 |
| பழந்தமிழும் கிளைமொழிகளும் | 65.00 |
| அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும் | 115.00 |
| தலித் அறம் | 45.00 |

**726 தமிழ் இசுலாம் உருவாக்கமும் திருக்குர்ஆன்**
**தமிழ் வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை** **45.00**